www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**போராசிரியர்**

அரசியல் தீர்வென்றும் ஆட்சிமுறை மாற்றமென்றும்
முரசறைந்து தேசமெல்லாம் முழங்கினார்~பேராசான்
வீரர்தான் சட்டத்தில்: விட்டிட்டார் அதையெல்லாம்:
போராசிரியர் பீ ரிஸ்!

~ஈழமோகம்

இதழ் 74 | ஜூன் 15 ~ ஜூன் 28, 1995 | விலை 7.00

# ஒரு இந்தியப் பொறி!



கடந்த வாரம் இந்திய அரசு தன் விசேட தூதுவர் ஊடாக இலங்கை அரசிடம் பிரபாகரனை கைது செய்து வழங்கும் (extrodition) விண்ணப்பத்தை கையளித்தது தெரிந்ததே.

இவ்விண்ணப்பம் தற்சமயம் இலங்கை அரசின் சட்டமா அதிபர் ஷப்லி அசீசினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அவர் அதை ஆராய்ந்த பிறகு அவ்விண்ணப்பம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும், அதைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர் சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதி பிரபாகரன் மீது பிடி ஆணையை வழங்குவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இத்தகைய கைதிகளை பிடித்து வழங்கும் ஒப்பந்தம் இல்லாவிட்டாலும் கூட பொதுநலவாய நாடுகளுக்கிடையில் தற்போது வழக்கிலுள்ள பிடித்தனுப்பும் சட்டமொன்றின் அடிப்படையிலேயே உயர்நீதிமன்றம் இந்த ஆணையை வழங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டம், நீதிமன்றம் போன்ற பல சம்பிரதாயங்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பினும், இறுதியில் இது இலங்கை அரசு எடுக்க வேண்டிய ஒரு அரசியல் தீர்மானமே என்பது வெளிப்படை. இத்தீர்மானத்தை எடுப்பதில் சந்திரிகா அரசாங்கமும் அதன் ஆலோசகர்களும் கருத்திற்கொள்ள வேண்டிய விடயம் ஒன்று உள்ளது.

அதாவது, பிரபாகரனை வேற்றுநாடு ஒன்றிடம் ஒப்படைக்க வேண்டிய ஒரு சாதாரணக் குற்றவாளியாக இலங்கைச் சட்டம் நிர்ணயிக்கும் பட்சத்தில், புலிகளுடன் பேச்சுவார்த்தை என்ற விஷயத்திற்கே இடமில்லாமற் போய்விடும். பிரபாகரன் உயிருடன் இருக்கும் வரை, அவர் இல்லாத காலத்தில் கூட விடுதலைப் புலிகள் இதே பலத்துடன் அவருடைய நினைவைப் போற்றுபவர்களாக இருக்கும்வரை, இந்திய மத்திய அரசு தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்கில் குறியாக இருக்கும்வரை, இலங்கை அரசு புலிகளுடன் பேசி ஒரு சமாதானத்தீர்வை ஏற்படுத்துவதென்பது நினைத்துப்பார்க்க முடியாத காரியமாகிவிடும்.

இந்தியாவின் நடவடிக்கை புலிகளின் தலைவரை இனி என்றுமே அரசியல் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு சாதாரண குற்றவாளியின் நிலைக்குத் தள்ளிவிட்டதாக பல சிங்கள இனவாதிகள் களிகூர்ந்து நோக்குகின்றனர். ஒரு பிரபல தென்னிலங்கைப் பத்திரிகை இதை வரவேற்று ஒரு ஆசிரியர் தலையங்கம் கூட வரைந்திருந்தது - இனி எந்தத் தென்னிலங்கை அரசும் புலிகளுடன் பேச முற்பட்டு சிங்கள இனத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என்ற தொனியில்!

அத்துடன் புலிகளுக்கெதிரான, தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான தம்முயற்சிக்கு இந்தியா மிகுந்த பக்கபலமாக உள்ளது என கடந்த ஓரிரு வருடங்களாகச் சிங்கள இனவாதிகளிடையே காணப்பட்டு வந்த எண்ணம், கைது செய்து அனுப்பும் கோரிக்கை வந்தகையோடு மிகவும் வலுப்பெற்று அவர்களுக்குப் புதுத்தெம்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா இவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைத்திருப்பது, இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான மூலமான

# பொ.ஐ.முவின் அரசியல் தீர்வு: கட்டெறும்பாய் தேய்ந்த கழுதை!

**வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையை தீர்க்கவென தம்மால் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பினரால் தொடர்ந்து கூறப்பட்டுவரும் தீர்வுத்திட்டம், வெளியிடப்படாமலேயே, பல்வேறு அறுவைச் சிகிச்சைகளுக்கு உள்ளாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 'தீர்வுத்திட்டம் ஒன்றை வெளியிடுவது அல்ல, அதை நடைமுறைப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்கி விட்டு வெளியிடுவதே முக்கியமானது என்பதால் நாம் அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளோம்.... பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை அற்ற ஒரு அரசாங்கம் என்ற முறையில், எல்லாக் கட்சிகளதும் 'அபிப்பிராயங்களை வென்றெடுத்த பின்னரே இது வெளியிடப்படும்' என்று அண்மையில் நிதியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அவர் குறிப்பிட்டுள்ள அக்கட்சிகளின் அபிப்பிராயங்களுக்கமைய அறுவைச் சிகிச்சைக்குள்ளாக்கப்பட்டுவரும் இத்தீர்வுத்திட்டம், வெளியிடப்படும் போது உயிரற்ற சடலமாகத்தான் வெளியிடப்படுமோ என்று அரசியல் அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.**


இது பற்றி மேலும் தெரியவருவதாவது, அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தம் தொடர்பான 'தீவிரமான வேலைகளில்' ஈடுபட்டிருக்கும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான ஆதரவை வென்றெடுக்கும் வகையில் தமிழ் முஸ்லீம் கட்சிகள், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் பௌத்த பீடாதிபதிகள் ஆகியோயோரை சந்தித்து தீர்வுத்திட்டம் சம்பந்தமாக பேசி வருவதாக கூறியுள்ளார். இப்பேச்சுக்களின் போது அரசியல் கட்சிகள், மதபீடங்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையில் செய்யப்படும் திருத்தங்கள் ஒவ்வொன்றும் தமிழ் முஸ்லீம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கத்தை கைவிட்டு, அபிப்பிராயம் சொல்பவர்களை திருப்திப்படுத்தும் நோக்கில் அமைந்துவிடுகின்றன என்று தெரியவருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் பார்த்த கிட்டத்தட்ட 50 பக்கங்கள் கொண்ட இனப்பிரச்சினை குறித்த ஆக்கபூர்வமான பல விடயங்கள் உள்ளடங்கிய தீர்வுத் திட்டம் இப்போது திருத்தப்பட்டுவிட்டதாக அறிவதாக அரசாங்க உயர்மட்டங்களுடன் தொடர்புள்ள கொழும்பு புத்திஜீவி ஒருவர் தெரிவித்தார்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக உருச்சிதைந்து கொண்டிருக்கும் இந்தத் தீர்வுத்திட்டம் பாராளுமன்றக் கட்சிகள் மற்றும் மதபீடங்களின் அனுசரணையுடன் வெளியிடப்படும் காலம் வரும் போது, அது இனப்பிரச்சினையை தீர்ப்பதற்குப் பதில் அதை இன்னும் தீவிரப்படுத்திவிடுமோ என்று அஞ்சுவதாகவும் அப்புத்திஜீவி மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் திட்டத்தை தாமதிப்பது தொடர்பாக அவர் கருத்து தெரிவித்த போது, அவ்வாறு தாமதிக்கிற ஒவ்வொரு கணமும் அரசாங்கம் தமிழ், முஸ்லீம் மக்களின் நம்பிக்கையை பிடித்துவைத்திருக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். ஒரு கால் வெளிவந்தால் அது வெறும் புஸ்வாணம் என்பது தெரிந்து போய்விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பேச ஜனாதிபதியைச் சந்தித்த தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியுடன் தாம் தீர்வுத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடியதாகவும், ஜனாதிபதி விரைவில் வெளியிடுவார் என்றும் அறிக்கை விடுத்து பல வாரங்களாகியும் அது இன்னமும் வெளியிடப்படவில்லை.

பீரிஸ் அவர்களிடம் உள்ள இந்தத் தீர்வுத்திட்டத்தை பார்த்து விட்டுத்தானா தமிழ்க்கட்சிகள் இவ்வாறு அறிக்கைவிடுத்தன? அதற்காகத் தானா இன்னமும் காத்திருக்கின்றன என்று கேட்கத் தோன்றுகிறது சரிநிகருக்கு.




## பதவி நீடிப்பு!

முன்பு அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் யூலை 15ம் திகதியுடன் ஜனாதிபதி பதவி முடிவுக்கு கொண்டுவரப்படமாட்டாது என்று இப்போது உறுதியாக தெரியவந்துள்ளது.

அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒன்றை நடைமுறைக்கும் கொண்டுவருவதன் மூலம் இந்த மாற்றம் செய்யப்படும் என்றும் அது எப்படியும் ஜூலை 15க்கு முன் நடாத்தப்படும் என்றும் ஜனாதிபதி பதவியேற்ற அன்று கூட தெரிவித்திருந்தார்.

ஆயினும், இன்றைய நிலைமைகளை காரணம் காட்டி இந்தத் திகதியை இன்னமும் சில காலத்திற்கு பின் போடுவதையே ஜனாதிபதி விரும்புகிறார் என்று தெரியவருகிறது. இதேவேளை, இவ்வாறான ஒரு பின்போடலை வலியுறுத்தும் விதத்திலான பௌத்த மத பீடாதிபதிகள், பத்திரிகைகளின் கருத்துக்களை திட்டமிட்டமுறையில் நடாத்துவதை உறுதிப்படுத்தும் விதத்தில் நிதியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் செயற்பட்டு வருகிறார். 'அக்லான் ஹவுஸ்' என்ற தனது வீட்டில் வைத்து பத்திரிகைகளையும் பீடாதிபதிகளையும் சந்தித்து இதற்கான வேலைகளை அவர் ஆற்றி வருவதாக பத்திரிகை செய்தி ஒன்று குறிப்பிடுகிறது.

இதேவேளை, இந்த ஜனாதிபதி முறை ஒழிப்பை பிற்போடும் நடவடிக்கையை பொ.ஐ.முவுக்குள் பிரதமர் சிறிமாவோ தொடர்ந்து எதிர்த்து வருகின்றார் என்றும் தெரியவருகிறது.

இவ்வாறு பரவலான அபிப்பிராயம் ஏற்படும் பட்சத்தில் அரசியல் சீர்திருத்தத்தை பின்போடுவது அரசுக்கு இலகுவாயிருக்கும் என்று அமைச்சர் கருதுகிறார் போலும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை: மீண்டும் எருமைக்கடா!

திருக்கோணமலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுக்கமடைந்துள்ளன. நகரத்தின் நுழைவாயிலில் பயணிகள் வெகு நுணுக்கமாகச் சோதனையிடப்படுகிறார்கள். நகருக்குள்ளேயும் ஒவ்வொரு காவலரணிலும் சோதனைக்குள்ளாக்கப் படுகிறார்கள். சைக்கிளோட்டிகள் இறக்கி நடக்கவைக்கப்படுகிறார்கள். பஸ், வேன் போன்ற பொது வாகனப் பயணிகளும் இறங்கி நடந்து செல்லுமாறு பணிக்கப்படுகிறார்கள்.

எவ்வளவுதான் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்ட போதிலும், விடுதலைப் புலிகளின் ஊடுருவல் நகருக்குள்ளோ நகரை அண்டிய பகுதிகளிலோ இல்லையென்று சொல்லிவிட முடியாது. கடந்த வாரம் சனசந்தடி நிறைந்த மாலைப் பொழுதினில் அன்புவழிபுரம் என்ற இடத்தில் நடுத்தெருவில் வைத்து காட்டிக் கொடுப்பவர் என்று கருதப்படும் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இக்கொலை ''கடையில் சிகரட் வாங்குவது போல'' இயல்பாக, பதற்றம் இன்றி நடத்தப்பட்டதோடு சுட்டவர்களும் அமைதியாகவே திரும்பிச் சென்றிருக்கின்றனர். பொலிஸார் நேரம் கழித்தே சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்றிருக்கிறார்கள். இதே போல் சிவபுரி என்ற இடத்தில் தம்பூரைச் சேர்ந்த குரு என அழைக்கப்படும் நாகலிங்கம் கணேசலிங்கம் (21) சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இவர் முன்னர் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்து பின்னர் விலகியிருந்தார்.

வெள்ளைவேன் ஓடித்திரிகிறது. 90ல் மக்கள் பயந்த அளவில் இல்லை. பிடிபடுபவர்கள் விசாரணைகளின் பின் துரிதகதியில் விடுவிக்கப்படுகிறார்கள். தேவையெனக் கருதப்படுமிடத்து தடுத்து வைக்கப்படுகிறார்கள். தொண்ணூறில் வெள்ளை வேனை யமனின் ''எருமைக்கடா''வாகப் பார்த்த மக்கள் இப்போது கொஞ்சம் குறைத்தே கணிக்கிறார்கள். இந்த முன்னேற்றத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை, நகராட்சி மன்ற தலைவர் சூரியமூர்த்தி த.வி.கூ. செயலதிபர் சம்பந்தன், மற்றும் அமைப்புக்களின் அரசியல் இயக்கங்கள் என்பன காரணமாக இருக்கலாம் எனக்கருதப்படுகின்றது.

எனினும் வெள்ளை வேனை நம்பி பிழைப்பு நடத்தும் தரகர்களும் இல்லாமல் இல்லை. வெள்ளை வேன் மூலம் பிடிபட்டவர்கள் விசாரணைகளின் பின் இயல்பாக விடுவிக்கப்படுகின்ற போதிலும் தாங்களே எடுத்து விடுவதாகப் பாவனை காட்டிப் பெருந்தொகையான பணத்தை இவர்கள் கறந்து விடுகிறார்கள். இவர்களிடம் ஏமாந்து பணம் கொடுப்பவர்களும் உண்டு. ஏமாற்றுக்கிறார்களே என்று மனதில் பொருமிக் கொண்டே பணம் கொடுக்க மறுத்தால் காட்டிக் கொடுப்பார்களே'' என்ற பயத்தில் பணம் கொடுப்பவர்களும் உண்டு.

யுத்த நிறுத்த காலத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் இங்கே வந்து மீன்பிடிப் படகுகள் வெளியிணைப்பு இயந்திரங்கள் மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை விலைக்கு வாங்கிக் கொண்டு சென்றனர். இவை அவர்களுடைய தொழில் தேவைகளுக்கானவையே. எனினும் திடீரென யுத்த நிறுத்தம் முறிவடைந்ததால் சில பொருட்கள் கொண்டு செல்லப்படாமல் தங்கள் உறவினர்கள் வீடுகளிலேயே விட்டுச் சென்றனர். இப்போது இவையெல்லாம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக கொள்முதல் செய்யப்பட்டதாகத் திரிக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்படுகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளின் போது பல மீன்பிடிப்படகுகள் படகுகளுக்கான சக்தி குறைந்த இயந்திரங்கள் மோட்டார் சைக்கிள்கள் என்பன பல நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. இவை யாழ்ப்பாணத்து மக்களால் வாங்கப்பட்டவை என்பது மட்டும் தான் காரணமாகும்.

பொருட்கள் கைப்பற்றப்பட்ட வீட்டிலிருக்கும் நபர்கள் கொண்டு செல்லப்பட்டுக் கடுமையான விசாரணைகளின் பின் விடுவிக்கப்படுகிறார்கள். பொருட்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களை படையினருக்குப் பின்னால் திரிபவர்கள் ''ஸ்டைலாக'' ஓடித் திரிவதைக் காணக்கூடியதாக விருக்கிறது.

கல்லராவைப் படுகொலையை அடுத்து அங்குள்ள மக்கள் வெளியேறியதோடு முகாமும் அகற்றப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது. அரபாத் நகர் சம்பவங்களின் பின் புல்மோட்டை மக்கள் புத்தளம் நோக்கிச் சென்றுவிட்டனர். புடைவைக் கட்டு மக்களும் கணிசமாக வெளியேறிவிட்டனராம்.

இந்த நிலையில் கடந்த வாரம் கும்புறுப்பிட்டி திரியாய்ப்பகுதிகளில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலின் விளைவாக திரியாய் கிராமத்தில் பதினெட்டு தமிழ்க் குடும்பங்கள் சிக்கிக் கொண்டு வெளியேற முடியாமல் தவிக்கின்றன. 32 பேர் இவ்வாறு சிக்கியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் முதியவர்களே. இவர்களுக்கு எந்த ஆபத்தும் இதுவரை இல்லாத போதும், போக்குவரத்து தடைப்படுவதால் பட்டினியை எதிர்நோக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இவர்களை வெளியேற்ற சில நிறுவனங்கள் முயன்ற போதும் பாதுகாப்புக் காரணங்களைக் கருதி போக்குவரத்து அனுமதியைப் பெற முடியாமல் இருக்கிறது. இச்செய்தி எழுதும் வரை அனுமதி வழங்கப்படவில்லை.

- வி-

# பிரபாவைக் கொல்ல றோ திட்டம்

-லங்காதீப

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை வடபகுதியில் படுகொலை செய்யும் பொருட்டு இந்திய ''றோ - (RAW)'' அமைப்பினால் விசேஷ பயிற்சி அளிக்கப்பட்ட அகதிகள் குழுவொன்றைத் தற்போது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நம்புவதாகவும் இது தொடர்பாக மிக அவதானமாக இருக்குமாறு பிரபாகரன் பொட்டு அம்மானின் உளவுப்பிரிவுக்கு அறிவித்துள்ளதாகவும் வடபகுதியிலிருந்து வெளிவரும் ஆங்கில செய்தித்தாளொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து திரும்பவும் வந்து புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் வாழும் அகதிகளைக் கடும் விசாரணைக்கு உட்படுத்துமாறு பிரபாகரன், பொட்டு அம்மானுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அறியப்படுகிறது.

வட கிழக்கில் புலிகள் இயக்கத்தின் அதிகாரம் நிலவும் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்கள் 100 பேரையும் அவ்வாறு சந்தேகத்தின் மீது புலிகள் இயக்கத்தினர் கைது செய்து, அவர்களை முகாம்களில் தடுத்து வைத்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் வடபகுதிப் பாதுகாப்புத் தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இரண்டாவது ஈழயுத்த முடிவின் பின் வடகிழக்குப் பகுதிகளுக்கு இந்தியாவிலிருந்து வந்துள்ள அனைத்து அகதிகளும் தமது இயக்கத்திற்கு உரிய கிளைகளில் பதிவு செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு பதியாத நபர்கள் தொடர்பாக விஷேடமாக விசாரித்து அறிவதற்காகக் குழுவொன்றை நியமிக்குமாறு பிரபாகரன் தமது இயக்கத்தின் தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பான அறிவித்தல்கள் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளதாக வடபகுதி தகவல் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளது என லங்காதீப தனது செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளது.

# போ! தொண்டா!

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலிலிருந்து வெளியேற்றக்கோரி சில நாட்களாக கட்சிக்குள் பெரும் ஆர்ப்பாட்டம் நிகழ்ந்து வருவது அறிந்ததே.

கடந்த யூன் 6ம் திகதி ஐ.தே.கவின் நிறைவேற்றுக்குழு கூட்டம் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் ஒரு அறையில் நடத்தப்பட்டது. இக்கூட்டம் நடத்தப்படுவதற்கு முதல் நாளே தொண்டாவை வெளியேற்றுவதற்காக ஏனைய பல ஐ.தே.க. உறுப்பினர்களை ஆதரவாக சேர்த்துக்கொண்டார் சுசில் முனசிங்க. பலரேது விருப்பமும் அதுவாகத் தான் இருக்கிறது எனவே நாளைய கூட்டத்தில் தொண்டமான் மீது நடவடிக்கை எடுப்பதற்கான பிரேரணையை இலகுவாக வென்றுவிடலாம் என்று நம்பியிருந்த சுசில் முனசிங்க பெரும் ஏமாற்றத்தை அடைந்தார்.

அக்கூட்டத்தில் தொண்டாவை தேசியப்பட்டியலிலிருந்து நீக்கக்கோரி கதைத்தோர் மிகச்சிலரே அக்கோரிக்கையை கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துவிட்டார்.

கொழும்பு மாநகர மேயர் கணேசலிங்கம் மற்றும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீது ஆகியோர் தொண்டாவுக்கு ஆதரவாகக் குரலெழுப்பினர்.

# போரம்மா!

ஓகஸ்ட் மாதம் தொடக்கம் வடக்கில் அரசாங்கம் ஆரம்பிக்கவிருக்கிற பாரிய யுத்த நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு செலவீனத்தை உயர்த்தியுள்ளதாக தெரியவருகிறது. இத்தீர்மானம் யூன் 7ம் திகதி நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. முன்னைய அரசாங்கங்களில் இத்தொகை 3.1% - 3.5% வரையிலான வீதமே பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. திடீரென்று 1% வீதத்தால் உயர்த்தப்பட்டதானது இதுவரை எந்த அரசாங்கமும் மேற்கொள்ளாத ஒரு விடயம் என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சென்ற அரசாங்கங்கள் பாதுகாப்பு நிதியாக 3.1% செலவிட்டதை பெரும் துரோகமாகவும், அநாவசியமான செலவுகள் என்றும் கண்டித்து பிரச்சாரம் செய்த பொ.ஐ.மு. தான் இன்று இவ்வாறான பெரிய தொகையை ஒதுக்க தீர்மானித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிரடி வழிப்பறி!

ஜூன் 1ம் திகதி விசேட அதிரடிப்படையினரால் (STF) பிடித்துச் செல்லப்பட்ட கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியைச் சேர்ந்த **நிக்கலஸ் ஜூட் ஜெகதீஸ்** எனும் இளைஞர் கடுமையான தாக்குதலின் பின் விடுவிக்கப்பட்டார்.

புறக்கோட்டை மக்கள் வங்கிக்குச் சென்றுவிட்டு முதலாம் குறுக்குத்தெரு வழியாக ஜூட் வந்து கொண்டிருந்த போது வெள்ளைநிற கார் ஒன்று வேகமாக வந்து அவரருகில் நிறுத்தப்பட்டது. அதிலிருந்து இறங்கிய சீருடை அணிந்த அதிரடிப்படையினர்.

''உனது பெயர் என்ன?''

''உனது ஊர் எங்கே?''

''புலிகளுக்கும் உனக்கும் என்ன தொடர்பு''

போன்ற கேள்விளை கேட்டதன் பின். ''காரில் ஏறு'' என்று அதட்டியிருக்கின்றனர். கொழும்பில் பிறந்து வளர்ந்த இவ்விளைஞரோ இந்த நடவடிக்கையால் பதட்டப்பட்ட நிலையில் அவர்களது மிரட்டலின் பயத்தினால் காரில் ஏறியிருக்கிறார். காரில் பின் இருக்கையில் இவ்விளைஞரை இருவருக்கு மத்தியில் இருத்திவிட்டு கார் சென்று கொண்டிருக்கும் போதே இரு படையினரும் அவரைக் கடுமையாக தாக்கியுள்ளனர். இடையிடை ''புலிகளுக்கும் உனக்கும் என்ன தொர்டர்பு?'' என்று கேட்டிருக்கின்றனர்.

பரிசோதிப்பதாக கூறி பாஸ்போட்டையும், பணப்பையையும் அவரிடமிருந்து எடுத்துவிட்டு தெகிவளை ராமகிருஷ்ண வீதியருகில் அவரை இறக்கிவிட்டுள்ளனர்.

''பணப்பை, பாஸ்போட் என்பவற்றை பரிசோதித்துவிட்டு அனுப்பி வைக்கிறோம்'' என்று கூறி அதிரடிப்படையினர் சென்றுவிட்டனர்.

கடும் தாக்குதலுக்குள்ளான அவ்விளைஞர் இப்போது வாயிலிருந்து இரத்தம் கக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளார். அவர் வங்கியிருந்து எடுத்துவந்த 7800 ரூபா பணமும் பையுடன் கொண்டுசெல்லப்பட்டுவிட்டதாக நிக்கலஸ் ஜூட் ஜெகதீஸ் சரிநிகருக்குத் தெரிவித்தார். காரின் இலக்கத்தை தான் கவனிக்கவில்லை என்று குறிப்பிட்ட இவர், இவர்களை அடையாளம் காட்ட தன்னால் முடியும் எனவும் தெரிவித்தார். எனினும் அச்சம் காரணமாக இது தொடர்பாக தான் பொலிசில் முறைப்பாடு செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.

# மிரட்டும் காடையர்!! முறைப்பாட்டை மறுக்கும் பொலீஸ்!

கொழும்பில் தெகிவளைக்கும் வெள்ளவத்தைக்கும் இடையில் அமைந்திருக்கின்ற ரஞ்சன விஜேரத்ன மாவத்தையில் பல தமிழர்கள் தொடர்ச்சியாக தாக்குதலுக்கும், மிரட்டலுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இப்பகுதியில் கடற்கரையோரம் காற்றுவாங்குவதற்காகவும், உடற்பயிற்சிக்காகவும் சென்று திரும்பும் தமிழர்களை அவ்வீதியைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் மிரட்டியும், அடித்தும், காசு பறித்தும் இம்சைப்படுத்தியும் வருவதாக, சரிநிகருக்கு கிடைக்கும் செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

யூன் 13ம் திகதி அவ்வீதியால் வந்த ஸ்ரீஸ்கந்தராஜா எனும் 21 வயது இளைஞர் ஒருவரும் இவ்வாறு மிரட்டலுக்குள்ளாகியுள்ளார். பொதுவாக இவ்வீதியால் வரும் இளைஞர்களை நோக்கி ,

''அடே தெமளா''

''இங்கே வா!''

''உனது பெயர் என்ன?''

''எங்கிருக்கிறாய்''

''நீ புலிதானே!''

''எங்கே? அய்டின்டிய காட்டு!''

''பர்சை காட்டு''

என்பன போன்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஸ்ரீஸ்கந்தராஜாவும் இம்மிரட்டலுக்கு உள்ளானபோது அதிலிருந்து தப்பி உண்மைநிலையை கரகம்பிட்டிய பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்வதற்கு போன இடத்தில் முறைப்பாடுகளை எழுதுகின்ற பொலிஸ்காரர் (இலக்கம் 22827) அம்முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி விரட்டியுள்ளதாகத் தெரிகிறது.

பல காலமாக நடந்துவரும் இந்நிகழ்ச்சி தென்னிலங்கையில் இனவன்முறையை ஊக்குவிக்கக்கூடிய சூழல் உருவானதன் பின் மேலும் மோசமாக நிலவி வருவதாக தெரியவருகிறது.

# மட்டு செஞ்சிலுவைச் சங்கம்: இன்னொரு ஊழல் தலைவர்

மட்டக்களப்பு செஞ்சிலுவைச்சங்கத்தின் மண்முனைப்பற்று பிரிவுக்கிளையின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக மிகவும் கவனயீனமாக செயற்படுவதாகவும் அதை அதன் மட்டக்களப்பு தலைமையகம் கண்டும் காணாத மாதிரி நடந்து கொள்வதும் இப்பகுதி மக்கள் அதன் தலைமை மீது ஒரு மிலேச்சத்தையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணியுள்ளது. இவ்விடயத்தை சரிநிகர் மூலமாவது வெளியுலகம் அறிந்து கொள்ள வேண்டுமென இப்பகுதி மக்கள் பலரும் மிகவும் ஆவலுடன் இருப்பதையும் காணமுடிகிறது.

மண்முனைப்பற்று நிலையத் தலைவர் அதி மேதகு த.இராஜேஸ்வரன் அவர்கள் தன்னுடைய சுயநல நோக்கங்களுக்காகவும் தன்னைச்சுற்றி வால்பிடிக்கும் ஒரு சிலரின் தேவைகளுக்கும் மாத்திரமே இச்செஞ்சிலுவைச்சங்கத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெறுகின்றன.

அண்மையில் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தலைமைக்காரியாலயத்தில் வெட்டிக் கழித்து அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் அனைத்தும் உண்மையாகவே பாதிக்கப்பட்ட எந்த மக்களையும் சென்றடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொருட்கள் அனைத்தும் தலைவரின் உறவினர்களுக்கும் ஆரையம்பதி பிரதேச சபைத்தலைவர் றொபேட் (நவரெத்தினராஜா) டின் உறவினர்களுக்குமே வழங்கப்பட்டது. இதில் முக்கிய விடயமென்னவென்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இப்படியான உணவுப் பொருட்கள் வந்து கொடுக்கப்பட்ட விடயமே தெரியாதென்பதுதான்!

அதுமட்டுமன்றி வன்செயலால் பாதிக்கப்பட்ட லோன்டரி, சலூன் போன்ற கடைகளை நடாத்தும் வறிய மக்களுக்கு உதவுவதற்காக தலைமைக் காரியாலயத்திலிருந்து கொடுக்கப்பட்ட கதிரைகள் மேசைகள் உட்பட இன்னும் பல பெறுமதியான பொருட்கள் உரியவர்களுக்கு கொடுக்கப்படாமல் ஆரையம்பதி செங்குந்தர் வீதியிலுள்ள தலைவரின் உறவினர் வீட்டில் மிகவும் இரகசியமான முறையில் வைக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

இவ்வீட்டில் தான் ஒரு வருடத்துக்கு முன்னர் ரியூசனுக்கு போன மாணவிகள் சிலருக்கு போதையூட்டிய, குளிர்பானம் கொடுத்து நீலப்படம் (Blue film) தயாரிக்கப்பட்டது. இப்படக் கெசற் வீடியோ கிளப்பிற்கு கசற்வாங்க வந்த ரெலோ இயக்கதினரிடம் தவறுதலாக கொடுக்கப்பட்டதை அடுத்து இவ்விடயம் வெளியே தெரியவந்ததும், இதன்பின் இவ் வீட்டுக்காரர் தலைமறைவாகி. பின்னர் ரெலோவுக்கு ஒரு லட்சம் கொடுத்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டார் என்பதுவும் இவ்விடயம் மட்டக்களப்பு எங்கனும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது என்பதுவும் குறிப்பிடத்தக்கது!.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முகாம்களைத் தாக்கத் திணறும் இராணுவம்!




ஒருபுறம் வடக்கில் மிகப்பெரிய தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகிவரும் அரசபடைத்தலைமை மறுபுறம் அங்குள்ள முகாம்களை எவ்வாறு காப்பாற்றுவது என்ற சிக்கலை ஆராய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறது.

வடக்கில் உள்ள முகாம்களுள் முதலாவதாகப் பூநகரியே பிரச்சினைக்குரியதாகியுள்ளது. இரண்டாவது ஆனையிறவு.

இவை இரண்டுக்கும் இப்போது தோன்றியுள்ள பிரச்சினைகளை ஆராய்வதானால் நாம் இரணடாம் ஈழப்போரில் இவற்றின் கேந்திரப் பரிமாணத்தினை (Strategic dimension) முதலில் பார்க்க வேண்டும்.

1990 இல் சண்டை தொடங்கிய சில மாதங்களிலேயே புலிகள் தாம் எதிர்பார்த்ததை விட மிகப்பெரிய அளவிலான போர்த்திறனுடனும், பலத்துடனும் இருக்கிறார்கள் என உணர்ந்து கொண்டனர் இலங்கையின் படைத்தளபதிகளும் அவர்களுக்கு மிகுந்த பக்கபலமாக நின்ற அன்றைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் இரஞ்சன் விஜேரத்தினாவும்.

அது ஜே.வி.பிஐ கொன்று குவித்து நசித்துவிட்ட வெற்றிக்களிப்பில் விஜேரத்தினா இருந்த காலம். இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய கையோடு பாராளுமன்றத்தில் அவர் கூறினார். ''நாங்கள் கொடுக்கும் அடியில் புலிகளின் குழந்தைகள் படை (Baby Brigade) காற்சட்டை ஈரமாகப் பயந்து ஓடிவிடுவார்கள்'' என்று. அவர் அதைக் கூறிய காலத்திலிருந்து இன்றுவரை அரசபடைகளில் இருந்து 24,000 வீரர்கள் (?) ஓடிவிட்டார்கள் என்பது (போன வார ரொய்ட்டர் செய்தி) வேறு விடயம்.

மாங்குளத்தின் வீழ்ச்சி, மற்றும் ஆனையிறவு மீது புலிகள் மேற்கொண்ட மரபுவழித் தன்மை கொண்ட தாக்குதல் என்பவற்றை ஆராய்ந்த இராணுவத் தலைமைப்பீடம் பின்வரும் முடிவிற்கு வந்ததது - புலிகள் கொண்டுள்ள இராணுவபலத்தின் வளங்களும், திட்டமிடலும், தளபாட உற்பத்திகளும் நடைபெறுவது குடாநாட்டில். அங்கிருந்துதான் அவர்கள் தமது படைகளை பல்வேறு பிரதேசங்களை நோக்கி நகர்த்தி பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளுகிறார்கள். யாழ்ப்பாணத்தின் ஓரளவு கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரம் புலிகளின் மரபுவழி இராணுவ வளர்ச்சிக்கும், போர்த்திறனுக்கும் அடித்தளமாக உள்ளது. உதாரணமாக, மாங்குளம், முல்லைத்தீவு, சிலாவத்துறை ஆகிய தாக்குதல்களில் புலிகள் பயன்படுத்திய பசீலன் எறிகணை போன்றவற்றுக்குத் தேவையான தொழில் நுட்பமும் உற்பத்தித்திறனும், குடாநாட்டில் உள்ளது போன்ற உலோக உருவாக்கத் தொழில் ( Metal fabrication industry) சற்றேனும் வளர்ச்சி பெற்று இயங்கும் ஒரு பொருளாதாரத்தின் காரணமாகவும், அங்கு பாரம்பரியமாகக் காணப்படும் எந்திரீய மூளைத்திறன் காரணமுமாகவே சாத்தியமாகின்றன. என இவ்வாறான பல விடயங்களின் அடிப்படையில் புலிகளின் உயிர்மையம் யாழ்ப்பாணமே என திட்டம் பண்ணிக் கொண்டது இராணுவத்தலைமைப்பீடம். எனவே யாழ்ப்பாணக் குடாநாடு என்ற தலையை அடித்தால் புலிகள் அமைப்பு என்னும் உடல் இற்று விழுந்துவிடும் என்பது திட்டமிடல் தளபதிகளின் முடிபு. தலையை அடித்து நசுக்குவதானால் கழுத்தை முதலில் இறுக்கினால் காரியம் இலகுவாகும் என்பது அவர்களின் கணக்கு. இங்ஙனம் இறுக்குவதற்கு (அந்நேரம் இத்தந்திரோபாயத்தை விளக்க கழுத்தை நெரித்தல் என அர்த்தப்படும் Strangulation என்ற ஆங்கிலப்பதமே பயன்படுத்தப்பட்டது) அப்போது குடாநாட்டிற்கும் வன்னிக்கும் தொடர்புப் பாதைகளாக இருந்த பூநகரி, கொம்படி - ஊரியான், சுண்டிக்குளம் ஆகியவற்றை துண்டிப்பது எனத்தீர்மானிக்கப்பட்டது.

எனவே 91 இன் பிற்கூற்றில் வலம்புரி என்னும் இராணுவ நடவடிக்கையூடாகப் பூநகரியும், பலவேகய இரண்டு என்ற நடவடிக்கையூடாக ஆனையிறவுக்குக் கிழக்காக இருந்த கொம்படி - ஊரியான் போன்ற அனைத்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டன. இத்துண்டிப்பின் ஊடாக யாழ்மக்களின் வெளியுலகத் தொடர்பு துண்டிக்கப்பட்டு அவர்கள் அதன் காரணமாகப் புலிகள் மீது அதிருப்தியுறுவார்கள், அத்துடன் அரசின் ஆதிக்க நிலையையும் உணர்வார்கள் - யாழ்படையெடுப்பு நடைபெறுகையில் மக்களை தன்பக்கம் திருப்ப இதுவும் ஒரு ஏதுவாக இருக்கும் என்பது இராணுவத்தின் நினைப்பு. இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். வலம்புரி இராணுவ நடவடிக்கையானது பூநகரிப் பாதையைத்துண்டித்து ஒரு இராணுவ முகாமை அவ்விடம் அமைக்கும் பிரதானமான நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பலவேகய - 2 (ஆனையிறவு விழாமல் தடுக்க நடைபெற்ற தரையிறக்கமும் படைநகர்வும் பலவேகய-1 என அழைக்கப்பட்டது) ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும். அதாவது ஆனையிறவைக் காப்பாற்றவும், தக்கவைத்துக் கொள்ளவும் இன்றியமையாத கடல்வழித் தொடர்பை வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு கடற்கரையுடன் சேர்ந்த ஒரு முகாமை நிறுவி ஏற்படுத்திய அதே வேளை, அக்கடல் வழித்தொடர்பிற்கான பாதுகாப்பு அரண்தொடர் குடாநாடு - வன்னி தொடர்புப் பாதைகளை துண்டிப்பதாகவும் பலவேகய - 2 இன் இரட்டைக் குறிக்கோள் அமைந்தது. அத்துடன் இந்நடவடிக்கையின் இன்னொரு பிரதான அம்சமாக ஆனையிறவுக்கு வடக்காகவும், வடகிழக்காகவும் இயக்கச்சிச்சந்தி வரையிலான ஒரு பிரதேசமும் கைப்பற்றப்பட்டது. இதன் நோக்கம், ஆனையிறவு - வெற்றிலைக்கேணி தளத்தில் உள்ள ஆயிரக்கணக்கான படைவீரருக்கு நற்குடிநீர் வருடம் முழுவதும் கிடைக்க வழிவகை செய்வதாகும். நற்குடிநீர் போதிய அளவு பெறக்கூடிய வசதி இயக்கச்சிப் பக்கமே உள்ளது. ஆனையிறவு - வெற்றிலைக்கேணிக்கு இடைப்பட்ட பகுதி வருடத்தின் சில காலங்களில் உப்புநீரே பெருகிடும் நீரூற்றுக்களைக் கொண்டதாகும்.

இவ்வாறு வலம்புரி, பலவேகய - 2 ஆகியன முடிவுற்று சில மாதங்களிலேயே அவற்றின் நோக்கம் நிறைவேறிடவில்லை என இராணுவத்திற்குப் புலனாகிற்று. புலிகள் கிளாலிப்பாதையைத் திறந்துவிட்டனர். இதன்பின்னர், பூநகரியை அண்டிய ஞானிமடம் - நாகதேவன்துறை பகுதியில் நிறுவப்பட்ட கடற்படைமுகாம் இவ்வழியை நசக்கிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் தான் கொப்பேகடுவ தலைமையில் குடாநாட்டினுள் 92 பிற்பகுதியில் ஒரு பாரிய படையெடுப்பு நடத்துவதற்கான தயாரிப்புக்கள் நடைபெறலாயின. (அராலித்துறை - பொம்மைவெளியூடாகவே யாழ்நகரை நோக்கிய பிரதான படை நகர்வு திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.)

இந்நேரத்தில்தான் இப்படையெடுப்பை வழி நடத்தவிருந்த கொப்பேகடுவ, விமலரத்தின ஆகியோர் இறந்தனர். திட்டம் பின்போடப்பட்டது. அத்துடன் அதன் பின்வந்த மாதங்களில் கடற்புலிகள் கிளாலிப்பாதையை கடற்படையினர் மூடிவிட முடியாத ஒரு நிலையைத் தோற்றுவித்தனர். பின்னர், 93இன் பிற்பகுதியில் கிளாலித்துறையைக் கைப்பற்றி குடாநாட்டிற்கும், வன்னிக்கும் இடையிலான கடைசிப் பாதையையும் மூடிவிடலாம் எனும் நோக்கில் ஆனையிறவிலிருந்து யாழ்தேவி படையெடுப்பு நடைபெற்றது. அதுவும் கடுந்தோல்வி கண்டது. நவம்பர் 93 இல் நடைபெற்ற தவளை இராணுவ நடவடிக்கையின் பின் கிளாலி - நல்லூர் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டில் அமைந்த ஒரு பாதையாயிற்று.

இந்நிலையில் இராணுவத்தலைமையில் ஒரு சிலர், பூநகரி, ஆனையிறவு இனிப்பிரயோசனமில்லை, ஏனெனில் அவை எந்த 'கழுத்து நெரிக்கும்' தந்திரோபாயத்திற்காக நிறுவப்பட்டனவோ அந்த நோக்கம் புலிகளால் முறியடிக்கப்பட்டுவிட்டது. எனவே அவற்றை எடுத்துவிட்டு அங்கு வெறுமனே முடங்கிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான படைவீரர்களை யாழினுள் புகுந்து புலிகளை அடிக்கப் பயன்படுத்தலாம் எனக்கருத்துக் கொள்ளலாயினர். அவர்களது கருத்து கேட்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தினுள் சென்று வசதி ஏற்படும்போது புலிகளை அடித்து நொருக்குவதானால் பூநகரி மற்றும் ஆனையிறவு - வெற்றிலைக்கேணித் தளங்கள் இன்றியமையா என்பதே பலரின் கருத்தாக இருந்தது. இன்றும் இருந்து வருகிறது.

**டி.சிவராம்**

யாழ்ப்பாணத்தின் கழுத்தைநெரித்தல், புலிகளைப்பலவீனப்படுத்துவதற்கு இன்றியமையாத வழி என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகிவிட்டது. சந்திரிகாவும் அதே கருத்தில் இருக்கிறார் என்பதும் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வெளியிடப்பட்டது. பூநகரியை திறந்துவிடும் கோரிக்கையில் புலிகள் மிகத்தீவிரம் காட்டுகிறார்கள் என்பது, தமது 'கழுத்து நெரிக்கும்' தந்திரோபாயம் வேலை செய்துதானிருக்கிறது, எதிர்பார்த்தது போல புலிகளுக்கு கடும் நெருக்கடியை கொடுத்துத்தான் இருக்கிறது என்று நினைப்பை ஏற்படுத்திற்று இராணுவத் தளபதிகளுக்கு. இதனால் அவர்கள் பூநகரியையும், ஆனையிறவு - வெற்றிலைக் கேணித் தளத்தையும் எவ்வழிப்பட்டாவது பேணுவது எனத்தீர்மானம் பண்ணிவிட்டனர். அதை தற்போதைய அரசும் முற்று முழுதாக ஏற்றுக்கொள்கிறது. இங்குதான் உள்ளது சிக்கலே!

அதாவது, குடாநாட்டுப் படையெடுப்பை நடத்துவதானால் கழுத்து நெரிக்கும் தந்திரோபாயம் இருந்தேயாக வேண்டும். (மேலே நான் குறிப்பிட்ட, அவர்கள் நம்பும் காரணங்களின் அடிப்படையில்)

ஆனால் புலிகள் விமான எதிர்ப்புச் சுடுதிறன் பெற்றதனாலும் கடற்புலிகள் இரு கடற்பீரங்கிப் படகுகளை திருமலையில் மூழ்கடித்து, மற்றும் இரண்டைச் சேதமாக்கியதனாலும் ஆனையிறவு, பூநகரி முகாம்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது. இதிலும் பூநகரியின் கடற்தொடர்பு கடற்புலிகள் ஆதிக்கம் செலுத்தும் யாழ் கடல்நீரேரியை அண்டியுள்ளதாலும், அம்முகாமிற்கு நல்ல தரையிறங்குதுறை வசதிகள் இல்லாமையாலும், வருடத்தின் இப்பகுதியில் கடலின்தன்மை கடற்படைப்படகுகளுக்குச் சாதகமில்லாதிருப்பதாலும், அம்முகாம் கூடிய அளவு வான்வழித் தொடர்பையே பெரிதும் எதிர்பார்த்துள்ளது. ஆனால் புலிகள் இரு அவ்ரோ விமானங்களை சுட்டு வீழ்த்திய பின்னர் இற்றைவரை ஆக ஐந்து தடவைகளே அங்கு உலங்கு வானூர்தி மூலம் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன. முன்னர் ஒரு நாளுக்கு இரண்டு தடவையாவது உலங்கு வானூர்தி சென்று வந்த இடம்தான் பூநகரி. எனவே இன்று முகாமில் கடல்வழியாக ஏலவே கொண்டு செல்லப்பட்ட உலர் உணவுவகைகளே - அரிசி, சீனி, பருப்பு, கருவாடு - உள. மரக்கறி, பழவகை, இறைச்சி ஆகியன இல்லை. வெங்காயம், கருவேப்பிலை இல்லாமல் உணவு ஆக்க வேண்டிய நிலை. இத்துடன் சொந்தபந்தங்களிடமிருந்து வரும் கடிதங்கள் கிடைக்காததால் கவலை, அங்குள்ள படையினருக்கு.

இவற்றிற்கு மேலாக காயம்பட்டவர்களை, தாமதமின்றி உலங்குவானூர்தி மூலம் மருத்துவ உதவி பெற அனுப்பிட முடியாத சூழ்நிலைதான் அங்குள்ள படைவீரர்களுக்குக்கடும் மனவீழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய காரணியாக உள்ளது. ஆனையிறவில் புலிகளுடன் நடைபெற்ற மோதலில் காயமடைந்த ஒரு இளநிலைப் படையதிகாரி உலங்குவானூர்தி உடன் வரமுடியாத காரணத்தால், மரணமான விடயம் தெரிந்ததே.

தம்முன்னணி அரண்களுக்கு அப்பால் ஒரு தாக்குதலுக்கான தயாரிப்புக்களை புலிகள் செய்து வருவதாகக்கருதும் பூநகரிப்படைவீரர்கள், அப்படிப் புலிகள் ஒரு பெரிய அடி அடித்தால் தம்மத்தியில் காயம்படப்போகும் நூற்றுக்கணக்கானவர்களின் கதி என்ன என நினைத்து கலங்கிடும் நிலையில் உள்ளனர்.

ஆனையிறவிலும் இது போன்ற சிக்கல்கள் காணப்படுகின்றன.

இதன் சுருக்கம் என்னவெனில் இப்படியாக நாட்கள் நகர, நகர படைவீரரின் போரிடும் உளத்திடநிலை வீழ்ச்சி அடைந்து சரணாகதி நிலைக்குச் சென்றுவிடும் என்பதாகும். இது முற்றுகை உத்தியின் (Siege strategy) ஒரு அடிப்படை.

அவ்ரோ விமானங்களை சுட்டுவீழ்த்தி தன் விமான எதிர்ப்புத்திறனை அரசிற்கு வெளிப்படுத்திய பின் இவ்வளவு நாளும் புலி தாக்காமல் காத்திருப்பது வடபகுதி முகாம்களிலுள்ள படையினரின் போரிடும் உளத்திடநிலையைச் சிதைப்பதற்கே என கொழும்பிலுள்ள மேற்கத்திய தூதரக வட்டாரங்கள் சில கருதுகின்றன.

இந்த நிலையில் ஒரு நெருக்கடி எழுந்தால் இம்முகாம்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது பற்றி இன்னும் திட்டவட்டமான வழிமுறை ( Contingency plan) இராணுவத் தலைமைப்பீடத்திடம் இருப்பதாகத் தென்படவில்லை. பின்வரும் இரண்டு விடயங்களை இராணுவத் தலைமைப்பீடம் இந்த முகாம்களின் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நம்பி இருப்பதாகத் தெரிகிறது.

ஒன்று: இரண்டும் பிரிகேட் (Brigade) அளவிலானவை. அதாவது கவசவாகன, பீரங்கி அணிகளுடன் சேர்ந்து பூநகரியில் நாலாயிரம் அளவிலும், ஆனையிறவில் 5 - 6 ஆயிரம் அளவிலும் படைகள் உண்டு. எனவே ஏறத்தாழ பத்தாயிரம் போராளிகளையே தம் மொத்தப்பலமாக கொண்ட புலிகள் பூநகரியிலும் சரி, ஆனையிறவிலும் சரி முழுவெற்றி பெற முடியாது என்பது.

இரண்டு: பூநகரியை நவம்பர் 93 இல் புலிகள் தாக்கிய பின் சகல வடபகுதிமுகாம்களின் அரண்நிலைகளும், தொடர்களும் நன்றாக மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக முன்னணி அரண் பகுதிகளில் (Forward Defence Localities) வேவுப் புலிகள் சரியான தகவல் சேகரிக்க முடியாதபடி திடீர் திடீர் மாற்றங்களும், ஏய்ப்பு முறைகளும், போலிகளும் (Decption and Decoys) நடைமுறையில் உள்ளன. அத்துடன் அரண் இடைவெளிகள் புலி அணிகள் புகாதபடி சீர்செய்யப்பட்டுள்ளன. அடிவிழும்போது பின் மாற்றிட நிலைகள் (Fall back positions) உறுதி செய்யப்பட்டுள்ளன. இப்படியாக பூநகரியில் வாங்கிய அடிமூலம் கற்ற பாடங்களின் அடிப்படையில் பல பாதுகாவற் திருத்தங்கள் இரு முகா்ம்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பது.

இதில் முதலாவது பிரச்சினை என்னவெனில்; ஒரு குறிப்பிட்ட தொகுதிப்படையினரின் அளவு எத்துணை பெரிதாயினும் வெற்றி தோல்வியை இறுதியில் தீர்மானிப்பது அவர்களது போரிடும் உளத்திட நிலையேயாகும். போரியல் விஞ்ஞானமும், போர் வரலாறும் கற்றோர் இதை ஆமோதிப்பர்.

இரண்டாவது: பாதுகாப்பு அரண் தொகுதிகள், நிலைகள், மற்றும் தந்திரங்கள் மாற்று உபாயங்கள் என்பன என்னதான் மிகச்சிறப்பாகவும் நுட்பமாகவும் இருந்தாலும் -ஒரு படையின் இருப்பு அடிப்படையில் அதன் தொடர்பு - வழங்கற் திறனிலேயே தங்கியுள்ளது. உண்ண உணவில்லாமலும், சுட தோட்டாக்கள் இல்லாமலும் ஒரு படை போரிடமுடியாது.

இன்றுள்ள நிலையில் புலிகள் பூநகரிமுகாம் கடலுடன் தொடர்புபடும் பகுதியான கோமார் (Comar point) என்ற இடத்தையும் அதை அண்டியுள்ள கரையையும் கைப்பற்றி, தம் விமான எதிர்ப்பு அணிகளை முகாமை அண்டி நிலைகொள்ளவிட்டால் என்னாகும் என்பதுதான் இராணுவத்தலைமைப்பீடத்தின் பிரச்சினை. இதில் முக்கிய சிக்கல் என்னவெனில் முகாமை சென்ற தடவை போல் காப்பாற்றுவதற்கான தரையிறக்க நடவடிக்கைக்கு பாதுகாப்பு வழங்கக் கரையை நோக்கிய செறிந்த பீரங்கித் தாக்குதலை ( Barrage) மேற்கொள்ள இதுகாறும் பயன்படுத்தப்பட்ட பீரங்கிப்படகுகள் நாலு இல்லை. எஞ்சியிருப்பது இரண்டு. இரண்டையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்திற்கு அனுப்ப முடியாது.

ஆனையிறவில் மேலதிக பிரச்சினை ஒன்றுள்ளது. வெற்றிலைக்கேணி அரண்தொகுதியை புலிகள் அடித்தால் கடற்தொடர்பு துண்டிக்கப்படுவது மட்டுமல்ல, அவர்கள் முகாமின் வடக்கு - வடகிழக்குப் புறமாக இயக்கச்சிப்பகுதி அரண் தொகுதிகளை அடித்தால் ஆனையிறவிலுள்ள ஆயிரக்கணக்கான படையினருக்கு குடிநீர் தட்டுப்பாடு கூடத்தோன்றலாம்.

இந்தநிலை இறுகி, ஒரு மாபெரும் நெருக்கடி தோன்றுமுன்னர் தாக்குவதே மிகச்சிறந்த தற்காப்புமுறை Offense is the best form of defence) என்பதற்கிணங்க குடாநாட்டைத் தாக்க நினைக்கிறது அரசு. தான் கொள்வனவு செய்யவுள்ள பீரங்கிப்படகுகள், உலங்குவானூர்திகள், கவச வாகனங்கள் யாவும் வந்து சேரும்வரை புலிகள் பூநகரியிலும் . ஆனையிறவிலும் கைவைக்கமாட்டார்கள் என நமபுவதைத தவிர அரசுக்கு இன்று வேறு வழியில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'புலிகளின் அரசியல் வேறு தமிழ் மக்களின் நலன் வேறு!'

## -மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள்



பல்வேறு சக்திகளினதும், குறிப்பாக அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்களையிட்டு தொடர்ச்சியாக கேள்விக்குட்படுத்தி வந்தவர்கள் என்ற வகையில் தற்போதைய நிலைமைகள் பற்றி சில அம்சங்களை தொட்டுக்காட்ட விரும்புகின்றோம்.

விடுதலைப்புலிகள், அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை முறியடித்தவிதமும், மீளப்போரை ஆரம்பித்த முறையும் இந்நாட்டுமக்களினதோ, அல்லது குறிப்பாக தமிழ் மக்களின் நலனிற்கோ எவ்வகையிலும் உகந்ததொன்றல்ல. அம்முடிவுக்காக விடுதலைப் புலிகள் முன்வைக்கும் பிரதான காரணம் தான் வைத்த கோரிக்கைகளுக்கு அரசாங்கம் சாதகமான முறையில் உற்சாகத்துடன் செயற்படாததாகும். இவற்றுள் சில கோரிக்கைகள் இராணுவத்தன்மை கொண்டதாகவும், கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் அவை அரசினால் இலகுவாக ஏற்றுக் கொள்ளக்கூடியவைகள்ாகவும் இருக்கவில்லை.

எனவே இத்தருணத்தில் விடுதலைப் புலிகளின் அரசியலுக்கும், தமிழ் மக்களின் நலனிற்கும் இடையில் ஓர் தெளிவான வேறுபாட்டைக் காண்பது அவசியமானதாகும்.

பின்னையவரின் நலன் அரசியல் ரீதியாக கையாளப்படவேண்டியதாகும். விடுதலைப்புலிகளின் வெறும் உணர்ச்சியூட்டலினூடான, பகுத்தறிவிற்குட்படாத செயற்பாடுகளைப் புரிந்து கொள்வதினூடாகவே, அதன் இயக்கப்போக்கை விளங்கிக் கொள்ள முடியும். கடந்தகால மிலேச்சத்தனமான அரசியல் கொலைகளின் பின்னணியில் உருவாகும் பீதியும், தொடர்ச்சியான அழிவுப் போக்கும் நிர்ணயிக்கும் அவாகளின் ஒவ்வொரு செயற்பாட்டையும் தனித்தனியே எடுத்துப் பகுத்தறிவுரீதியாக விளக்குவது கடினமானதாகும். இவர்களின் தொடர்ச்சியான் இச்செயற்பாடுகள் தமிழ் சமூகத்திற்கு பாரிய அழிவுகளையும், தற்கொலைக்கொப்பான நிலைமையையுமே உருவாக்கியுள்ளது.

### *புலிகளின் முதலைக்கண்ணீர்*

தமிழ் மக்களின் நாளாந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணல் வேண்டும் என விடுதலைப்புலிகள் முதலைக்கண்ணீர் வடித்தபோதும், அவர்களின் நலனைத் தொடர்ச்சியாக உதாசீனப்படுத்தி வந்ததுடன், மக்களை தமது அழிவுரீதியா்ன அரசியலுக்கான பகடைக் காய்களாகவே பாவித்து வருகின்றனர் என்பது தெளிவான ஒன்றாகும். பெரும்பான்மையான மக்கள் அமைதியை வேண்டிநிற்கும் வேளையில் ஓர் போரை அவர்கள் மீது திணிப்பது விடுதலைப்புலிகளின் அரசியலின் உள்ளார்ந்த அழிவுத்தன்மையை வெளிக்கொணருகின்றது.

**அதனுடைய மனிதாபிமானத்தை இழக்கச் செய்யும் அரசியலின் பின்னணியின் தொடர்ச்சியான கொடுமைகளை மறைப்பதற்கு புனித இயக்கம், தியாகம் என்னும் வெற்றுக்கோஷங்களைப் பயன்படுத்துகின்றது. இவ்வடிப்படையில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளை தனிநபர் வழிபாட்டுத் தலைமைக்குள் சிக்கவைத்து, அவநம்பிக்கையும் பாதுகாப்பின்மையுமான ஒரு சூழலை உருவாக்கி, மரணத்தில் மாத்திரமே அவர்களின் வாழ்விற்கு இன்று அர்த்தம் கொடுக்கப்படுகின்றது.**

இந்நிலையில் இவ்வியக்கமானது தமது தலைமையின் கீழ் உயிரை அர்ப்பணித்தவர்களின் வாழ்விற்கு பதில் சொல்ல வேண்டியவர்களாகவும், ஈழத்திற்காகப் போராடி மடிவதைவிட வேறுவழியில்லை எனச் சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட பல போராளிகளைக் கொண்டதாகவும் இன்று காணப்படுகின்றது. இதன் காரணமாக இன்று வாழ்கின்ற மக்களினதோ தனது போராளிகளினதோ அல்லது எதிர்கால சந்ததியினரதோ நலனின் அடிப்படையில் சிந்திக்கும் ஆற்றலை இழந்தநிலையில், அவர்களைத் தமது வேள்வியில் அர்ப்பணிக்கும் பலிக்கடாக்களாகவே பார்க்கின்றனர். எனவே, எவ்விதமான கூச்சமுமில்லாமல் தமது இலக்கை அடைவது எனும் போர்வையில் சகல கீழ்த்தரமான வழிமுறைகளையும் கையாள விடுதலைப்புலிகள் இயக்கம் தயங்காது. ஆனால் உள்நாட்டிலோ, பிராந்திய மட்டத்திலோ அல்லது சர்வதேச சூழலிலோ தன்னை ஸ்திரப்படுத்துவதற்கு மிகவும் கடினமானதான சூழலொன்றை தனது நெறியற்ற வழிமுறைகளால் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்நிலையில் எத்தகைய அரசியல் முன்னெடுப்புகளும், அவர்களை மக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய நிலைக்கு தள்ளமுயலும் போது விடுதலைப்புலிகள் வன்முறையை கட்டவிழ்த்து விடுவதுவழக்கமாகவுள்ளது.

ஆனால், கவலைக்கிடமான விடயம் என்னவெனில், பல்வேறு சந்தர்ப்பவாத சக்திகள் விடுதலைப்புலிகளினது செயற்பாடுகளை நியாயப்படுத்தவும் அதனை தமிழ்மக்களினது நலனின் அடிப்படையில் எழுகின்ற பொதுமையான சமூக உணர்வுகளின் வெளிப்பாடாகவும் காட்ட முயல்கின்றனர். இது மிகவும் குரூரமானதும், நியாயமற்றதும் கபடத்தனமுமான செயலாகும்.

சாதாரண தமிழ்ப்பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து பாதுகாப்பாக திரும்பி வருவார்களா இல்லையேல் விடுதலைப்புலிகளின் வலையில் அகப்பட்டுக் கண்காணாத இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விடுவார்களா என ஏங்குவது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அவ்வாறு பிள்ளைகள் இருக்குமிடத்தை அறிந்து தேடிச் செல்லும் போது அப்பெற்றோர்களை துரோகிகளாக மாறவேண்டாம் என்னும் பாணியில் மிரட்டிப் பீதிக்குட்படுத்தி மௌனிகளாக்குவது சகலருமறிந்ததே. விடுதலைப்புலிகள் தமிழ் சமுதாயத்தை எவ்வித ஸ்தாபனரீதியான எதிர்ப்புக்களையும் காட்ட முடியாத ஓர் வலுவிழந்த சுயவுணர்வில்லாத சமுதாயமாக மாற்றியுள்ளனர். மத ஸ்தானங்களினதும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஸ்தாபனங்களினதும் உயர்பகுதியினரில் பலரும் இச்சக்தியுடன் இணைந்து தமது குறுகிய நலனிற்காக அதனை அங்கீகரிப்பிற்குள்ளாக்குவதன் மூலம் ஓர் சுய அழிப்பிற்கான நெறிபிழந்த செயலில் ஈடுபட்டுள்ளனர்.

### *புலிகள் பிரதிபலிப்பது யாருடைய நலனை?*

இவ்வாறான நிலையில் சாதாரண பொதுமக்கள் திரும்பவும் குண்டுத்தாக்குதல், ஷெல் தாக்குதல்கள் எதேச்சையான கைதுகள், காணாமற் போதல்கள் படுகொலைகளுக்கு முகம் கொடுக்கத் தள்ளப்பட்டுள்ளார்கள். விடுதலைப்புலிகள் மக்களின் நலனையா பிரதிபலிக்கிறார்கள் என கேள்வியெழுப்ப முனையும் போதெல்லாம் விடுதலைப்புலிக்ளை தமிழ்மக்களில் இருந்து பிரிக்கமுயலும், ஓர் கபட முயற்சியாக காண்பிப்பதற்குப் பலர் முயல்கிறார்கள். இவ்வாறான கண்ணோட்டம் தென்பகுதியில் உள்ள சில பத்திரிகையாளர்கள் மற்றும் சமாதான இயக்கத்தில் தமது தனிப்பட்ட செல்வாக்கை முன்னெடுக்கவிரும்பும் சில சமாதான செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் கூட காணப்படுகிறது. இது அவர்கள் மத்தியில் உள்ள குழப்பகரமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது.

அண்மைக்கால சமாதான முன்முயற்சிகளில் பல நல்லபெறுபேறுகள் ஏற்பட்டன. ஆனால் அவை மிகவும் மேலோட்டமானவையே. விடுதலைப்புலிகளின் பயமுறுத்தலை கையாள்வதற்கு அரசு தனது, பாரிய மாற்றமேதும் ஏற்படுத்தாத பழைய இயந்திரத்தையே, மிலேச்சத்தனமாகப் பயன்படுத்த முற்படின் தவிர்க்க முடியாது அந்நியப்படுத்தப்பட்டுள்ள தமிழ்மக்களை மேலும் அந்நியப்படுத்தவே உதவி செய்யும். பல்வேறு அறிக்கைகளில் அரசபடைகளின் தொடர்ச்சியான பொதுமக்கள் மீதான அடக்குமுறைகளையும் பொது மக்களின் நலனிற்கும் விடுதலைப்புலிகளின் எதிர்பார்ப்புக்களையும் வேறுபடுத்தமுடியாத தன்மையையும் தெளிவாக வெளிக்கொணர்ந்திருந்தோம். கடந்த 40 வருடகாலம் ஆதிக்கம் செய்து வந்த இனரீதியான அரசியலின் பின்னணியில் உருவாக்கப்பட்ட ஸ்தாபனரீதியான இனவாத சுமையை நீக்குவதற்கான திசையில் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கொழும்பில் புரிந்துகொள்ளக்கூடிய பாதுகாப்பு பிரச்சினையை கையாள்வதற்குக்கூட தமிழ்மக்களும் பங்குபற்றும் முறையான அமைப்புக்களோ, வழிமுறைகளோ உருவாக்கப்படவில்லை. தமிழ்மக்களை நம்பமுடியாது என அடிக்கடி எரிந்துவிழும் பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகளும், சாதாரண மக்களுக்கு ஏற்படும் அவமரியாதைகளும் இரு சமூகங்களுக்குமிடையேயான பாரிய இடைவெளியைக் காண்பிக்கின்றது.

சாதாரண சிங்கள பொதுமக்கள் மத்தியில் பரந்தளவில் இனப்பிரச்சினையை புரிந்து கொள்ளும் அவாவும், நல்லெண்ணமும் காணப்பட்டபோதிலும், அரசயந்திரம் பெருமளவில் அதனை உறுதிப்படுத்தும் நிலையில் இல்லை. அது சமாதான நிகழ்வை முன்னெடுக்க இன்றியமையாதது. அவ்வாறான குணாம்ச மாற்றம் ஏற்படுவதென்பது ஓர் நீண்ட காலநிகழ்வுகளினூடாக, பல்வேறு மட்டங்களில் ஏற்படும் முன்முயற்சிகளாளேயே நடைபெறமுடியும். ஆனால் ஆதிக்கம் செலுத்தும் தமிழ் அரசியல், அத்திசையில் பங்களிப்பு செய்யக்கூடிய நிலையில் இல்லை என்பதே முக்கியமானதொன்றாகும். இவ்வாறான சிக்கலான, திரிசங்கு சொர்க்க நிலையில் உள்ள சாதாரண தமிழ் மக்களின் நலன்களையும், அங்கலாய்ப்புக்களையும் கையாள குறுகிய நீண்டகால மூலோபாயங்கள் ஓர் அரசியல் தீர்வு யோசனையை மையப்படுத்தி வகுப்பது அரசின் கடமையாகும். உடனடியாக யுத்தப்பிரதேங்களில் பொதுமக்களின் நலனை முன்னெடுக்க தற்காலிய அமைப்புக்கள் அமைக்கப்படவேண்டும்.

### *அரசுக்கு வேண்டுகோள்*

எனவே, அரசாங்கம் புலிகளை கையாள்வதற்காக எனும் குறுகிய அடிப்படையில் அல்லாது, இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் முன்னெடுப்புக்களை பின்வரும் அடிப்படையில் எடுக்குமாறு வலியுறுத்துகிறோம்.

- நாட்டுமக்களின் முன் ஓர் அரசியல் தீர்விற்கான யோசனைகளை முன்வைக்க வேண்டும். பல்வேறு சமூகங்களின் தலைமைகளின் குறிப்பிட்ட நீண்டகால நிலைப்பாடுகளை திருப்தி செய்தல் அல்லது அந்நிலைப்பாடுகளில் குறைந்த பட்ச நிலைமையை தெரிவு செய்தல் என்ற அடிப்படையில் தீர்வு உருவாக்கப்படக்கூடாது. அத்தீர்வு இந்நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்பதாக இருக்கவேண்டும். அதுவே உண்மையான தலைமைத்துவத்தின் குணாம்சமாகும்.
- அரசாங்க ஸ்தாபனங்களை இனவாத ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்கால அரசியல் முன்னெடுப்பு, சகல சமூகங்களினதும் அவர்களுடைய உரிமைகள், நலன்கள் என்பவற்றை உறுதிப்படுத்துவதின் மூலம் ஒன்றிணைக்கும் தேசநிர்மாண அடிப்படையிலானது என்பதை உணர்வுபூர்வமாக ஏற்று செயற்பட வேண்டும்.
- யுத்தப் பிரதேசங்களில் அடிப்படை மனித உரிமைகளை பேணும் வகையில் பொதுமக்கள் அமைப்புக்களை உடனடியாக ஸ்தாபித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படுதல் உறுதிசெய்யப்பட வேண்டும். அரசபடையானது அடிப்படையில் சிங்கள மக்களைக் கொண்டது என்னும் இன்றைய யதார்த்தத்தை கணக்கில் கொண்டு செயற்படவேண்டும்.

### *தமிழ் மக்களின் மனச்சாட்சிக்கு சிலகேள்விகள்*

இக்கால கட்டத்தில் எமது மத்தியில் ஆதிக்கம் செலுத்தும் அழிவு அரசியல் இட்டுச் செல்லும் மிகவும் அபாயகரமான போக்கை கணக்கிற்கொண்டு, தமிழ் மக்கள் தமக்கு விடுதலை பெற்றுத்தருபவர்களாகச் சொல்லப்படுவோரின் நடவடிக்கைகள் பற்றிப் பின்வரும் கேள்விகளை தமது மனச்சாட்சியைத் தொட்டு கேட்டுக்கொள்வது அவசியமானதாகும்.

அரச பயங்கரவாதத்திற்கு முகம்கொடுப்பது எனும் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்ட உள்ளார்ந்த பயங்கரவாதம் எமது சமூகத்தை எவ்வாறு வலுவிழக்கச் செய்துள்ளது?

ஏழைமக்களினதும், போர்ப்பிராந்தியத்தில் சிக்குண்ட மற்றும் தடுத்துவைக்கப்பட்ட மக்களினதும் பிள்ளைகளை பலியிடும் ஓர்விதமான சிறுவர் வேள்வியின் தாற்பரியம் என்ன?


வடகிழக்கு பகுதிகளில் அல்லாது தமது எதிர்காலத்தை வெளிநாடுகளில் முதலிட்டுக் கொண்ட பெரும்பகுதி தமிழர்கள், மறைமுகமாக இந்த மிலேச்ச அரசியலை பலப்படுத்தும் செயலின் பின்னணியானது, தமது நிலையை வெளிநாடுகளில் ஸ்திரப்படுத்தவோ அல்லது தமது மனச்சந்தோசத்திற்காகவோ இருக்கும் இன்றைய குரூரம்.

**இவ்வாறான பல்வேறு அம்சங்களை கணக்கிலெடுக்கையில் தமிழ்மக்கள் ஓர் வித பொய்மையில் வாழ்வது புரியும். அவர்கள் தமது எதிர்காலச் சந்ததியில் குறிப்பாக வட கிழக்கில் வாழும் மக்களின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டிருப்பார்களாயின், உடனடியாக இப்பொய்மையில் வாழ்தலை நிராகரித்தல் வேண்டும் என நாம் வேண்டிக்கொள்கிறோம்.**

நாம் சர்வதேச சமூகத்தை மேற்கூறிய அடிப்படைகளை அரசாங்கம் முன்னெடுக்க நிர்ப்பந்திக்குமாறு வேண்டுகிறோம். அத்துடன் விடுதலைப்புலிகளை அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துதல் எனும் தெளிவான புரிந்துணர்தலில், போரை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு செல்லுமாறு நிர்ப்பந்திக்குமாறு வேண்டுகிறோம். மேலும் தமிழ்மக்கள் தமது நலனை பீதியின்றி வெளிப்படுத்த ஓர் ஜனநாயகச் சூழலை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த விடுதலைப்புலிகளை நிர்ப்பந்தித்தலும் அவசியமானதாகும்.

இறுதியாக, தமிழ் மக்களின் தர்மசங்கடமான இன்றைய நிலையை புரிந்து இன்றைய சிக்கலான நிலைமைக்கு முகம்கொடுக்க சிங்கள சமூகம் உள்ளார்ந்த பலத்தையும் தன்னம்பிக்கையையும் கொண்டிருக்க வேண்டும். தற்காலிய சுயநல அரசியல்சக்திகளின் குறுகிய இனவாத கோஷங்களுக்கு இடம் கொடுக்காது, முழுநாட்டினதும் சிக்கலுக்கு முகம் கொடுக்கத்தயாராக வேண்டும். கடந்த பல வருடங்களாக நடைபெற்றுவந்த அவலங்களும், கொலைகளும் எமக்கு சில படிப்பினைகளை தந்திருக்க வேண்டும். அதாவது குறுகிய தேசியவாதம் சந்தர்ப்பவாத அரசியல் சதுரங்கத்தில் பயன்படுத்தும் ஓர் காய் அல்ல என்பதாகும். அதன்பின்னணியில் உருவான விடுதலைப்புலிகளின் அரசியலை ஓர் தெளிவான தார்மீக நெறிமுறைகளின் அடிப்படையிலான கோட்பாட்டு ரீதியான நிலைப்பாடுகளாலேயே முகம் கொடுக்க கூடியதொன்றாகும்.


***மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்), 95 மே 08 அன்று வெளியிட்ட அறிக்கை.***





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அரசியற் தீர்வற்ற இந்தியத் தலையீடு?



இந்திய வெளியுறவு அமைச்சர் பிரனாப் முகர்ஜி ஜூன் 07, 1995 ரைம்ஸ் ஒஃப் இந்தியா பத்திரிகைக்கு ஒரு பேட்டியளித்திருந்தார்.

இந்திய அரசின் வழமையான பல்லவியை - ''இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு சுமூகமான, பேச்சுவார்த்தை மூலமான தீர்வு காணப்படுவதை விரும்புகிறோம். இலங்கையின் ஐக்கியத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் உட்பட்ட ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என நம்புகிறோம்''. - என ஒப்புவித்ததோடு ஒரு முக்கியமான விடயத்தையும் அப்பேட்டியில் சூசகமாக வெளிப்படுத்துகிறார். பிரச்சினையில் இராணுவ ரீதியாக இந்தியா மீண்டும் தலையிடும் சாத்தியமே இல்லையா என ரைம்ஸ் ஒஃப் இந்தியா நிருபர் கேட்டதற்கு ''ஆம், ஆனால் நான் அதை அந்தளவு திட்டவட்டமாகக் கூறமாட்டேன். இக்கேள்வி எழுவதற்கு (தற்போது) இடமில்லை. ஏனெனில் இலங்கை அரசிடமிருந்து (இராணுவத்தலையீட்டுக்கான) கோரிக்கை ஏதும் இல்லை''

இங்கே ஒரு விடயம் தெளிவாகத் தொக்கு நிற்கிறது. இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை நசுக்க இந்தியாவிடமிருந்து இராணுவ உதவி கோரும் பட்சத்தில் இந்தியா அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்பதே அது.

ஏற்கெனவே ஒருமுறை இலங்கை அரசு தன்னைப் பாதுகாக்க இந்தியாவிடம் இராணுவ உதவியைகோரிப் பெற்றுக் கொண்டது என்பது நாம் அறிந்ததே.

1971இல் ஜே.வி.பி. கிளர்ச்சி வெடித்த போது அப்போது பதவியில் இருந்த சந்திரிகாவின் தாயார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தியாவிடம் அவசர அவசரமாக எவ்வாறு உதவி கேட்டு அனுப்பினார் என்பதும், இந்தியா அனுப்பிய படைகளின் பின்பலத்துடன் எவ்வாறு இலங்கை இராணுவம் மூர்க்கத்தனமாக ஜே.வி.பி. சார் சிங்கள இளைஞர்களையும், யுவதிகளையும் கொன்று குவித்தது என்பதும் வரலாறு.

இலங்கைக்கு மட்டுமல்ல அண்மையிலுள்ள சிறிய மாலைதீவின் அரசை புளொட்டின் உதவியுடன் அங்குள்ள கிளர்ச்சியாளர்கள் கைப்பற்ற முற்பட்ட போது அவ்வரசின் அவசரக் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொண்டு இந்தியா தனது முப்படைகளையும் உடனடியாக அனுப்பி உதவியது. 71இல் இலங்கைக்கும், 88 இல் மாலைதீவிற்கும் இந்திய அரசு புரிந்த அவசர இராணுவ உதவியை ஆராய்வோமானால் - சம்பந்தப்பட்ட இரு அரசுகளையும் ஆயுதபலத்தின் மூலம் கவிழ்க்க முற்பட்டவர்கள் தனக்குச் சாதகமாக இருக்கக் கூடியவர்களா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் கணக்கிலெடுக்காமலேயே இந்தியா அவ்வரசுகளின் உதவிக்குச் சென்றுள்ளது என்ற உண்மை புலப்படும்.

இலங்கை அரசு இனி இந்திய அரசின் உதவியாக கோருவதானால் அது புலிகளுக்கு எதிரான இராணுவ உதவியாகவே இருக்கும். புலிகளை ஒரு எதிரி அமைப்பாகவே இந்திய அரசு நோக்குகின்றது. அத்துடன் பிரபாகரன் மீது நாடுகடத்தித்தரும் (extradition) உத்தரவையும் பிறப்பித்து அதனை அதிகாரபூர்வமாக இலங்கை அரசிடம் கையளித்தும் உள்ளது.

எனவே இலங்கை அரசு புலிகளுக்கு எதிராக இந்தியாவிடம் அவசர உதவி கோரினால் அதை டெல்லி ஏற்றுக் கொண்டு தன் இராணுவத்தை அனுப்பும் என்பது திண்ணம்.

**இதில் நாம் மிகமுக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்றுள்ளது.**

இலங்கை அரசு இந்தியாவிடம் கோரும் இராணுவ உதவி திட்டவட்டமாக வட கிழக்கில் தன் படைகளுக்கு ஏற்படக்கூடிய ஒரு மிகப்பாரதூரமான பின்னடைவைச் சமாளிப்பதற்கானதாகவே இருக்கும். அந்த நிலையில் இந்தியா வெறும் இராணுவ ரீதியாகவே தலையிட வேண்டிவரும். அத்துடன் புலிகள் இன்று இந்தியாவிற்கும் கூட இராணுவ ரீதியாக நசுக்கப்பட வேண்டிய ஒரு சக்தியாக உள்ளனர். எனவே அங்கு இரு அரசுகளும் ஒரு தூய இராணுவ நோக்கிலேயே புலிப்பிரச்சினையை அணுகும் என்பதில் இரண்டாம் பேச்சிற்கிடமில்லை.

எனவே இந்தியாவின் தலையீடு ஒரு அரசியல் தீர்வை அடிப்படையாகக் கொண்டிருக்கும் எனச்சிலர் வாதிட முற்படுவது சுத்தமுட்டாள்தனத்தின் பாற்பட்டதே அன்றி வேறில்லை.

சோனியா எனும் ஒரு இத்தாலியப் பெண்ணைத் திருப்திப்படுத்த ராவின் அரசு ஆயிரக்கணக்கான வட கிழக்கு வாழ் மக்களைக் கொன்று குவித்து நடத்தப்போகும் கோர கிருத்தியமாகவே இந்தத் தலையீடு (96 தேர்தல்களுக்கு முன்னர் எனின்) அமையும் என்பதை அறிந்து மறைக்க விரும்பும் சிலர் தமிழ் மக்களுக்கு இப்போதே சரடு விடமுனைந்து விட்டனர். இந்தியா இராணுவ ரீதியாக வட கிழக்கில் இனி தலையிடுவதானால் சரியான ஒரு அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசைக் கட்டாயப்படுத்தும் மாம் என்பது இவர்களின் கூற்று. இதை நம்ப இன்றும், இன்னும் பலர் தயாராய் இருக்கின்றனர் என்பதுதான் அதிசயமான ஆனால் வேதனைக்குரிய விடயம்.

ஏற்கெனவே 87இல் தான் முற்றுமுழுதாகத் தமிழர் சார்பாகவே செயல்படுகிறேன் என இந்தியா கூறியகாலத்திற் கூட தமிழருக்கு முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு என்ன?

13வது திருத்தச்சட்டமும், இரண்டாகப் பிரிக்கப்பட்ட தமிழர் தாயகமுமே.

13வது திருத்தச்சட்டத்தினூடாகக் கைக்கெட்டிய மாகாணசபை அடிப்படையில் பெரும் பம்மாத்து என முறையிட்டு, இந்திய தாசர்களாகத் தம்மை வரித்துக்கொண்டவர்களே அந்நேரம் மிகுந்த விரக்தியுடன் ஓர் அறிக்கை சமர்ப்பித்தனர் என்பது நாமறிந்ததே.

எனவே இன்று இலங்கை அரசின் விசேட விண்ணப்பத்தின் பேரில் புலிகளுக்கு எதிராக இராணுவ உதவி வழங்குவதையே பிரதானமான நோக்கமாகக் கொண்டு வரப்போகும் இந்தியா தமிழருக்கு ஒரு அரசியல் தீர்வினை முன்வைக்கும் படி வற்புறுத்தும் எனக் கூறுவதும் எதிர்பார்ப்பதும் மகா மடத்தனமாகும்.

ஆகக்கூடிய பட்சம் 13வது திருத்தச்சட்டத்தை 'நன்கு' நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசிற்குச் சிநேகபூர்வமான ஆலோசனை வழங்குவதைவிட டெல்லி இனி எதுவும் செய்யப்போவதில்லை. தனிஅரசு ஒன்றை நடைமுறையில் நிறுவும் அளவிற்கு வளர்ந்துள்ள தமிழர் உரிமைப் போராட்டத்தை நசுக்க வேண்டுமென்பதே இந்தியாவின் பிரதான குறி இன்று.

புலிகள் ராஜீவைக் கொல்லாமல் இருந்திருந்தாலும் கூட இன்று இதுதான் இந்தியாவின் நோக்கமாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பிரபாகரன் ராஜீவைக் கொன்றார் என்பது தமிழர் உரிமைப் போராட்டத்தை நசுக்கப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் டெல்லிக்கு கிடைத்த சாட்டு.

1962 இல் தனித்தமிழ்நாடு கேட்டுப் போராடியவர்களுக்கு எதிராக பிரிவினைவாதத்தடைச்சட்டம் கொண்டு வந்ததே இந்திய மத்திய அரசு. அது அவர்கள் யாராவது முக்கிய வட இந்திய அரசியல் தலைவரைச் சுட்டுக் கொன்றார்கள் என்பதற்காகவா? இல்லையே.

தமிழ் மக்கள் தமக்கென்று ஒரு நாடு கேட்பது தண்டிக்கப்பட வேண்டிய, வேரோடு நசுக்கப்பட வேண்டிய குற்றம் என்பதே வட இந்திய அரசியலாளரின் மைய எண்ணம்.

வரலாற்று ரீதியாக, அதாவது 75 வருடங்களுக்கு மேலாக - திராவிட இயக்கத்தின் முன்னோடியான தென்னிந்திய நலன்புரிச் சங்கம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து - இந்த எண்ணம் ஊறிப்போய்க்கிடக்கிறது அவர்களின் நெஞ்சில். தமிழகத்தில் 67 இல் நசுக்கப்பட்டது இலங்கையின் வட கிழக்கில் புதிய உத்வேகத்துடனும், எதிர்பாராத இராணுவ பலத்துடனும் தலைதூக்கி விட்டது என்பதுதான் அவர்களது தற்போதைய பிரச்சினையாகும்.

*சி.புவிராஜகீர்த்தி*
*சுப்பையா ஒழுங்கை*
*மட்டக்களப்பு*

---

# உத்தேச சமஷ்டியும் முஸ்லிம்களுக்கான தீர்வும்!



— ஆர்.எம்.இம்தியாஸ் —

மூன்றாம் ஈழப்போர் உறுதியான மனநிலையுடன் தொடர்ந்து நடைபெறுகிறது. 'என்ன விலை கொடுத்தேனும் சமாதானம் அடையப்படவேண்டும்' என்ற அழகிய சுலோகம் கவனிக்கப்படுமளவுக்கு தோல்வி அடைந்துள்ளது. சமாதானத்தை சமாதான முறையில் அடைவது தோல்வியடையுமானால் சமாதானத்தை யுத்தம் மூலமாவது அடைவதில் அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்தில் அரசியல் தீர்வு குறித்தும் அரசாங்கம் அடிக்கடி பேசிவருகிறது.

இலங்கையின் தேசிய இறைமை முற்றும்தன்னாதிக்கம் முழுமையான முறையில் ஸ்தம்பிதம் அடையும் அளவுக்கு இனப்பிரச்சினை கூர்மையடைந்துள்ளது பழைய சங்கதியே. இராணுவத் தீர்வு மூலம் சிறப்பானதொரு பாடத்தை இனப்பிரச்சினைக்கு கற்றுக்கொடுக்க முன் வந்த சிங்கள 'ஜனநாயகவாத' அரசாங்கங்கள் தோல்வியான பாடத்தையே அனுபவித்தன; அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே சரியானதொரு மார்க்கம் என்பது சந்தேகங்களுக்கு அப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு அரசியல் தீர்வு சிறுபான்மை சமூகங்களது அபிலாசைகளைத் தீர்த்து வைப்பதில் கடுமையான ஆர்வத்தை வெளிப்படுத்தல் அவசியமாகும்.

சிங்கள, தமிழ் தேசிய இனங்களுக்குள் நிகழும் இன்றைய இனப்பிரச்சினையில் முஸ்லீம் தேசிய சிறுபான்மை இனம் பலவந்தமான முறையில் சம்பந்தமாகியுள்ளது. சகோதர தமிழ், சிங்கள இனங்களுடன் மிக சுமுகமாக, ஐக்கியமாக வாழ்ந்துவந்த முஸ்லீம் மக்கள் அதே இனங்களின் அரசியல், சமூக, பொருளாதார அநீதிகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர். இதன் அடுத்த பக்க விளைவாக **இனப்பிரச்சினைத்தீர்வு விவகாரத்தில் முஸ்லீம்களினை நிராகரித்துவிட்டு எதையும் ஆரோக்கியமாக ஒழுங்கமைக்க முடியாது என்று கூறுமளவுக்கு முஸ்லீம் மக்கள் நிலை அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.**

இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி பற்றி அரசாங்கம் அக்கறைகாட்டுவதாக தகவல்கள் கூறுகின்றன. தமிழ் மக்களுக்கு முன்வைக்கவுள்ள உயர்ந்த அதிகாரங்கள் தொடர்பாக அரசாங்கம் சில தமிழ்க்கட்சிகளுடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது. இப்பேச்சுவார்த்தையின் போது முஸ்லீம் அமைப்புக்கள் தொடர்பாக எவ்விதமான அக்கறையையும் காட்டியிருக்கவில்லை. அதேவேளை உத்தேச சமஷ்டி தீர்வு அலகுக்குள் முஸ்லீம்களின் நிலை தொடர்பாகவும் எக்கருத்துக்களும் பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை. இது குறித்து அரசாங்கமோ அல்லது பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தமிழ்க்கட்சிகளோ எந்தவிதமான அக்கறையும் காண்பிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் முஸ்லீம்களின் நிலை தொடர்பாக கடந்த கால உடன்படிக்கைகள் எவ்விதமான ஆர்வத்தையும் வெளிப்படுத்தவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். இதே அனுபவம் உத்தேச தீர்வுக்குள் நடைமுறைப்படுத்தப்படுமாயின் அது எதிர்மாறான விளைவுகளையே இலங்கை அரசியலில் அனுமதிக்கும். வெறுமனே தமிழ்க்கட்சிகளுடன் மூடிய கதவுகளின் மத்தியில் கலந்துரையாடப்பட்டு முன்வைக்கப்படும் தீர்வுத்திட்டங்கள் முஸ்லீம்கள் மத்தியில் முன்வைக்கப்படுவது இன்னுமொரு பிரச்சினையையே வெளிப்படுத்தும்.

முஸ்லீம்கள் நலன்கள் தொடர்பாக அரசாங்கம் முஸ்லீம் அமைப்புக்களுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். முஸ்லீம் அமைப்புக்கள் எனும் போது நமது விருப்பு, வெறுப்புக்களுக்கு அப்பால் முன்னணியில் உள்ள அமைப்பு முஸ்லீம் காங்கிரஸ். முஸ்லீம் தேசியத்தை தவறான வழியில் பயன்படுத்துகிறது அல்லது மூஸ்லீம் தேசியம் முஸ்லீம் காங்கிரஸ் என்ற தவறான தலைமையில் அகப்பட்டிருக்கலாம். எது எவ்வாறாயினும் முஸ்லீம் காங்கிரசுடன் அரசு உடனடியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதுடன் முஸ்லீம் அரசியல் நலனில் அக்கறையாகவுள்ள துணை அரசியல் அமுக்க குழுக்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபடவேண்டும்.

உத்தேச வட கிழக்கு சமஷ்டி தீர்வுக்குள் அம்பாறை மாவட்டத்தின் முஸ்லீம் தொகுதிகளை பிரதானமாக உள்ளடக்கிய முஸ்லீம் மாகாண சபை நிர்வாக அலகாக நியாயப்படுத்தப்படல் வேண்டும். உத்தேச முஸ்லீம் மாகாண சபைக்குள் முஸ்லீம்கள் செறிவாக வாழும் மட்டக்களப்பு தென்பகுதிகளையும், திருமலை முஸ்லீம் பகுதிகளையும் இணைத்தல் கட்டாயத்தேவையாகும். அம்பாறை மாவட்டம் அல்லாத கிழக்கின் ஏனைய மாவட்ட முஸ்லீம் பகுதிகளை முஸ்லீம் மாகாண சபைக்குள் இணைப்பது நிர்வாக ரீதியில் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தாது. முஸ்லீம் மாகாண சபைக்குள் உள்ளடங்கும் தமிழ்ப்பகுதிகள் முஸ்லீம் மாகாணசபை நிர்வாகத்துக்குள் உள்ளடக்குவது புரிந்துணர்வுகளுக்கு வழிவகுக்கும்.

முஸ்லீம் மாகாண சபைக்குள் வடபகுதி முஸ்லீம்கள் உள்ளடக்கப்படல் அவசியமா என்பது இன்னொரு முக்கிய விவகாரமாகும். வடபகுதி முஸ்லீம்கள் வடமாகாண தமிழ் மக்களுடன் நெருக்கமான உறவுகளை கடந்த காலங்களில் பேணிவந்துள்ளனர். புலிகளின் குறுந்தேசிய

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள்-5



## பாராளுமன்றத்தில் பெண்கள்

முதன் முறையாக நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பெண், லேடி 'எட்லின் மொலமூரே' . இவரது தந்தையான 'ஜோன் ஹென்றி மீதெனிய அதிகாரம்' என்பாரின் மரணத்தைத் தொடர்ந்து அவரது தொகுதியான 'ருவன்வெல்ல' வில் 1931 நவம்பரில் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் அவரது மகளான மொலமூரே அம்மணி போட்டியிட்டு அரச சபைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

அரசியலைப்பற்றிய இலங்கைப் பெண்களின் அக்கறையற்ற அக்காலத்தில் அவர் தெரிவு செய்யப்பட்டமை பெண்கள், அரசியலில் பங்குபற்றுவதற்கான துணிவையும் ஆரம்பத்தையும் கொடுத்தது.

### பாராளுமன்றத்தில் முதற்பெண்

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அரசாங்க சபையில் திரு. மீதெனிய அதிகாரம் நான்கு மாதங்களும் ஒரு தினமும் மட்டுமே அங்கத்துவம் வகிக்க முடிந்தது. 1931 செப்டெம்பர் 5ம் திகதி அவர் இறந்தார். அவரது ஈமச்சடங்குகள் முடிந்ததன்பின் அவரது நெருங்கிய நண்பர்கள் மீதெனிய அதிகாரத்தின் மகள் எட்லினிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதாவது தகப்பனின் மரணத்தைத் தொடர்ந்து வெற்றிடமாகியுள்ள ருவன்வெல்ல ஆசனத்தை தொடர்ந்தும் மீதெனிய பரம்பரையே பிரதிநிதித்துப்படுத்த வேண்டும் என்பதே அது.

சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கின்ற போதும் அரசாங்க சபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் மேற்படி வேண்டுகோளுக்கு இணங்க எட்லின் மொலமூரேவுக்கு சாத்தியமானது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுவை எட்லின் மொலமூரே 1931 ஒக்டோபர் 5ம் திகதி சமர்ப்பித்தார். எட்லினுக்கு வழங்கப்பட்ட நிறம் வெள்ளை. இலங்கை தேர்தல் வரலாற்றில் முதன் முறையாக பெண்ணொருவர் போட்டியிடுகின்றமையால் பெண்கள் வாக்குரிமை சங்கம் எட்லினுக்கு ஆதரவு வழங்கப்போவதாக ஒக்டோபர் 14ம் திகதி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

அதற்கிணங்க எட்லினின் வெற்றிக்காக பெண்கள் வாக்குரிமைச் சங்கம் பெரும் பிரச்சார வேலைகளை மேற்கொண்டது. தேர்தல் பிரச்சாரங்களுக்கு முன்நின்று உழைத்தவர் டேஸி டயஸ் பண்டாரநாயக்கா. இவர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவின் மனைவியாவார். பிற்காலத்தில் இலங்கையின் பிரதமராக பதவி வகித்த S.W.R.D.பண்டாரநாயக்காவின் தாயார் டேஸி பண்டாரநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது. (தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் பாட்டி)

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின் திருமதி. எட்லின் மொலமூரேவுக்கு வாழ்த்து தெரிவிக்க வந்தவர்கள் மத்தியில் உரையாற்றிய எட்லின் பின்வருமாறு தெரிவித்தார்.

***"அரசாங்க சபையில் பெண்ணொருவர் அங்கத்துவம் வகிக்க கிடைத்தது பெண் குலத்துக்கே பெருமையளிக்கிறது. நான் பழுத்த மூன்று சிங்கங்களுடன் போட்டியிட வேண்டியிருந்தது. எனவே எனது வெற்றி பெண்குலத்துக்கான பெரு வெற்றியாக கருதப்படவேண்டும்."***

எட்லின் மொலமூரேவின் சத்தியப்பிரமாணம் 1931 நவம்பர் 29ம் திகதி அரசாங்க சபையில் நடைபெற்ற போது அரசாங்க சபை கலரியில் பெண்கள் நிரம்பிக் காணப்பட்டனர்.

இலங்கையின் வரலாற்றில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் பெண்மணி எனும் ஸ்தானத்தை எட்லின் பெற்றுக் கொண்டார்.

### பாராளுமன்றத்தில் முதற் தமிழ்ப் பெண்

ருவன்வெல்ல தொகுதியில் நடந்த இடைத்தேர்தலின் மூலம் எட்லின் தனது தகப்பனின் அரசியல் செல்வாக்கு, தனது உயர்குடி செல்வாக்கு, பெண்களின் பிரச்சாரம் காரணமாகவே அரசியலில் நுழைய முடிந்தது. எட்லின் மொலமூரே தெரிவு செய்யப்பட்டு ஒருவருடத்துக்குள் தகப்பனின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி இன்னுமொரு பெண், அரசாங்க சபைக்குள் நுழைந்தார். அவர்தான் கொழும்பு வடக்கு தொகுதியிலிருந்து




தெரிவான நேசம் சரவணமுத்து.

இலங்கை சர்வசன வாக்குரிமை பெற்றதன் பின் மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழர் டொக்டர்.ரத்னஜோதி சரவணமுத்து. அதுமட்டுமன்றி முதல் தேர்தல் முறைப்பாட்டுக்குரிய நபரும் இவராவர். (ரத்னஜோதி சரவணமுத்து 1931 தேர்தலில் 5795 வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார்.)

திரு.ரத்னஜோதியின் தெரிவை ரத்துச் செய்யும்படி அவருடன் போட்டியிட்டு தோல்வியடைந்த டொக்டர்.எச்.எம்.பீரிஸ் கொடுத்த முறைப்பாட்டின் மீது 1932 மார்ச் 8ம் திகதியன்று நீதவான் டிரிபார்க்ஸ்' வழங்கிய தீர்ப்பின்படி

***1. லஞ்சம் வழங்கியமை***
***2. சுதந்திரமாக வாக்கை பயன்படுத்துவதற்கு தடையாயிருந்தமை.***
***3. பொய்யான தகவல்கள் அடங்கிய துண்டுப்பிரசுரம் அச்சடிப்பதற்கு பணம் வழங்கியமை.***

போன்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து டொக்டர் சரவணமுத்துவின் பிரதிநிதித்துவம் இரத்துச்செய்யப்பட்டது.

இதன் காரணமாக கொழும்பு வடக்கில் 1932 மே 28இல் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் டொக்டர் சரவணமுத்துவின் மனைவி நேசம் சரவணமுத்து போட்டியிட்டு - 8681 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்றார். இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முதற்தமிழ் பெண் நேசம் சரவணமுத்து என்பது குறிப்பிடத்தக்கது. அவருடன் போட்டியிட்ட தொழிற்கட்சியைச் சேர்ந்த எம்.எல்.எம் ரியால் - 4433 வாக்குகளையும் டிசொய்சா ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரியாக இருந்த டொக்டர் எச்.எம்.பீரிஸ் - 3333 வாக்குகளையும், வெள்ளவத்தையைச் சேர்ந்த டபிள்யூ,ஏ,பெல்சிகர் - 116 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

துரதிர்ஷ்டவசமாக திரு.சரவணமுத்துவும் சரி அவரது மனைவி நேசம் சரவணமுத்துவும் சரி அவர்களது பதவிக்காலத்தில் 8 மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை.

நேசம் சரவணமுத்துவுக்கு எதிராக செய்யப்பட்ட தேர்தல் முறைப்பாடொன்றின் மூலம் அவரது உறுப்பினர் பதவியும் பறி போனது.

டொக்டர் சரவணமுத்து தனது மனைவி நேசம் சரவணமுத்துவுக்கு ஆதரவளிக்கக் கோரி விநியோகித்திருந்த துண்டுப்பிரசுரத்தை ஆதாரமாகக் கொண்டே அந்த விசாரணை நடந்தது. விசாரணை செய்த எ.சீ.டோல்டன் 1932 செப்டம்பர் 27 அன்று திருமதி.நேசம் சரவணமுத்துவின் உறுப்பினர் பதவியை இரத்துச்செய்ததாக அறிவித்தார். ஆயினும் இந்தத் தீர்ப்பினால் அவரது சிவில் உரிமை பறிக்கப்படவில்லை.

எனவே கொழும்பு வடக்கில் 1932 நவம்பர் 12இல் இன்னொருமொரு இடைத் தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் மீண்டும் நேசம் சரவணமுத்து போட்டியிட்டு, அவருடன் போட்டியிட்ட காசி செட்டியை விட 7730 அதிகப்படியான வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றார்.

முதலாவது அரசாங்க சபையின் ஆயுட்காலம் முழுவதும் நேசம் சரவணமுத்து பதவி வகித்தார். இரண்டாவது அரசாங்க சபை தேர்தல் 1936 பெப்ரவரி 22 ஆம் திகதி நடந்த போது மீண்டும் நேசம் சரவணமுத்து கொழும்பு வடக்கில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இத்தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜோசப்.டி.சில்வா, டொக்டர் எஸ்.சீ. போல் மற்றும் பீ.ஜே.ஆர், ரொட்றிகோ ஆகியோரைத் தோற்கடித்து, நேசம் சரவணமுத்து 4932 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

இரண்டாவது அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பெண் பிரதிநிதி இவா ஒருவரே. நேசம சரவணமுதது அரசாங்க சபையில் கல்வி மற்றும் உடல்நலம் தொடர்பான நிர்வாகக் குழுவுக்குப் பொறுப்பாகவும் இருந்தார்.

நேசம் சரவணமுத்து இரண்டாவது அரசாங்க சபையின் ஆயுட்காலம் முடிவதற்கு முன் 1941 ஜனவரி 10ஆம் திகதி இறந்தார். அந்த நேரத்தில் நேசம் சரவணமுத்துவின் கணவரான டொக்டர் ரத்னசோதி சரவணமுத்து கொழும்பு நகர மேயராக பதவிவகித்துக் கொண்டிருந்தார். அவர் தொழிற்கட்சியின் வேட்பாளர் ஈ.ஏ.குரே 'வை தோற்கடித்து 1941 ஜனவரி 8ம் திகதி நகர மேயராக பதவியேற்றார். அன்று கொழும்பு மாநகர சபையின் அங்கத்தவராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினாலேயே சரவணமுத்துவின் பெயர் நகர மேயராக முன்மொழியப்பட்டிருந்தது.

| 1931-1-14 இடைத்தேர்தல் முடிவுகள் | |
|---|---|
| திருமதி எட்லின் மொலமூரே (வெள்ளை நிறம்) | 13,866 |
| திரு.ஆர்.எஸ்.எஸ்.குணவர்தன ( சிகப்பு நிறம்) | 4,468 |
| திரு.ஈ.ஏ.வீ.டி.சில்வா | 1050 |
| திரு.ஹெலன் சேனநாயக்க (மஞ்சள்) | 718 |
| வாக்களித்தோர் | 21.094 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 92 |
| மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை | 31.562 |
| எட்லின் பெற்ற அதிகப்படியான வாக்குகள் | 9,398 |

டொக்டர் சரவணமுத்து 15 வாக்குகளைப் பெற்று நகரமேயர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட போது அவருடன்போட்டியிட்ட டொக்டர் குரே 8 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். டொக்டர் குரேயின் பெயரை அன்றைய தொழிற்கட்சி தலைவர் ஏ.ஈ.குணசிங்க முன்மொழிந்தார்.

நேசம் சரவணமுத்துவின் மரணத்தைத் தொடர்ந்து, வெற்றிடமா்ன கொழும்பு வடக்கு தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் அவரது கணவர் மேயர் ரத்னசோதி சரவணமுத்து போட்டியிட்டார். இவருடன் போட்டியிட்டவர் ஏ.ஈ.குணசிங்கவின் மைத்துனரான ஜோசப் டி சில்வாவாவார். இவர் பிரபல நாடகாசிரியரும் சட்டவல்லுனருமான ஜோன் டி சில்வாவின் மகனாவார். அடுத்து போட்டியிட்ட வேட்பாளர் பிரபல வைத்தியர் எஸ்.சீ.போல்.

அன்றைய காலகட்டத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கை தேசிய காங்கிரஸுக்கும் மற்றும் தொழிற்கட்சியின் தலைவர் ஏ.ஈ.குணசிங்கவுக்கும் இடையிலான பலப்பரீட்சையாக இந்த இடைத்தேர்தல் காணப்பட்டதென அரசியலறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அன்று அரசியல் அரங்கில் பிரபலமடைந்திருந்த டி.எஸ்.சேனநாயக்க, சேர்.ஜோன்.கொத்தலாவல. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, டட்லி சேனநாயக்க்க ஆகியோர் டொக்டர் ரத்னசோதி சரவணமுத்துவை ஆதரித்தனர்.

ஆனால் இறுதியில் ஏ.ஈ.குணசிங்கவின் பிரதிநிதியான ஜோசப் டி.சில்வா பெற்றி பெற்றார்.

அரசாங்க சபையின் காலத்தில் தேர்தல் முறைப்பாடு விடயத்தில் சாதனை புரிந்திருந்த கொழும்பு வடக்கில், இன்னுமொரு தேர்தல் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த முறைப்பாட்டை ஜோசப் டி.சில்வாவுக்கு எதிராக அன்றைய கொழும்பு மேயர் ஆர்.சரவணமுத்து செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டுக்கான தீர்ப்பு 1941 டிசம்பர் 22 ஆம்திகதி ஓ.எல்.டி.ஹெக்டர் என்பவரால் வழங்கப்பட்டது. இத்தீர்ப்பின்படி ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதன் காரணமாக ஜோசப் டி சில்வாவுக்கு அரசாங்க சபை பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டது. அதேநேரம் இவரது ஊழல் நடவடிக்கைகளுக்கு துணைபுரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஏ.ஈ.குணசிங்கவின் பிரதிநிதித்துவமும் இல்லாமல் செய்யப்பட்டது. ஒரு தேர்தல் முறைப்பாட்டில் இன்னொருவரது பிரதிநிதித்துவமும் பறிக்கப்பட்ட முதற்சந்தர்ப்பம் இது வாகத்தான் இருக்கும். மைத்துனரை கொழும்பு வடக்கில் வெல்லச் செய்வதற்கு போய் இறுதியில் தனது அரசியலையும் தற்காலிகமாக நிறுத்த வேண்டியதாயிற்று.

**என்.சரவணன்**

வரும்

*'அரசாங்க சபையில் பெண்ணொருவர் அங்கத்துவம் வகிக்க கிடைத்தமை பெண் குலத்துக்கே பெருமையளிக்கிறது. நான் பழுத்த மூன்று சிங்கங்களுடன் போட்டியிட வேண்டியிருந்தது. எனவே எனது வெற்றி பெண்குலத்துக்கான பெரு வெற்றியாக கருதப்படவேண்டும்.'*
*–எட்லின் மொலமூரே*



*எட்லின் மீதெனிய அதிகாரி (மொலமூரே) 1890 ஆம் ஆண்டு செப்டெம்பர் முதலாம் திகதி ருவன்வெல்ல மீதெனிய பரம்பரையில் பிறந்தவர். திரு.ஜோன் ஹென்றி மீதெனிய அதிகாரி அவர்களும், திருமதி எமலி சேனநாயக்கவும் இவரது தகப்பன் தாயாவார். கொழும்பு பிஷப் கொலேஜ்ஜில் தனது கல்வியை முடித்துக்கொண்டு 1912 இல் மொலமூரே என்பவரோடு விவாகம் புரிந்தார். இவ்விவாகம் அன்றைய தேசாதிபதியாகவிருந்த சேர் ஹென்றி எட்வர்ட் மெகலம் ஆகியோர் உட்பட உயர்மேற்குடி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்ட பெரும் ஆடம்பர திருமணமாக நடாத்தப்பட்டது.*

*எட்லின் மொலமூரே இரண்டாவது அரசாங்க சபை தேர்தலில் போட்டியிட்டபோதும் லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட கலாநிதி என்.எம்.பெரேராவுடன் தோல்வியுற்றார். அத்தேர்தலில் கலாநிதி என்.எம்.பெரேரா 15,275 வாக்குகளையும், திருமதி.எட்லின் மொலமூரே 12,300 வாக்குகளையும் பெற்றிருந்தார். இதன்பின்பு இவர் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடவில்லை.*

*சோல்பரியாப்பு திட்டத்தின் கீழ் 1947 இல் உருவாக்கப்பட்ட செனற்சபைக்கு நியமிக்கப்பட்ட முதற்பெண் எட்லின் மொலமூரே ஆவார். 1961 வரை செனற்சபையில் அங்கம் வகித்த திருமதி.எட்லின் மொலமூரே 1955 இல் மேற்சபையில் உபதலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். வரலாற்றில் அப்பதவி வகித்த ஒரே ஒரு பெண்ணும் இவரேயாவர்.*

*கிறிஸ்தவ பெண்கள் சங்கம், லங்கா மகிலா சமித்தி, ஐக்கிய தேசியக்கட்சியில் பெண்கள் பிரிவு போன்ற அமைப்புக்களில் இருந்து செயற்பட்டிருந்தார். 1977 ஆம் ஆண்டு யூலை 27ம் திகதி தனது 87 ஆவது வயதில் மரணமடைந்தார்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தேசியவாதம்: தொடரும் விவாதம்-9(5)

# ஜனநாயக அடிப்படையில் சிறுபான்மை தேசியங்களுக்குத் தீர்வு!

## (இறுதிப் பகுதி)

சென்ற நான்கு கட்டுரைகளில் ''தேசியவாதத்திற்கும் - இனவாதத்திற்கும்'', ''தேசியவாதத்திற்கும் - மார்க்சியத்திற்கும்'', ''தேசியவாதத்திற்கும் - ஜனநாயகத்திற்கும்'' இடையிலான தொடர்புகளும் முரண்பாடுகளும் பற்றி ஆராய்ந்தோம். இனவாதம் என்பது தேசியவாதத்தைப் போலன்றி இயல்பாகவே இனங்களுக்கிடையிலான தர அடுக்கு தலைக் (Hierarchy) கொண்டுள்ளது; மார்க்சியவாதத்திலிருந்து தேசியவாதத்தை நியாயப்படுத்த முடியாது. ஜனநாயகத்திற்கும் தேசியவாதத்திற்கும் இடையில் ஓர் சிக்கலானதும் மறைமுகமானதுமான தொடர்பு உள்ளதே ஒழிய நேரடியான தொடர்பில்லை.

'நல்ல தேசியவாதத்தை'' ''கூடாத தேசியவாதத்திலிருந்து'' வேறுபடுத்துவதற்கு ஜனநாயக அளவுகோலை அறிமுகப்படுத்தினோம்.

இக்கட்டுரையில் ஓர் ஜனநாயக அமைப்பினுள் சிறுபான்மைத் தேசியங்களின் வேண்டுகோள்களையும், தேவைகளையும் எவ்வாறு பூர்த்திசெய்யலாம் என்பதையும் சுருக்கமாக ஆராய்வோம்.

### ஜனநாயக அடிப்படையின் முக்கியத்துவம்:

ஓர் தேசியவாதம் இனவாதத்தை நோக்கிச் செல்லும் போக்கை மட்டுப்படுத்துவதற்கான ஒரே ஒரு வழி ஜனநாயகமாகும். அதாவது தேசியவாதத்திற்கும் ஓர் ஜனநாயக நியாயத்தைக்கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே, அத்தேசியவாதத்தினுள் உட்கிடக்கையான ஜனநாயக விரோத இயல்புகள் வெளிப்படுவதைத் தவிர்க்கலாம். தேசியவாதத்தின் அடிப்படை ஜனநாயகம் என்றால் அத்தேசியவாதத்தினுள் ஜனநாயகம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். மேலும் தேசியவாதத்தின் அடிப்படை ஜனநாயகம் என்றால் இது எல்லாத் தேசியவாதங்கட்கும் பொருந்தும். எனவே ''பெருந்தேசியவாதம்'', ''சிறுதேசியவாதத்தின்'' உரிமைகளைப் புறக்கணிப்பதாலும் சரி, ''சிறியதேசியவாதம்'', ''சின்னஞ்சிறு தேசியவாதத்தின்'' உரிமைகளைப் புறக்கணித்தாலும் சரி அது ஜனநாயகத்தை மறுப்பதாகும்.

மேலும் தனிநபர் சமத்துவத்தைப் புறக்கணித்தால் அதுவும் ஜனநாயகத்தை மறுத்ததாகும். இதனால்தான் ''நல்ல தேசியவாதத்தை'', ''கூடாத தேசியவாதத்திலிருந்து'' பிரித்தறிய ஜனநாயகத்தை ஓர் அளவு கோலாகப்பயன்படுத்தலாம் என்ற முடிவுக்கு வருகிறோம்.

சிலர் தனிநபர் சுதந்திரத்தையும் அங்கீகரிக்காமல் ஓர் தேசத்தின் தனித்துவத்தின் அடிப்படையில் மட்டுமே அதற்கு அரசியல் அங்கீகாரத்தை வழங்கக்கோருகின்றனர். இத்தகைய அணுமுறையின் பிரதிகூலமான பக்கத்தை நாம் ''ஓட்டமான் சாம்ராஜ்யத்தில்'' (துருக்கி) வாழ்ந்த சிறுபான்மை இனங்களின் அரசியல் அங்கீகாரத்தில் காணலாம். அச்சாம்ராஜ்யத்தில் இஸ்லாமியர், யூதர், கிறிஸ்தவர்கள் ஆகியோர் வாழ்ந்தனர். இவ்வனைத்து மதக்கலாசாரங்கட்கும் தனித்துவம் வழங்கப்பட்டது. கிறிஸ்தவர்கட்கு தமது மதக்கலாசார அடிப்படையில் சுயாட்சியும், யூதருக்கு தமது மதக்கலாசாரத்தின் கீழ் சுயாட்சியும், இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த துருக்கியச் சக்கரவத்தியால் வழங்கப்பட்டது. அக்காலத்தின் ஏனைய நாடுகளை ஒப்பிடும் போது இது பன்முகத்தன்மையும், சகிப்புத்தன்மையையும் இனங்களுக்கிடையே சமாதானத்தையும் கொண்டிருந்தது. எனினும் தனிநபர் சமத்துவமும் சுதந்திரமும் இங்கு பாதுகாக்கப்படவில்லை. மதக்கலாசாரத் தனித்துவமும், சுயாட்சியும் அம்மதத்தலைவர்கட்கு தம்மைப் பின்பற்றுபவர்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் அரசியல் அதிகாரத்தை வழங்கி இருந்தது. உதாரணமாக, மதத்தின் பெயரால் பெண்களை ஒடுக்குதல் இம்மதக்கலாசாரத்தின் தனித்துவத்தின் அம்சமாக இருந்தது. இத்தனித்துவத்தையும் சுயாட்சியையும் மட்டும் அங்கீகரித்து தனிநபர் சுதந்திரத்தை அலட்சியம் செய்தால் அதனால் எழும் தேசியவாதப்போக்கு ஜனநாயகத்திற்கு முரணானதாக அமையும்.

இதுவரை எமது கட்டுரைத்தொடரில் ''ஜனநாயகத்திற்கும்'', ''தேசியவாதத்திற்கும்'' இடையிலான சிக்கலான உறவைப்பற்றி தத்துவார்த்தரீதியில் ஆராய்ந்தோம். இனி ஓர் ஜனநாயகத்தில் சிறுபான்மைத் 'தேசிய இனங்களின் அபிலாசைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல் நிறுவனங்களைப் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம். வில் கிம்லிகா என்ற கனேடிய அரசியல் தத்துவஞானியின் ''பல்கலாசாரக் குடியுரிமை'' (Multi cultural Citizenship by Will Kymlicka) என்ற புத்தகத்தில் அவர் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் இவ்விடயத்தை ஆராயலாம்.

ஓர் ஜனநாயகத்தில் சிறுபான்மையினரின் அபிலாசைகள் பின்வரும் நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. I. தனிநபர் உரிமைகள், II. பல் கலாசார உரிமைகள், III. விசேட பிரதிநிதித்துவம், IV. சுயாட்சி.

### தனிநபர் உரிமைகள்

வழமையாக நாம் தனிநபர் உரிமைகளை ஓர் இனத்தின் அபிலாசைகளை நடைமுறைப்படுத்த உதவும் நிறுவனமாகக் கருதுவதில்லை. இது நாம் தனிநபர் உரிமைகட்கும், கூட்டுரிமைகளுக்கும் (Group rights) இடையில் ஏற்படுத்துகின்ற போலி முரண்பாடாகும். ஆனால் சரித்திர ரீதியாக ஜனநாயக நாடுகளில் வாழும் சிறுபான்மை இனங்கள் தமது தனித்துவத்தையும், கலாசாரத்தையும் பேணிப்பாதுகாப்பதற்கு தனிநபர் உரிமைகள் முக்கிய பங்கு வகித்துள்ளன. ஒரு குழு தாம் விரும்பும் மதத்தைப் பின்பற்றவோ, தாம் விரும்பும் மொழியைப் பேசவோ, தாம் விரும்பும் கலாசாரத்தைப் பேணவோ தனிநபர் உரிமைகள் உதவுகின்றன.

ஏனெனில் சிந்தனைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் போன்றவற்றின் அடிப்படையில் மேற்கூறிய ஓர் குழுவின் அபிலாசைகள் ஓர் அளவுக்கு பூர்த்தி செய்யலாம். அடிப்படை உரிமைகள் பேணிக்காக்கப்படும் ஓர் நாட்டில் சிறுபான்மை இனங்களின் உரிமைகளும் அவற்றினூடாகப் பெருமளவுக்கு உத்தரவாதப்படுத்தப்படும். எனினும் இது போதாது. ஏனெனில் தனிநபர் உரிமைகளின் மூலம் ஓர் இனத்திற்கும், அதன் மொழி, கலாசாரத்திற்கும் அரசியல் அங்கீகாரம் பெற முடியாது. இதனால்தான் இனங்கள் வேறு விசேட நிறுவனங்களை ஸ்தாபிக்கும்படி அரசை வற்புறுத்துகின்றன.

### பல்கலாசார உரிமைகள்

பல்கலாசார உரிமைகள் என்பது ஓரினம் தனது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மத்திய அரசு நிறுவனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தல். உதாரணம்; கனடாவில் பிரெஞ்சு மொழிக்கும் இலங்கையில் தமிழ் மொழிக்கும் அரசியல் அந்தஸ்துகோருதல் இத்தகைய முயற்சியாகும்.

இங்கு ஓரினம் மத்திய அரசிலிருந்து பிரிந்து போவதைவிட அவ்வரசுடன் இணைந்து செயற்படும் போக்கையே பிரதிபலிக்கின்றது. இம்முயற்சியின் அரசியல் ஒழுக்கவியல் அடிப்படை என்னவெனில் மத்திய அரசின் அமைப்புகள் அனைத்தும் ஓர் நாட்டில் வாழும் அனைத்து இனக்கலாசாரங்களின் பண்பைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதே ஆகும்.

### விசேட பிரதிநிதித்துவம்

ஓர் நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்கட்குத் தகுதியான பிரதிநிதித்துவம் கிடைப்பது கடினம் என்ற அடிப்படையில் சில அரசியல் அமைப்புகளில் அவ்வினங்களுக்கு மேலதிகப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். இந்நிலைமை அவ்வினத்தின் சமூக, பொருளாதார பலவீனம் காரணமாக ஏற்படுத்தப்படலாம். அல்லது அவ்வினத்தின் குறைந்த எண்ணிக்கை காரணமாக ஏற்படுத்தப்படலாம். அல்லது அவ்வினம் ஓரிடத்தில் அடர்த்தியாக இன்றி பரந்து வாழ்வதன் காரணமாகவும் உருவாக்கப்படலாம். காரணம் எது என்பது முக்கியமல்ல. முக்கியம் என்னவெனில் அவ்வினத்தின் அபிலாசைகளையும் தேவைகளையும் அந்நாட்டின் தீர்மானமெடுக்கும் மன்றங்களில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு விசேட உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே.

இவ்வுரிமை தற்காலிகமாக இருக்கலாம் அல்லது நிரந்தரமானதாகவும் இருக்கலாம். இவ்வினங்களிடையேயான சமத்துவமின்மை காலப்போக்கில் அவ்விசேட பிரதிநிதித்துவத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டால் இப்பிரதிநிதித்துவத்தின் தேவை குறைந்து இறுதியில் அவசியமற்றுப் போகலாம், ஆனால் சமத்துவமின்மை நீடித்தால் இவ்விசேட பிரதிநிதித்துவத்தின் தேவையும் தொடரும்.

### சுயாட்சி

தேசிய இனங்களின் அபிலாசைகளை சுயாட்சியின் மூலம் நடைமுறைப்படுத்தலாம். சுயாட்சியில் ஓர் தேசிய இனத்திற்கு அதன் கலாசார உரிமைகள் மட்டுமன்றி, சில முக்கிய விடயங்களில் இறையாண்மையை ஒத்த அதிகாரங்கள் வழங்கப்படலாம்.

சுயாட்சியின் அடிப்படைக் கொள்கை என்னவெனில் சரித்திர ரீதியில் ஓர் தேசிய இனம் சுயாட்சியையும் தனித்துவத்தையும் அனுபவித்து வந்தமையால், அச்சுயாட்சிக்கு மீண்டும் அரசியல் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என அத்தேசிய இனம் வாதிக்கின்றது. இதில் சுயாட்சிக்காக வாதிப்பவர்கள் முன்வைக்கும் சரித்திரம் ''சரியா'', ''பிழையா'' என்பது முக்கியமல்ல (பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சரித்திரம் தவறாகவே காணப்படுகிறது). முக்கியம் என்னவெனில் முதற்குறிப்பிட்ட மூன்று நிறுவனங்களைப் போலன்றி சுயாட்சிக்காக வாதிப்பவர்கள் சரித்திரத்தைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதில் மேலும் ஓர் வித்தியாசம் என்னவெனில் முதற்குறிப்பிட்ட மூன்று நிறுவனங்களுக்காக வாதிடுபவர்கள் மத்திய அரசுடன் எவ்வாறு சேர்ந்து சமபிரஜைகளாகச் செயற்படுவது எப்படி என முயற்சிக்கின்றனர். ஆனால் சுயாட்சி கோருபவர்கள் பிரிந்து செல்வதற்கு எத்தனிக்கின்றனர்.

இதில் ஓர் அணுகுமுறை சரி மற்றது பிழை என்று கூறமுடியாது. எனினும் 2வது அணுகுமுறையில் (சுயாட்சி) அத்தேசியவாத இயல்புகள் வெளிப்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். இறுதியில் எத்தகைய நிறுவனத்தை எந்தளவுக்கு ஓர் சிறுபான்மைத் தேசிய இனம் கோர வேண்டும் என்பது அக்குறிப்பிட்ட தேசிய இனத்தின் அரசியல் சூழ்நிலையிலிருந்தும் அரசுடன் அது வைத்திருக்கும் தொடர்பிலிருந்தும் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இந்நான்கு நிறுவனங்களில் எது இலங்கையின் அரசியற் சூழ்நிலைக்குப் பொருத்தமானது என்பதை சற்றுப்பார்ப்போம்.

### இலங்கையில் சிறுபான்மை இனங்களின் உரிமைகள்

இலங்கையில் அடிப்படையில் மூன்று சிறுபான்மை இனங்கள் உள்ளன. I. வடகிழக்குத் தமிழர், II. மலையகத்தமிழர், III. முஸ்லீம்கள். மேற்குறிப்பிட்ட நான்கு நிறுவனங்களும் ஒவ்வோர் இனத்திற்கும் எந்தளவுக்குப் பொருந்தும் என்பதை ஆராய்வோம்.

வடகிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை சுயாட்சியின் அடிப்படையில்தான் தமது அபிலாசைகளை நடைமுறைப்படுத்த விரும்புகின்றனர். வட கிழக்கில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர் என்ற அடிப்படையிலும், அம்மக்களுக்குத் தனித்துவமான கலாசார விழுமியங்கள் உள்ளன என்ற அடிப்படையிலும், அம்மக்களுக்கு இதுவரையும் மத்திய அரசில் தகுதியான அரசியல் அதிகாரமும் பிரதிநிதித்துவமும் வழங்கப்படவில்லை என்ற அடிப்படையிலும், ஓர் காலத்தில் அம்மக்களுக்கென்று ஓர் தனிநாடு இருந்ததென்ற அடிப்படையிலும் சுயாட்சிக்கான கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

வட கிழக்கில் இணைந்த அரசியல் நிர்வாக அலகின் மூலம் இச்சுயாட்சிக்கான அபிலாசையைப் பூர்த்தி செய்யலாம். இவ்வலகுக்கு சட்டம், ஒழுங்கு, நிலம், நிதி போன்ற முக்கிய விடயங்களில் பூரண அதிகாரம் வழங்குவதன் மூலம் அவர்களின் சுயாட்சிக்கான அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படலாம். ஆனால் இந்த அதிகாரங்களை வட கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமே அனுபவிப்பார்கள். இன்று வட கிழக்குக்கு வெளியே பெரும்பான்மையான தமிழர்கள் வாழும் தருணத்தில் இத்தகைய சுயாட்சி அனைத்துத்தமிழ் மக்களின் விருப்பங்களைப்பூர்த்தி செய்யும் எனக்கொள்ள முடியாது. சுயாட்சியுடன் கூடவே, கொழும்பு, மலையகம் போன்ற தமிழ் மக்களும் செறிந்து வாழும் பிரதேசங்களில் விசேட பிரதிநிதித்துவமும் பல்கலாசார உரிமைகளும் (மொழி உரிமை போன்ற) வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் மட்டுமே இலங்கையின் அரசியற் கலாசாரத்தில் தமிழ் மக்களின் கலாசார விழுமியங்களும் பிரதிபலிக்கும்.

### முஸ்லீம்கள்

முஸ்லீம்களின் நிலைப்பாடு தமிழ் மக்களின் நிலைப்பாட்டை விட சற்றுவேறுபட்டது, சிக்கலானது. முஸ்லீம்களுக்கென்று விசேட அரசியல் நிறுவனங்களை முஸ்லீம் காங்கிரஸ் போன்ற முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகள் கோரவில்லை. இன்றைய இலங்கையில் முஸ்லீம்கள் நாடுதழுவிய ரீதியில் பரந்து வாழ்கின்றமையால், இங்கு தனிநபர் சுதந்திரம் உத்தரவாதப்படுத்தப்படுமிடத்து தமது இனத்தின் ஒருமைப்பாடும், தனித்துவமும் பாதுகாக்கப்படும் என நம்புகின்றனர்.

எனினும் தமிழ் மக்களுக்கு வட கிழக்கில் சுயாட்சி வழங்குவதன் மூலம் தாம் அனுபவிக்கும் அரசியல் பிரதிநிதித்துவதற்கு பங்கம் ஏற்படலாம் என அச்சப்படுகிறார்கள். இச்சூழ்நிலையில் முஸ்லீம் மக்களும் விசேட உரிமைகளைக் கோருவார்கள். நாடுதழுவிய ரீதியில் பரவலாக வாழும் முஸ்லீம் மக்களுக்கு சுயாட்சியை விட, விசேட பிரதிநிதித்துவம், பல்கலாசார உரிமைகள் முக்கியமானவை. வட கிழக்கில் செறிந்து வாழும் முஸ்லீம் மக்களுக்கு அவ்வரசியல் அலகினுள் சுயாட்சி வழங்கப்படும் அதேவேளை வட கிழக்கிலுள்ள ஏனைய முஸ்லீம்களுக்கும் தீர்மானமெடுக்கும் சபைகளில் விசேட பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். அதேவேளை முஸ்லீம் மக்களின் தனித்துவத்திற்கும் கலாசாரத்திற்கும் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

இலங்கை முழுவதிலும் முஸ்லீம் மக்களின் நிலைமையும் வட கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் நிலைமையும் வட கிழக்கில் வாழும் சிங்கள மக்களின் நிலைமையும் கிட்டத்தட்ட ஒன்றானவை. ஆகவே வட கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு அவ்வரசியல் அலகின் தீர்மானமெடுக்கும் சபைகளில் விசேட பிரதிநிதித்துவம் வழங்கப்படும் அதேவேளையில் அவர்களின் கலாசாரத் தனித்துவத்தைப் பாதுகாக்கவும் அவ்வரசினால் வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

இங்கு ஒவ்வோர் இனத்திற்கும் உள்ள தனித்துவமான தேவைகளும், அபிலாசைகளும் தீர்க்கப்பட வேண்டுமானால் அவ்வினங்களின் அரசியல், பொருளாதார புவியியல் அடிப்படைகளை கணக்கிலெடுத்து மேற்கூறிய இனங்களுக்கான விசேட நிறுவனங்களில் பொருத்தமானவற்றை பயன்படுத்தலாம். இதன் மூலம் இலங்கையில் ஜனநாயகத்தன்மையைப் பலப்படுத்தலாம்.

இக்கட்டுரைத் தொடரில் இலங்கை இனப்பிரச்சினையின் ஆணிவேரைத்தேடும் ஆழமான வரலாற்று விவாதங்கட்குச் செல்வது எனது நோக்கமாக இருக்கவில்லை. ஏனெனில் சரித்திரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நாம் எமது எதிர்காலத்தைத் தீர்மானிப்பதென்பது எம்மை நாமே அழித்துக் கொள்ளும் நிலையையே ஏற்படுத்தலாம். மாறாக நாம் விரும்பும் எதிர்காலத்தை நோக்கி நிலவும் யதார்த்தத்தை எவ்வாறு முன் தள்ளலாம் என்ற அடிப்படையிலேயே எனது விவாதங்களை முன்வைத்தேன்.

இலங்கையில் நிலவும் தேசியவாதங்களின் கொடியபக்கத்தைத் தவிர்ப்பதென்றால், தேசியவாதங்கட்கு ஜனநாயக அடிப்படையில் மட்டுமே நியாயம் வழங்கப்பட வேண்டும். அதனால் இந்த ஜனநாயக நியாயத்தின் அடிப்படையில் எவ்வாறு இலங்கையில் தமிழ், முஸ்லீம், சிறுபான்மை இனங்களின் உரிமைகட்கு அங்கீகாரம் வழங்கப்படலாம் என்பதை விபரித்தேன். இத்தகைய ஓர் அரசியல் ஒழுக்கவியல் அடிப்படையில் மட்டுமே இலங்கையில் ஜனநாயகத்துடனான சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்பது எனது உண்மையான அபிப்பிராயமாகும்.

வடகிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை சுயாட்சியின் அடிப்படையில்தான் தமது அபிலாசைகளை நடைமுறைப்படுத்த விரும்புகின்றனர். வட கிழக்கில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர் என்ற அடிப்படையிலும், அம்மக்களுக்குத் தனித்துவமான கலாசார விழுமியங்கள் உள்ளன என்ற அடிப்படையிலும், அம்மக்களுக்கு இதுவரையும் மத்திய அரசில் தகுதியான அரசியல் அதிகாரமும் பிரதிநிதித்துவமும் வழங்கப்படவில்லை என்ற அடிப்படையிலும், ஓர் காலத்தில் அம்மக்களுக்கென்று ஓர் தனிநாடு இருந்ததென்ற அடிப்படையிலும் சுயாட்சிக்கான கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

வட கிழக்கில் இணைந்த அரசியல் நிர்வாக அலகின் மூலம் இச்சுயாட்சிக்கான அபிலாசையைப் பூர்த்தி செய்யலாம். இவ்வலகுக்கு சட்டம், ஒழுங்கு, நிலம், நிதி போன்ற முக்கிய விடயங்களில் பூரண அதிகாரம் வழங்குவதன் மூலம் அவர்களின் சுயாட்சிக்கான அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படலாம். ஆனால் இந்த அதிகாரங்களை வட கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமே அனுபவிப்பார்கள். இன்று வட கிழக்குக்கு வெளியே பெரும்பான்மையான தமிழர்கள் வாழும் தருணத்தில் இத்தகைய சுயாட்சி அனைத்துத் தமிழ் மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் எனக்கொள்ள முடியாது. சுயாட்சியுடன் கூடவே, கொழும்பு, மலையகம் போன்ற தமிழ் மக்களும் செறிந்து வாழும் பிரதேசங்களில் விசேட பிரதிநிதித்துவமும் பல்கலாசார உரிமைகளும் (மொழி உரிமை போன்ற) வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் மட்டுமே இலங்கையின் அரசியற் கலாசாரத்தில் தமிழ் மக்களின் கலாசார விழுமியங்களும் பிரதிபலிக்கும்.

~ராம் மாணிக்கலிங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொ.ஜ.முவினரின் குத்துக்கரணம்!

என்.எஸ்.குமரன்





"அமெரிக்காவின் குரல் ஒலிபரப்பு நிலையம் அது தொடர்பாகப் பிரச்சாரப்படுத்தப்படும் அளவிற்கு பயங்கரமானதல்ல என அரசு கூறுகிறது. ஆனால் ரணவிலவில் உருவாக்கப்பட்டு வரும் 'அமெரிக்காவின் குரல்' இன்னும் 10 வருடங்களுக்குள் அமெரிக்காவின் யுத்த தளமாக மாறும்.

மலேசியா உட்பட பல நாடுகள் தங்களது நாடுகள் அமெரிக்காவின் குரல் ஸ்தாபிப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை. இந்த அமெரிக்காவின் குரல் எமது நாட்டுக்கு மட்டுமல்ல, எமது அயல்நாடான இந்தியாவுக்கும் பெரிய பிரச்சினையாகியுள்ளது. பல சோஷலிச நாடுகளின் வீழ்ச்சிக்கும் இந்த அமெரிக்காவின் குரலே காரணமாக இருந்துள்ளது. இந்த அமெரிக்காவின் குரலால் எமது நாட்டுக்கு எந்த ஒரு நன்மையும் ஏற்படப்போவதில்லை. இதன் பயனை அடையப்போவது அமெரிக்க அரசாங்கமே.

நாட்டின் இறைமைக்கும் சுயாதிபத்தியத்துக்கும் பெரும் சவால் இது. அரசு இவையொன்றையும் பற்றி தேடிப்பார்க்காமல் செயற்பட்டு வருகிறது. இது மக்களுக்கு செய்யும் பெரும் துரோகம். அமெரிக்கா எங்கள் நாட்டில் தலையிடுவதை நாங்கள் கண்டிப்பாக எதிர்க்கிறோம்."

இப்படி பேசியவர் வேறுயாருமல்ல, சாட்சாத் எமது இப்போதைய ஜனாதிபதி சந்திரிகா அவர்களே தான். 'அமெரிக்காவின் குரல்' (VOA - Voice of America) திட்டத்துக்கு எதிராக ரணவில மக்களும் சில அமைப்புக்களும் ஒன்றிணைந்து 93ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ம் திகதி நடாத்திய போராட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் அவ்வாறு தெரிவித்திருந்தார். (ஆதாரம்- லங்காதீப 93.10.12)

இன்னொரு விடயம்: இதே கூட்டத்தில் உரையாற்றிய இன்றைய பிரதமரும், அன்றைய எதிர்க்கட்சித் தலைவியுமான சிறிமா பண்டாரநாயக்க இப்படி உரையாற்றியிருந்தார்.

"அமெரிக்காவின் குரல் தொடர்பாக இலங்கையும் அமெரிக்காவும் செய்து கொண்டிருக்கிற ஒப்பந்தத்தின் பின்னணியில் பெரும் இரகசியம் உள்ளது. இதிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காகவே நாம் இங்கு கூடியிருக்கின்றோம். 'அமெரிக்காவின் குரல்' ஒலிபரப்பு நிலையத்தை அமைக்க இடம் கொடுத்தால் எமது நாடு பெரும் இழப்புகளை சந்திக்க நேரிடும். ஜே.ஆர் - ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தைப் போலவே இதுவும் மிகப்பயங்கரமானது"

சுதந்திரக்கட்சியின் வாக்குமூலம் இது என்றால் இதே கூட்டத்தில் உரையாற்றிய கொம்யூனிஸ்ட் கட்சி தலைவர் பேர்னாட் சொய்ஸாவோ,

"அமெரிக்கா மிக நவீன ஆயுதங்களுடன் தங்களை ஆயுதச் சூழலுக்குள்ளாக்கியுள்ளது. எனவே அமெரிக்காவின் போர்ச் சக்தி அதிகம். அமெரிக்காவுடன் ஏதாவதொரு நாடு போர் புரியுமானால் அந்நாடு முதலில் தாக்குவது அமெரிக்காவையல்ல. எமது நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டுவரும் ரணவில அமெரிக்காவின் குரலையே. அப்படியான ஒரு நிலையில் யுத்த பாதிப்புக்கு எமது நாடு இலக்காவதைத் தவிர்க்க முடியாது" என்று அமெரிக்காவின் குரல் ஸ்தாபிக்கப்படுவதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இவை எல்லாவற்றையும் இந்த நேரத்தில் நினைவுபடுத்த வேண்டியிருப்பதற்கான காரணம் மேற்படி கருத்துக்களை தெரிவித்த அனைவரும் அக்கருத்திலிருந்து இப்போது குட்டிக்கரணம் அடித்துவிட்டார்கள் என்பதால்தான். தற்போது அதை நியாயப்படுத்தவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

### VOA ரத்து பிரேரணை

95 மே 26 அன்று 'அமெரிக்காவின் குரல்' உடன்படிக்கையை ரத்து செய்வது தொடர்பான பிரேரணையை லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த பெட்டி வீரக்கோன் (இவர் பொ.ஜ.மு. உறுப்பினர்) சமர்ப்பித்த போது 125 மேலதிக வாக்குகளால் தோல்வி கண்டது. நான்கு பேர் மட்டுமே அமெரிக்காவின் குரல் ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரி வாக்களித்திருக்கின்றனர். பொ.ஜ.மு.வைச் சேர்ந்த பெட்டி வீரக்கோன், வாசுதேவ நாணயக்கார, அசோகா வீரசிங்க ஆகியோரும் தேசமீட்பு முன்னணியின் உறுப்பினர் நிஹால் கலப்பதியும் மட்டுமே இவ்வாறு ரத்து செய்யக்கோரி வாக்களித்தவர்களாவர்.



பேர்னாட் சொய்சா

இவ்வாக்கெடுப்பின் போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகளின் எம்.பிக்கள் எவரும் சமூகமளித்திருக்கவில்லை. வாசுவுக்கு வாலையும், சந்திரிகாவுக்கு தலையையும் காட்டி தங்களது பிழைப்பைக் காப்பாற்றிக் கொண்டார்கள். இந்தப் பிழைப்பை தமிழ்க் கட்சிகளது ஒற்றுமையின் சின்னமாகவும், வீரமாகவும் திரித்து சரடு விடுகிறது ஒரு தமிழ் வராந்திரி. என்னதான் முட்டிக் கொண்டாலும் பிழைக்கும் விடயத்தில் தங்களுக்கிருக்கும் ஒற்றுமையை வெளிக்காட்டியதற்கு நன்றி சொல்ல வேண்டும்.



நிஹால் கலப்பத்தி

இவ்வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த வை.பி.டி.சில்வா, கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே.பி.சில்வா ஆகியோர் வாக்கெடுப்பின் போது சபையில் சமூகமளித்திருக்கவில்லை. லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் பேனாட் சொய்ஸா வெளிநாடு சென்றுள்ளதால் சமூகமளித்திருக்கவில்லை. அதே கட்சியைச் சேர்ந்த அத்தாவுட செனவிரத்ன மற்றும் கொம்யூனிஸ்ட் கட்சி தலைவர் இந்திக குணவர்த்தனவும் கலந்து கொண்டிருந்த போதும் பிரேரணையை எதிர்த்தே வாக்களித்திருந்தார்கள்.



வாசுதேவ நாணயக்கார

இடதுசாரிகள் என அழைக்கப்படும் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகார சுகத்தை அனுபவிப்பதற்கு முன்னர், ஐ.தே.க. ஆட்சி புரிந்த போது அமெரிக்காவின் குரலுக்கு எதிராக **"அந்தோ! ஏகாதிபத்திய வல்லரசான அமெரிக்கா எமது நாட்டை போர்க்களமாக்க முயல்கிறது. உளவு வேலைகளுக்காக VOA வை** பயன்படுத்தப் போகிறது. அதற்கெதிராக போர்க்கொடி உயர்த்துவோம்'' என்றெல்லாம் வாய்கிழியக் கத்தியவர்கள் தான் இன்று ஆட்சியிலமர்ந்தவுடன் தங்களது சுகபோக அதிகாரக் கதிரையை கெட்டியாக இறுகப்பற்றிக்கொண்டு குட்டிக் கரணமடித்திருக்கிறார்கள்.

அண்மையில்: 'அமெரிக்காவின் குரல்' பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் பற்றியும், வாக்கெடுப்பின் போது கலந்து கொள்ளாதவர்கள் பற்றியும் ஜனாதிபதி சந்திரிகா விசாரணை செய்தார். பாராளுமன்ற கட்டிடத் தொகுதியிலேயே ஒரு அறையில் நடத்தப்பட்ட இவ்விசாரணையின் போது ஜனாதிபதி சந்திரிகா தன்னிடமிருந்த பெயர்ப்பட்டியலொன்றை கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொருவரையும் **"ஏன் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவில்லை?"** என தனது கேள்விகளை எழுப்பினார். சிலர் பதிலளிக்கும் போது தாங்கள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்ததாகவும் பட்டியலில் கோளாறிப்பதாகவும் அப்பாவித்தனமாக மன்றாடினர். இப்படியாக வாசுதேவ நாணயக்காரவின் பக்கம் கேள்வி திரும்பிய போது அவர்,



**"கட்சியின் கொள்கையின்படியே நான் வாக்களித்திருந்தேன். நானும் எனது கட்சியும் அன்று பொ.ஜ.முவுடன் சேர்ந்து அமெரிக்காவின் குரலை அப்புறப்படுத்துவதற்காக ஆர்ப்பாட்டம் செய்ததை நான் இன்னமும் மறக்கவில்லை. இன்றும் அவ்விடயம் தொடர்பாக எதிர்ப்பதற்கு எனக்கு உரிமையுண்டு. எனது கட்சி லங்கா சமசமாஜக்கட்சி. நாங்கள் பொ.ஜ.முவுடன் இணைந்திருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் அதற்காக கட்சியின் கொள்கையை மாற்றிக் கொள்ள நாங்கள் தயாரில்லை. தொடர்ந்தும் அரசாங்கம் இவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டால் அரசாங்கத்துக்கு நாங்கள் தரும் ஆதரவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிவரும். ஆனால் நாங்கள் இந்த அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு ஐ.தே.கவை ஆட்சியமைப்பதற்கு இடமளிக்கத் தயாரில்லை"** என்று குறிப்பிட்ட போது ஜனாதிபதி ஏளனச் சிரிப்பை பதிலாக அளித்தாராம். வாசுதேவ போன்ற சிலரைத்தவிர ஏனைய பலர் இவ்விடயத்தில் ஒளிந்து திரிந்து விளையாடினார்கள் என்பதை மறைக்க முடியாது.

அப்படியென்றால் அமெரிக்காவின் குரலால் இலங்கைக்கு எந்த பாதிப்பும் இல்லை என முன்னைய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் சொன்னதைத்தானே இவர்களும் திருப்பிச் சொல்லப் போகிறார்கள்.

அமெரிக்காவின் குரலுக்கு எதிராக மக்கள் முன்னெடுத்த போராட்டத்துக்கு வலிந்து போய் தலைமை கொடுத்தது எல்லாம் பம்மாத்து தானா? ஆட்சியைக் கைப்பற்ற வெறுமனே மக்களைப் பகடைக்காயாக்கியது தானா? அமெரிக்காவின் குரலை தடுத்து நிறுத்துவதாக அன்று கொடுத்த வாக்குறுதிகளெல்லாம் வெறும் ஏமாற்றுவித்தைகள் தானா? வெறும் வாக்குவேட்டைக்கான வாக்குறுதிகள் தானா?

### VOA பின்னணி

அமெரிக்காவின் குரல் பற்றிய ஒப்பந்தத்தை அமெரிக்க அரசும், இலங்கை அரசும் 1951 ம் ஆண்டு மே மாதம் 14 ம் திகதி செய்து கொண்டன. அதன் பின் 1983 டிசம்பர் 9ம் திகதி அவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது. 1991 டிசம்பர் 9ம் திகதி மீண்டும் அவ்வொப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது. அவ்வொப்பந்தத்தை ரத்து செய்யக்கோரிய பிரேரணை தான் பாராளுமன்றத்தில் தோல்வியுற்றது.

இவ்வொப்பந்தத்தின்படி இரணவில (புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேசத்தில் அமைந்துள்ள கரையோர பகுதி) பிரதேசத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பை அமெரிக்காவின் குரல் நிர்மாணிப்பதற்கு இலங்கை அரசு குத்தகைக்கு வழங்க வேண்டும். இதில் 413 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாண வேலைகள் முடியும் தருவாயில் உள்ளது. (இந்த 413 ஏக்கரானது இரணவில தோட்டத்தில் 295 ஏக்கரும், தொடுவாவ தோட்டத்தில் 43 ஏக்கரும், கலஹிடிய தோட்டத்திலும், லுணுகங்க ஆற்றின் நடுவில் உள்ள வில்லுவ தீவிலும் 71 ஏக்கரையும் கொண்டது)

பெரும் தென்னந்தோப்புகள் அமைந்த இப்பிரதேசத்தில் 'அமெரிக்காவின் குரல்' நிர்மாண வேலைகளைக் காரணம் காட்டி 700 0க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. அப்பிரதேசத்தைச் சேர்ந்த பல குடும்பங்களும் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களது பாரம்பரிய மீனவத் தொழிலைக்கூட செய்யவிடாது இப்பிரதேசத்தில் மீனவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் மீன் பிடிக்கக்கூடாது என்றும் விரட்டப்பட்டுள்ளனர்.

அதேவேளை அமெரிக்காவின் குரல் செயற்பாடுகளுக்கென்று ஐதரசன் மின் உற்பத்தி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. வெறுமனே ஒரு ஒலிபரப்பு நிலையத்துக்காக 1500 கிலோவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டுவருவது பலரை சந்தேகப்பட வைத்துள்ளது. அது மட்டுமன்றி ஐதரசன் மின் உற்பத்தியால் அப்பகுதி என்றாவது ஒருநாள் பெரும் விபத்துக்கோ சூழல் அழிவுக்கோ உள்ளாகுமென்று அஞ்சப்படுகிறது. அது போல் அமெரிக்காவின் குரல் அமைந்திருக்கிற பிரதேசத்துக்குள் வெளியார் உட்செல்ல அனுமதிக்கப்படுவதுமில்லை. இத்தனை இரகசியம் காக்க விரும்புவதற்கு காரணமென்ன என்று பலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சர்வதேச ரீதியில் அமெரிக்காவால் நடத்தப்பட்ட, நடத்தப்படும், அடாவடித்தனங்களை மூடிமறைப்பதற்கும், நியாயப்படுத்துவதற்கும் இந்த அமெரிக்காவின் குரலை அதிக பட்சம் பயன்படுத்தப்பட்டுவருவது தெரிந்ததே. இன்று உலகில் 14க்கும் மேற்பட்ட நாடுகளில் அமெரிக்காவின் குரல் நிறுவப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஆதிக்க வளர்ச்சியானது ஏனைய நாடுகளில் இராணுவ பயமுறுத்தல் வரை முன்னேறியுள்ள நிலையில் இது போன்ற அமெரிக்க பிரச்சார நிறுவனங்களை இலங்கைக்குள் வைத்துக்கொள்வதானது நாட்டு மக்களுக்கான பெரும் துரோகச் செயல் மட்டுமல்ல, இலங்கைக்கான பேரச்சுறுத்தலும் கூட.

இன்று வட கிழக்கு மக்கள் மீதான யுத்தம் என்ற பேரில் நடத்தவிருக்கிற இன அழிப்புக்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்துக்காக அலைந்து திரியும் அரசாங்கத்துக்கு அமெரிக்காவை திருப்திபடுத்துவது முன்நிபந்தனையாகியுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது.

இன்று எழுந்துள்ள அமெரிக்காவின் குரல் எதிர்ப்பு நடவடிக்கைகள் அமெரிக்காவின் கௌரவப்பிரச்சினையாகியுள்ளது என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்ட போதிலும் அமெரிக்காவின் கைக்கூலியாக மாறி தனது வர்க்க குணாம்சத்தை காட்டியிருக்கின்ற ஆளும் பொ.ஜ.மு அரசாங்கத்துக்கோ இது வெறும் பிழைப்புவாதப் பிரச்சினை மட்டுமே.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "சிங்களத் தலைவர்களிடம் தொலைநோக்கான பார்வை இருக்கவில்லை!"

~ராவய ஆசிரியர் விக்டர் ஐவன்



விக்டர் ஐவன்

சிங்களத்தில் வெளியாகும் 'ராவய' என்கிற வாராந்தர மாற்றுப் பத்திரிகையின் ஆசிரியர். கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் ராவய, தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் குறித்து தொடர்ச்சியாக அக்கறையுடன் எழுதி வந்திருக்கிறது; வருகிறது. ஆனையிறவுச் சமரின் போது ராவய பத்திரிகையாளர்கள் ஆனையிறவிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைத்த கள அறிக்கைகள், யுத்தத்தின் கொடூரத்தை சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்துவனவாக இருந்தன.

விக்டர் ஐவன் '71 இல் நடைபெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது ஜே.வி.பியின் முக்கியமான தலைவர்களுள் ஒருவராக இருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவரை ஒரு காலை வேளையில் அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை முறிவு, மூன்றாவது ஈழயுத்தம், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பன குறித்து நீண்ட உரையாடலை நடாத்தியது சரிநிகர். அவருடனான உரையாடலிலிருந்து சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன. சரிநிகர் சார்பில் விக்டர் ஐவனுடன் உரையாடியவர்கள்: சிவகுமார், எஸ்.செல்வன்.

**அரசு புலிகள் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது பற்றி:**

பேச்சுவார்த்தைகளில் நான் கலந்து கொண்டதாகக் கூறப்படுவதை முற்று முழுதாக நிராகரிக்கிறேன். அரசாங்கத்திடம் இனப்பிரச்சினை தொடர்பாக ஆழமான கருத்துக்கள் எதுவுமிருக்கவில்லை.. உண்மையிலேயே பொறுப்புணர்வுள்ள ஒரு கட்சியாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இருந்திருந்தால் அது எதிர்க்கட்சியிலிருக்கும் போதே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும், ஏனைய தமிழ் இயக்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கலாம். ஒரு உறுதியான, நிலையான எதிர்க்கட்சி என்ற வகையில் அவர்கள் ஆட்சிக்கு வர முன்பே அதனைச் செய்திருக்கலாம். பிரச்சினையைக் கையாள்கையில் வன்முறையை நுண்ணியதாக விளக்கிக் கொள்ள சிங்களச் சமூகத்திற்கோ, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கோ முடியவில்லை. அவர்கள் சில நேரங்களில் அடிப்படைகளை மறந்துவிட்டு மேலோட்டமாகத் தெரியும் விடயங்களின் அடிப்படையிலேயே அனைத்தையும் முடிவு செய்கின்றனர். மனிதாபிமானமற்றமை, மனிதக் கொலைகள், உயிரிழப்புக்கள் இவற்றுடனேயே உணர்ச்சிபூர்வமாக (Emotionally) விடயங்களைப் பார்க்கின்றனர்.

பிரபாகரனுடன் கொடுக்கல் - வாங்கல் செய்ய அநேகருக்கு விருப்பமில்லை என்று நான் நினைக்கிறேன். எனது தனிப்பட்ட கருத்தும் கூட வே.பிரபாகரனுக்குப் பதிலாக அவ்விடத்தில் சா.ஜே.வே. செல்வநாயகம் அல்லது அமிர்தலிங்கம் இருந்திருந்தால் நல்லது என்பதாகும். ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக நாம் விரும்புகிறவர்கள் அல்ல நாம் கொடுக்கல் - வாங்கல் செய்ய வேண்டியிருப்பவர்கள். அமிர்தலிங்கம் சமாதானத்தை விரும்பினார். நாம் அவர்களின் தலைகளைப் பிளந்தோம். சுந்தரலிங்கத்தின் மண்டையைப் பிளந்தனர். செல்வநாயகம் போன்றோரைச் சமாதான வழியில் செயற்பட நாம் விடவில்லை. இறுதியாகத் தமிழ் சமூகத்திலிருந்து வரலாற்று பூர்வமாக மேலெழுந்துள்ளவரே பிரபாகரன். அவர் குரூரமானவராக இருக்கலாம். என்றாலும் அவர் எமக்குக் கீழ்ப்படாதவர், நாங்கள் ''ஓடு'' என்று சொல்லும் போது ஓடாதவர் அவர். சிங்கள சமூகம் அன்று கனவான் ஒருவருடன் கொடுக்கல் - வாங்கல் செய்யத் தயாராக இருந்திருந்தால் இன்று இவ்வாறான நிலைமை ஒன்று தோன்றியிருக்காது. எனவே, நல்ல மனிதர்களுடன் கொடுக்கல் - வாங்கல் செய்யக்கூடிய யுகம் முடிவடைந்து விட்டதெனவே நான் கருதுகிறேன். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிரபாகரனுடன் தான் நாம் கொடுக்கல் - வாங்கல் செய்ய வேண்டியுள்ளது. இதுதான் உண்மை யதார்த்தமாகும்.

இந்த அம்சம் கவனத்திற்குரியதொன்றாகும். பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும், குறிக்கோளில் வெற்றி பெறுவது எப்படி என்பது தொடர்பாகவும் அரசாங்கத்திற்கு எதுவித அறிவும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.

அனைத்தின மக்களும் தங்களை ஆதரிக்கிறார்கள் என்றும் தமிழ் மக்கள் கூட எங்களைப் பற்றியே சிந்திக்கிறார்கள் என்றும் இப்போது அவர்கள் தங்கள் தலைவர்களைக் கைவிட்டுவிட்டனர் என்பதான ஒரு மனநிலையிலிருந்தே அரசாங்கம் இக்கொடுக்கல் - வாங்கலுக்குச் சென்றது.

இதுவே அடிப்படையான தவறு. அரசாங்கம் கொடுக்கல் - வாங்கல் செய்ய வந்த விதம் குறித்து அவர்கள் சிரித்தபடி பார்த்து நின்றனர். அவர்களுக்குத் தேவையாயிருந்தது காலம் மட்டுமேயாகும். ஒரேயடியாக மக்கள் வெற்றியொன்றைப் பெற்றுக் கொண்ட அரசாங்கமொன்றுடன் மோதலுக்குச் செல்ல முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

சில நேரங்களில் பிரபாகரனையும் மீறித் தமிழ் மக்களுடன் கொடுக்கல் - வாங்கல் செய்யலாம் என அரசு கருதியது. கெரில்லா இயக்கமொன்றுடன் - அது பாசிசவாத கெரில்லா இயக்கமென்றாலும் சரி- அரசு அவ்வாறு செயற்பட்டிருக்கக்கூடாது. அது பயங்கரமானதாகும். அரசாங்கம் அப்பிழையைச் செய்தது. அரசாங்கம் அப்பிழையைச் செய்தாலும், பிரபாகரனும் பேச்சுவார்த்தை தொடர்பாக இவ்வளவு இறுக்கிப்பிடிக்குமளவிற்கு இருந்திருக்கத் தேவையில்லை. யுத்தத்தை தொடங்காமல் வேறு மாற்று நடவடிக்கை பற்றி அவர் சிந்தித்திருக்கலாம்.

இப்போது முழுச் செயற்பாடுமே மிகப்பாரிய விதத்தில் இறுகிப்போயுள்ளது. இதுவரை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நடாத்திய விதம் தவறானாலும் அவ்வழியிலேயே மறுபுறமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்தை நடாத்திய விதம் மிகக் கடுமையானதாகும். அது முழுக்கொடுக்கல் - வாங்கலையுமே இறுக்கியது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்த நடவடிக்கைக்குப் போகாவிடின் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் எனச்சிலர் வாதாடலாம். மறுபுறத்தில் புலிகள் செய்யாதிருந்தால் அரசாங்கம் இதனைப் பாரிய பிரச்சினையாகப் பார்த்திராது என்றும் தர்க்கிக்க இடமுண்டு.

பிரபாகரனுடன் கொடுக்கல் - வாங்கலொன்றிற்குச் செல்வதானால் இனப்பிரச்சினைக்குப் புறம்பாக அரசிடம் தீர்வுகள் இருந்திருக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திருப்திப்படக் கூடியதும், பிரபாகரனின் எதிர்காலம் பற்றிப் பிரபாகரன் திருப்திப்படக் கூடியதுமானதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளியொருவரையும் எதிர்காலத்தில் திருப்திப்படுத்தக் கூடியதுமான தீர்வொன்று இல்லாது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசுவது கேலியானதாகும்.

***மீண்டுமொரு தீர்வு முயற்சியின் சாத்தியம் பற்றி/***

பிரபாகரனுடன் கொடுக்கல் - வாங்கல் செய்ய வேண்டிய நிலைமைக்குச் சமூகத்தைக் கொண்டு வந்தது நாமேயாகும். அதிலிருந்து தொடங்க வேண்டும். இவ் உண்மையை அரசாங்கம் விளங்கிக் கொள்ளவில்லை. இனியும் விளங்கிக் கொள்ளுமா என்பது பற்றியும் எனக்குத் தெரியாது.

நாம் தான்தோன்றித்தனமாக செயற்பட்டால் இம்முழுச் சமூகமும் உடைந்து விழும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒருவித அரசதிகாரத்தை வழங்க வேண்டும். அதற்கு ஜனநாயகம் ஒரு முன் நிபந்தனையாக இருக்கத்தேவையில்லை என்பது எனது கருத்தாகும். அவர்களுக்கு ஜனநாயகம் தேவையா? இல்லையா? எனத்தீர்மானிக்க வேண்டியது நாமல்ல! தமிழ் மக்களே! பிரபாகரன் தேவையா? இல்லையா? என எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தீர்மானிப்பர். அதனைத் தீர்மானிக்க எமக்கு உரிமை இல்லை.

எமது சமூகங்கள் உடைந்து விழுவதைத் தவிர்க்க அரசாங்கம், பிரபாகரனுடன் உடன்பாடொன்றிற்குச் செல்வதை விட இப்போது வேறு வழியேதும் இல்லை. பிரபாகரனை யுத்தத்தினால் தோல்வியுறச் செய்யலாமென நாம் நம்பவில்லை.

அவ்வாறு செல்கையில் பிரபாகரனிற்கு வழங்க அரசாங்கத்திடம் ஏதாவது இருக்க வேண்டும். பிரபாகரன் இப்போது நிறையவே பெற்றுள்ளார். அதற்கு ஒரு அங்குலமாவது அதிகமாக கிடைத்தால் மட்டுமே அவர் உடன்பாடொன்றிற்கு வருவார். அதனை வழங்க நாம் தயாரா? இல்லையா? என்பதுதான் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

துரதிர்ஷ்டவசமாக எமது சிங்களத் தலைவர்கள் ஒரு போதும் தொலை நோக்குள்ளவர்களாக இருக்கவில்லை.

***அரசியலமைப்பு மாற்றம் பற்றி:***

முழு அரசு அமைப்பையே மீளமைப்புச் செய்ய வேண்டிய காலகட்டத்திற்கு நாம் வந்துள்ளோம். நான் பேசுவது சமஷ்டி முறை பற்றியல்ல, அதற்கும் அப்பால் அதாவது வடபகுதி மக்களைத் திருப்திப்படுத்த தீர்வொன்றைக் கொண்டு வந்தால் மட்டும் போதாது. அரச அமைப்பை மீளமைப்புச் செய்யாவிடின் எதிர்காலத்தில் எழக்கூடிய நிறையப் பிரச்சினைகள் உள்ளன. மலையகப் பிரச்சினை உள்ளது; முஸ்லீம் மக்களது பிரச்சினையொன்று உள்ளது; தென்பகுதி இளைஞர்களின் பிரச்சினையொன்று உள்ளது. இங்கே தென்னாபிரிக்காவின் உதாரணத்தை நாம் பின்பற்ற வேண்டும். பிரபாகரனும், முஸ்லீம் மக்களும், மலையக மக்களும், ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன்னணி) போன்ற இயக்கங்களும் ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க. போன்ற அமைப்புகளும் ஒரே மேசையில் அமர்ந்து எமது அரச வியூகம் எவ்வாறு புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டுமெனக் கலந்துரையாடிச் சரியான அதிகாரப் பரவலாக்கமொன்றிற்குச் செல்ல வேண்டும். இதுதான் எனது தீர்வு ஆகும். அதில் உறுதியாகவே நாட்டின் ஒரு பகுதியினருக்குத் தலைவராகப் பிரபாகரன் இருப்பார். இதனை யாராலும் தவிர்க்க முடியாது. இதனை நாம் அனைவரும் அங்கீகரித்தே ஆக வேண்டும். அவர் நல்லவரா? கெட்டவரா? என்பதல்ல பிரச்சினை.

***பேச்சுவார்த்தைக் காலத்திலேயே புலிகள் மீது அரசு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது பற்றி:***

குற்றச்சாட்டுக்கள் மற்றும் இருசாராரும் கிளப்புகிற விவாதங்கள் ஆகியவற்றை முக்கியமானவைகளாக நான் கருதவில்லை. ஆரம்ப பேச்சுவார்த்தைகள் நல்ல புரிந்துணர்வுடன் செய்யப்படவில்லை. அரசாங்கம் பிரபாகரனை விளங்கிக் கொள்ள வேண்டும். தான் யாருடன் செயற்படப்போகிறேன் என. பிரபாகரனுக்கும் தான் விளங்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

பிரபாகரனை விட நாம் யோசனையுடன் நடந்து கொண்டிருக்க வேண்டும். பிரபாகரன் சோபோர்ன் பல்கலைக்கழகத்துக்கு செல்லவில்லைத்தானே? சந்திரிகா தான் சென்றவர். எனவே அவர் (பிரபாகரன் மீது குற்றஞ் சுமத்துவதை விட) மிக நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அவர்கள் போரில் தோல்வியுற்றதனாலல்ல பேச்சுவார்த்தைக்கு வந்தது. இடை நடுவில் அதாவது இச்சமூகத்தில் ஏற்பட்ட நிர்ப்பந்தங்கள் ஊடாகவாகும். எனவே தமது பலத்தை அரசாங்கம் சரியான முறையில் கணக்கிட வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இது யுத்தமொன்று இடைநடுவில் நிற்கும் எச்சந்தர்ப்பத்திலும் சட்ட ரீதியாகவே (சட்டம் என்ற வகையிலேயே) நடைபெறும் ஒன்றாகும். ஆனால் அரசாங்கம் அவ்வாறு கணக்கிடவில்லை. அவ்வாறு கணக்கிடாததே அவர்கள் செய்த தவறு. நாங்கள் நினைத்ததை விட அவர்கள் பலமானவர்கள் எனக்காட்ட அவர்கள் பெரும் ஆயுதங்களைப் பாவித்துப் படையினரைக் கொன்றனர். அவ்வாறு நடக்காதிருக்க இடமிருந்தது. உண்மைக் கணக்கீடு ஒன்றுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்றிருந்தால் அவ்வாறு நடைபெற்றிருக்காது. நாம் பிரபாகரனின் பலத்தை ஏற்றுக் கொண்டு பேசுவோம். ஆரம்ப நுழைவே பிழை என நான் காண்கிறேன்.

அடுத்த என்னுடைய தனிப்பட்ட கருத்தானது, கெரில்லா இயக்கமொன்றுடன் செயற்படுகையில் அவசியமற்ற விதத்தில் அவர்களின் கைகளில் உள்ள இரத்தக் கறைகளின் அளவைப் பார்க்காது இருக்க வேண்டும். இயல்பாகவே கெரில்லா இயக்கமொன்று மனிதக் கொலைகளைச் செய்யும். சிலர் குறைவாகக் கொல்வர், சிலர் அதிகமாகக் கொல்வர். அதாவது மிகப்பெரிய கெரில்லா இயக்கங்களின் தலைவர்கள் கூட கொலை செய்துள்ளனர். இது பிரபாகரனுக்கு நான் வழங்கும் சான்றிதழ் அல்ல. கொலைகளை உமா மகேஸ்வரனும் செய்தார், பத்மநாபாவும் செய்தார். ஹோ - சி- மின் கூடச் செய்தார். சேகுவேராவும் செய்தார். நான் சேகுவேராவோடு பிரபாகரனைச் சமப்படுத்தவில்லை. ஆனாலும் ''ஐயோ! அவர்களின் கைகளில் இரத்தமல்லவா'' என்று முறையிடுவோமாயின் அவர்களுடன் பேச ஆரம்பிக்கக் கூடாது. தற்போது வாதப்பிரதிவாதங்களில் கூட சந்திரிகா ''பிரபாகரன் தற்பெருமைக்காரன், பெருமை பிடித்தவன் என்று தான் கூறுகிறார். அவ்வாறெனில் ஏன் இவ்வளவு நாட்களாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டீர்கள்? இப்பொழுது அதைச் சொல்ல வேண்டியதில்லைத்தானே.



***சந்திரிகா பிரபாகரனால் ஏமாற்றப்பட்டார் என்ற அபிப்பிராயம் குறித்து:***

இங்கே ஒரு பிரச்சினையிருக்கிறது. முழுச் சம்பவங்களையும் ஆழநோக்காது மேலெழுந்தவாரியாகப் புரிந்துகொள்ளும் ஒருவருக்கு சந்திரிகா 'பாவம்' என்பதுபோலவே படும்.

சந்திரிகா எல்லாவற்றையும் செய்தார் ஆனாலும் அவரால் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியவில்லையே என மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்கள் கூறுகின்றனர்.

சிங்களச் சமூகத்திற்கு எவ்வளவு பலவீனங்கள் நிலவியபோதும் தற்போதைக்குள்ள நல்லதொரு தலைவர் சந்திரிகா குமாரணதுங்கவே தான். துரதிர்ஷ்டவசமாக இன்னும் அவர் தேவையை மீறி சிங்களத் தலைவராகவே காட்சி தருகிறார்.

கெரில்லா இயக்கம் ஒன்றின் மீது குற்றம் சாட்டுவதைவிடுத்து நாம் நேர்மையாக இருக்க வேண்டும். எங்களால் செய்யப்பட்ட பிழைகள் என்ன என்பதை நேர்மையாகப் பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாங்கள் மிகவும் தீர்மானகரமான புள்ளி ஒன்றில் நிற்கிறோம் என்று கருதுகிறேன். நாங்கள் பாரிய அழிவொன்றை நோக்கிச் செல்வதா இல்லையா என்பதை முடிவுசெய்ய வேண்டிய கடினமான நிலையில் நிற்கிறோம்.


→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும்-6



ஏ.அஸீஸ்



கோ.நடேசய்யர்

## சிங்களத் தலைவர்கள் சுதந்திர இந்தியாவுக்கு அஞ்சினர்! தமிழ் தலைவர்கள் சுதந்திர இலங்கைக்கு அஞ்சினர்!

**பீ.ஏ.காதர்**

டொனமூர் அரசியலமைப்பு எச்சாராரையும் திருப்திப்படுத்தவில்லை. பிரித்தானிய காலனியை டொமினியன் அந்தஸ்து பெற்று விசுவாசமாக நிர்வகிக்கக் கூடிய பிரதிநிதித்துவ ஆட்சி முறைக்கு உள்ளூர் தலைவர்களை பயிற்றுவிக்கும் பள்ளியாகவும் தேவையான தருணங்களில் இனவேறுபாடுகளை தூண்டிவிட்டு காலனித்துவ நலனை பேணிக் கொள்வதற்கு அவசியமான ஏற்பாடுகளையும் அது செய்தது.

தமக்கு அதிகாரம் போதாதென சிங்கள தலைவர்கள் முறையிட்டனர். தமக்கு எந்த அதிகாரமும் - போதிய பிரதிநிதித்துவமும் கிடையாது என சிறுபான்மை சமூகத்தினர் குறைபட்டனர். அனைவருமே காலனித்துவ எசமானுக்கு தாம் விசுவாசமாய் இருப்பதாக நிச்சயப்படுத்திக் கொண்டே ஒருவரின் முதுகுக்குப் பின்னராய் மற்றவர் பேரம் பேசினர். எவரும் சுயாட்சி கோரவில்லை. சிங்களத் தலைவர்கள் சுதந்திர இந்தியாவுக்கு அஞ்சினர். சின்னஞ்சிறு இலங்கை 'சுதந்திரம் என்ற பெயரில்'' பிரித்தானியரால் கைவிடப்படுமானால் இந்தியா இலங்கையை ஏப்பமிட்டு விடும் என்ற மனப்பீதி அவர்களுக்கு. தமிழ் தலைவர்கள் சுதந்திர இலங்கைக்கு அஞ்சினர். பிரித்தானியரால் அரவணைப்பு இல்லை என்றால் சிங்கள ஆதிக்கவாதிகள் தம்மை நசுக்கிவிடுவர் என்பது அவர்களது மனப்பிராந்தி. எனவே இருசாராரும் பிரித்தானியரிடம் பாதுகாப்பிற்காக மண்டியிட்டனர். இருவரையும் மோதவிட்டுக் கொண்டு இருவருக்கும் இன்றியமையாத நண்பனாக பிரித்தானிய ஏகாதிபத்தியம் பாதுகாப்பாக இருந்து கொண்டது. சுயாட்சி கோரியவர்கள் இடதுசாரிகள் மாத்திரமே. அவர்கள் அடக்குமுறைக்கும் சிறைவாழ்வுக்கும் உள்ளாயினர்.

தொடர்ச்சியான சீர்திருத்த கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, இறுதியாக, 1943ல் பிரித்தானியா ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. இதன்படி யுத்தம் முடிவடைந்ததும் முடியின் கீழ் முழுமையான பொறுப்பாட்சி ( டொமினியன்) வழங்கப்படும். இலங்கையின் பாதுகாப்பும், வெளிவிவகாரங்களும் பிரித்தானிய வசமிருக்க ஏனைய அனைத்து விவகாரங்களும் இலங்கையர் பொறுப்பில் விடப்படும்; இதற்கமைவாக இடைக்காலத்தில் மந்திரிகள் தமது பிரேரணைகளை முன்வைத்து அரசசபை பிரதிநிதிகளில் 3/4 பங்கினரின் ஒப்புதலைப் பெற்று அனுப்பலாம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் மந்திரிமார் தமது நகல் திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்தனர். இதேவேளை தமது நலன்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை என சிறுபான்மைக் குழுவினர் புகார் செய்தனர். இந்தியாவும் இலங்கை வாழ் இந்தியரின் எதிர்காலம் குறித்து அச்சம் தெரிவித்தது. இவற்றை ஆராய்ந்த குடியேற்ற மந்திரி 1944 ஜூலை பிரித்தானிய பாராளுமன்றில் இலங்கை மந்திரிகள் இலங்கையிலுள்ள பல்வேறு சமூகத்தினரதும் கருத்துக்கள் அறியப்படும், அதற்காக விசாரணைக்குழு ஒன்று இலங்கைக்கு அனுப்பப்படும் எனக்கூறினார்.

இதற்கு இலங்கை மந்திரிமார் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். 1943ம் ஆண்டு பிரகடனத்தில் சிறுபான்மையினரின் கோரிக்கைகளை விசாரிக்க விசேட குழு ஒன்றை அனுப்புவதாக குறிப்பிடப்படவில்லை; குடியேற்ற மந்திரி வாக்குறுதி தவறிவிட்டார் என குற்றஞ்சாட்டி விசாரணைக்குழுவை பகிஷ்கரிப்பது எனத் தீர்மானித்தனர்.

1944 டிசம்பர் மாதம் பிரித்தானிய அரசு தான் கூறிய விசேட குழுவை சோல்பரி பிரபு தலைமையில் இலங்கைக்கு அனுப்பிவைத்தது. 1945 ஏப்ரல் வரை பல்வேறு சமூகங்களினதும் குழுக்களினதும் கருத்துகளை அறிந்து தனது வரைபை அக்குழு பூர்த்தி செய்தது. இலங்கை மந்திரிமார் தயாரித்து அனுப்பிய ''ஸ்ரீ லங்கா மசோதா''வும் ஆராயப்பட்டது. மந்திரிமார் தமது பகிஷ்கரிப்பு தீர்மானத்திற்கு அமைய ஒரு குழுவாக சாட்சியமளிக்கவில்லையே தவிர சமுதாய முறைப்படி பல இடங்களுக்கும் அக்குழுவுடன் கூடச்சென்று உதவினர். டி.எஸ்.சேனநாயக்க தனிப்பட்ட முறையில் இக்குழுவை சந்தித்து தனது கருத்தை கலந்துரையாடினார்.

1947 தேர்தல் முடிவுகள் - (மலையக தேர்தல் தொகுதிகள்)

| | சின்னம் | வாக்குகள் |
|---|---|---|
| 1. நுவரெலியா: | | |
| வீ.ஈ.கே.ஆர்.எஸ்.தொண்டமான் | (நட்சத்திரம்) | 9,386 |
| ஜே.ரீ.ரத்தினம் | (கை) | 3,251 |
| லோறன்ஸ் பெரேரா | (யானை) | 1,124 |
| 2. தலவாக்கலை: | | |
| சி.வீ.வேலுப்பிள்ளை | (கை) | 10,645 |
| பீ.எம்.வேல்சாமி | (நட்சத்திரம்) | 933 |
| எச்.வி.ராம் ஈஸ்வர் | (சைக்கிள்) | 801 |
| ரீ.சந்தனம் | (யானை) | 684 |
| 3. கொட்டகலை: | | |
| கே.குமாரவேலு | (யானை) | 6,722 |
| யூ.பீ.ஜயசுந்தர | (சைக்கிள்) | 3,179 |
| ஐ.எட்வர்ட் | (கை) | 1,175 |
| ஈ.வணிகசேகர | (சாவி) | 782 |
| எஸ்.செல்லையா | (நட்சத்திரம்) | 251 |
| 4. நாவலப்பிட்டி: | | |
| கே.ராசலிங்கம் | (சைக்கிள்) | 7,933 |
| ஆர்.ஈ.ஜயதிலக | (குடை) | 6,491 |
| ஏ.எச்.டி.சில்வா | (யானை) | 787 |
| எஸ்.என்.பொன்னையா | (கை) | 336 |
| 5. மஸ்கெலியா: | | |
| ஜீ.ஆர்.மோத்தா | (கண்ணாடி) | 9,086 |
| பீ.ரீ.டபிள்யூ.குணபால | (வீடு) | 3,949 |
| கே.நடேச ஐயர் | (குடை) | 918 |
| ரீ.எம்.சொலமன் | (கை) | 598 |
| 6. அலுத்நுவர: | | |
| ரீ.ராமானுஜம் | (விளக்கு) | 2,772 |
| கே.ரீ.குணரத்ன | (தராசு) | 1,333 |
| சி.ஈ.கும்பல்வெல | (குடை) | 522 |
| ரீ.எம்.ஏ.ரத்நாயக்க | (நட்சத்திரம்) | (567) |
| டபிள்யூ.எச்.ரத்நாயக்க | (யானை) | 310 |
| பி.பீ.எம்.பண்டாரநாயக்க | (கை) | 147 |
| 7. பதுளை: | | |
| எஸ்.எம்.சுப்பையா | (சக்கரம்) | 27,121 |
| ஜே.சி.ரீ.கொத்தலாவல | (கை) | 16,654 |
| ஜீ.பீ.கட்டுகஹா | (யானை) | 6,585 |
| வீ.ஞானபண்டிதன் | (தராசு) | 1,319 |
| 8. பண்டாரவளை: | | |
| கே.வீ.நடராசா | (கை) | 5,092 |
| எம்.பீ.ஜாபா | (குடை) | 2,897 |
| கே.பீ.எச்.அதிகாரி திலக | (யானை) | 181 |
| 9. அப்புத்தளை: | | |
| ஜே.ஏ.ரம்புக்பொத்த | (சாவி) | 2,124 |
| ஏ.பீ.செங்கமாலை | (வீடு) | 1,753 |
| ஆர்.ஏ.நடேசன் | (குடை) | 1,337 |
| ஏ.பச்சமுத்து | (யானை) | 1,229 |
| ஜே.ஜீ.ராசகுலேந்திரம் | (கை) | 327 |

திரு.ஜீ.ஆர்.மோத்தா காலமானதை அடுத்து 1950.03.11 இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் திரு.ஏ.அசீஸ் வெற்றி பெற்றார். பெறுபேறு வருமாறு:

| | சின்னம் | வாக்குகள் |
|---|---|---|
| மஸ்கெலியா: | | |
| ஏ.அசீஸ் | (கை) | 11,343 |
| ஜீ.ஆர்.ராசப்பிரிய | (சக்கரம்) | 1,301 |

கண்டி தேர்தல் தொகுதியில் பெரும் இழுபறி நிலவியது. அவ் ஆசனத்தைக் கைப்பற்றுவதில் டீ.எஸ்.சேனநாயக்கவும், இடதுசாரிகளும் முழுபலத்தையும் பிரயோகித்தனர். இடதுசாரிகள் திரு.ரீ.பி.இலங்கரத்தினாவை நிறுத்தினர். 1947 ஆகஸ்ட் - செப்டம்பர் தேர்தலில் யானை சின்னத்தில் போட்டியிட்ட டீ.எஸ்.இன் வேட்பாளர் சொற்பவாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். விபரம்

| | சின்னம் | வாக்குகள் |
|---|---|---|
| கண்டி - 1947: | | |
| ஜோர்ஜ் ஈ.டீ.சில்வா | (யானை) | 7,942 |
| ரீ.பீ.இலங்கரட்ண | (கை) | 7,737 |
| ஏ.கொடமுன | (பூ) | 2,350 |
| ரீ.பி.வடுகொடபிட்டிய | (சக்கரம்) | 172 |

தேர்தல் சட்டம் மீறப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கில் திரு.சில்வா ஆசனமிழந்தார். மீண்டும் ஒரு இடைத்தேர்தல் 18.05.1948ல் நடைபெற்றது. அதில் இலங்கரத்தின வெற்றி பெற்றார்.

| | சின்னம் | வாக்குகள் |
|---|---|---|
| கண்டி: | | |
| ரீ.பி.இலங்கரத்தின | (குடை) | 10,345 |
| எவ்.ஈ.டீ.சில்வா | (தராசு) | 6,508 |
| டீ.பீ.வடுகொடபிட்டிய | (கோப்பை) | 153 |

ரீ.பி இலங்கரட்ண மீது தேர்தல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டதை அடுத்து அவரும் ஆசனமிழந்தார். அடுத்து 18.06.49 இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் அவரது மனைவி போட்டியிட்டு வெற்றி பெற்றார்

| | சின்னம் | வாக்குகள் |
|---|---|---|
| கண்டி: | | |
| திருமதி ரீ.பீ.இலங்கரட்ண | (நட்சத்திரம்) | 10,062 |
| ஏ.சீ.எல்.ரத்வத்தை | (கை) | 8,012 |
| ஆர்.ஈ.ஜயதிலக | (யானை) | 1,137 |
| டீ.பி.வடுகொடபிட்டிய | (சக்கரம்) | 270 |

மலையக வாக்காளர் டீ.எஸ்.சேனநாயக்க தனது முழு செல்வாக்கை நேரடியாக பிரயோகித்தும் கூட (தோட்ட தலைவர்களை சந்தித்து நேரடியாக வேண்டிக்கொண்டார்), இடதுசாரி வேட்பாளரையே கண்டியில் ஆதரித்தனர். மலையக மக்களின் வாக்குரிமையை பறிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

இடதுசாரிகளும், இலங்கை தேசிய காங்கிரசும், சிங்கள மகாசபையும் சாட்சியளிக்கவில்லை. இடதுசாரிகள் சுயாட்சிகோரி பொறுப்பாட்சி பிரேரணையை நிராகரித்தனர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தனது பிரேரணையை முன்வைத்தது. சிறுபான்மை மக்கள் அரசசபையில் நிரந்தரமான சிறுபான்மை ஆக்கப்பட்டுவிட்ட நிலையில் சிறுபான்மையினரின் கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்தவில்லை - சிங்கள மந்திரிமாரின் கருத்துகளே செல்வாக்கு பெற்றன.

எனினும் கலாநிதி அம்பலவாணர் சிவராஜா வகுத்துக்கூறியது போல சோல்பரி ஆணைக்குழு பின்வரும் முக்கிய அம்சங்களைப் புகுத்தியது.

***1. பர்மா பாணியில் இரண்டாவது சபை (செனட்) ஒன்றை அறிமுகப்படுத்தியது.***

***2. தேர்தல் நிர்ணய குழுவுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கியதோடு சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்திற்கு வாய்ப்பாக பல் அங்கத்தவர் தொகுதிகள் அமைப்பதையும் ( நியமன உறுப்பினர்களை நியமிப்பதையும்) வலியுறுத்தியது.***

***3. பொதுச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்களை அதிகரித்தது.***

***4. தேசாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டாலும் அவரது அங்கீகாரத்தை எதிர்பார்த்து கருமமாற்ற வேண்டிய நிலைமையை உருவாக்கியது.***

***5. அரசியல் யாப்பில் சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாக்கும் சரத்துக்கள் (29 சரத்து) சேர்க்கப்பட்டது.***

***அத்துடன் (பிரிவி கவுன்சிலுக்கு) பிரித்தானிய மேல்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யும் உரிமையும் அதில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.***

இருப்பினும் சிறுபான்மையினரை சாந்தப்படுத்தி பெரும்பான்மை இனத்து தலைவர்களை திருப்திப்படுத்தும் ஒரு யாப்பாகவே இதுவும் அமைந்தது.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் நடைபெற்ற தேர்தல்களில் 1947ம் ஆண்டு முதலாவது பாராளுமன்றத்தில் மாத்திரமே மலையகத்தின் பிரதிநிதித்துவம் திருப்திகரமாக இருந்தது.

1947 முதல் 1956 வரை கட்சி சின்னத்தில் போட்டியிடும்முறை இருக்கவில்லை. தேர்தல் அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட நிரலில் இருந்து ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனி சின்னம் 1956 வரை வழங்கப்பட்டு வந்தது. 1956 இன் பின்னரே இம்முறை மாற்றப்பட்டு கட்சி சின்னங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

1947 தேர்தலில் 89 தேர்தல் மாவட்டங்களில் இருந்து 95 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 6 நியமன எம்.பிகள் தேசாதிபதியால் பிரதமரின் சிபாரிசுக்கு ஏற்ப நியமிக்கப்பட்டனர். இத்தேர்தலில் போட்டியிட்ட நடேச ஐயர் தோல்வியடைந்தார். இலங்கை இந்திய காங்கிரஸின் வேட்பாளர்கள் 7 பேர் வெற்றி பெற்றனர். பண்டாரவளை தேர்தல் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட கே.வி.நடராசா என்பவர் வெற்றிபெற்றார். இவர் வடமாகாணத்தைச் சேர்ந்தவர். அப்புத்தளையிலே நான்கு தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டு மொத்தம் 4646 வாக்குகள் பெற்றும், தமிழ் வாக்குகள் பிரிந்ததனால் ஒரே சிங்கள வேட்பாளராக போட்டியிட்டவர் 2124 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். 1936ல் 2 ஆசனங்கள் பெற்றிருந்த இடதுசாரிகள் இத்தேர்தலில் 20 ஆசனங்களைக் கைப்பற்றினர். சனத்தொகை அடிப்படையில் (11.7%) 11 ஆசனங்களை பெற்றிருக்க வேண்டிய மலையக மக்கள் 8 ஆசனங்களையே பெற்றனர். அப்புத்தளை ஆசனத்தைப் பறிகொடுத்தனர். ஏனைய ஆசனங்களில் இடதுசாரிகளை ஆதரித்தனர். கலாநிதி ஏ.ஜேவில்சன் கூற்றுப்படி மலையக தமிழர் 20 தொகுதிகளில் நிர்ணயகரமான காரணியாக இருந்தனர். பெரிசுந்தரம் செனட்டராக தெரிவு செய்யப்பட்டார்.

வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஆசியப் பெண்களும் நீதிக்கான போராட்டமும்" என்ற தலைப்பில், மானுட அபிவிருத்திக்கான ஆசிய ஒத்துழைப்பு நிறுவனத்தால் வெளியிடப்பட்ட நூலிலிருந்து சில பகுதிகளைத் தமிழில் தருகிறோம். ஆசிய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஐம்பது பெண்கள் தங்களுடைய பல்வேறு வகையான போராட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக ஒன்று கூடினர். அவ்வொன்று கூடலின் விளைவுதான் இந்த நூல் என்பதையும் நாம் குறிப்பிட வேண்டும்.



# மகளே! நீ கடவுளின் பரிசு!

எமது சமூக கலாசார அமைப்பானது பெண்களை சுரண்டும் ஒரு ஒடுக்குமுறை அமைப்பாகும். இந்த அமைப்பு ஆசிய நாடுகளில் பல மில்லியன் கணக்கான பெண்களை அறியாமையிலும், அடிமைத்தனத்திலும் ஆழ்த்தி வைத்துள்ளது. பெண்கள் ஒடுக்குமுறை அல்லது பெண்விடுதலை தொடர்பாக மதங்கள் எவ்வகையான பாத்திரத்தை ஆற்றுகின்றன என்பது தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றிய கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து, பெளத்த மதங்களைச் சேர்ந்தவர்கள், தமது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

விடுதலை சக்தியின் ஒரு கூறாக சமயங்கள் இருந்த போதும், நடைமுறையில் அவை சமூக, பழக்க, கலாசார மரபுகளை மீண்டும் சமூகத்தின் மீது திணிக்கின்றன என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆண்களின் தவறான வியாக்கியானங்களிலும், ஆணாதிக்க கலாசாரத்திலும் சமயங்கள் நிறுவனமயப்பட்டதன் விளைவுதான் இது. சமயச் சிந்தனைகளையும், விழுமியங்களையும் தீவிர மீள்பரிசீலனை செய்வதற்கான தேவை இப்போது உள்ளது.

### கத்தோலிக்கத் திருச்சபையில் பெண்களுக்கு எதிரான அடக்குமுறை

திருச்சபை வரலாற்றில் பெண்கள் இரண்டாம்படியான, பலவீனமான பால் (Sex) ஆகவே கருதப்படுகின்றனர். சில சிறந்த மறைசிந்தனையாளர்களும் கூட பெண்களின் உண்மையான பெறுமதியைக் காணத்தவறிவிட்டனர். ஆனால் திருச்சபை அன்னை மரியாவுக்கு சிறந்த மரியாதையை அளிப்பதுடன், பல பெண்களுக்கு புனிதர் பட்டங்களை அளித்துள்ளன.

தேவாலயங்கள், பால் அடிப்படையில், சமத்துவம் உண்டு என்பதை உத்தியோகபூர்வமாக ஏற்றுள்ளன. கடவுளின் பிள்ளைகளாக, மனிதர்களாக, அவர்களுடைய உரிமைகளில் ஆணும் பெண்ணும் சமமானவர்கள். கல்விகற்பதற்கும், வாழ்க்கையிலும், திருச்சபை மிஷன்களில் சிறந்த பாத்திரத்தை வகிப்பதற்கும் பெண்களுக்கு சம உரிமைகள் உண்டு. எனினும் பெண்கள் இப்பொழுதும் திருச்சபையில் ஒடுக்கப்படுகின்றார்கள் என்ற உண்மையை நாம் தட்டிக்கழித்துவிட முடியாது.

சமயக் கொண்டாட்டங்களின் போது பெண்கள் பங்கெடுப்பதை திருச்சபை உற்சாகமூட்டுகின்றது. இப்பொழுது பெண்கள் சில பதவிகளையும் வகிக்க முடியும். ஒரு பெண் நற்கருணை வழங்க கூடியவளாக இருந்த போதும், அவள் பலிபீட கிரியைகளில் ஈடுபடமுடியாது. எட்டு வயதுப் பையன் இதற்குப் பொருத்தமானவனாக கருதப்படுகிறான். ஆனால் ஒரு சிறுமியோ, பெண்ணோ, அப்படிக் கருதப்படுவதில்லை. ஒரு பெண் தான் அடக்கப்படுகிறாள் எனத் தானாகவே உணருகின்ற முதல் சம்பவம் இதுவாகும். எம்.சீகிறிட் வோகல் இதை மிகவும் உறுதியாகக் கூறுகிறார்.

"ஆசி வழங்கும் ஆராதனை நேரங்களில் பலிபீட பையன் இல்லாவிட்டால் தூபகலசத்தைத் தாங்குவதற்கு ஒரு பெண்ணை விட, இரும்பு நிலை ஒன்றே நல்லது எனக்கருதப்படுவது உங்களுக்கு ஞாபகமுள்ளதா?"

திருச்சபைகள் ஆணாதிக்கமயமானது என எந்தவித தயக்கமுமின்றி எங்களால் கூறமுடியும். திருச்சபைகளில் அதிகாரத்துவ படிமுறையான போப்பாண்டர், ஆயர்கள், பாதிரியார் என்ற பதவிகள் ஆண்களாலேயே வகிக்கப்படுகின்றன. எல்லா முடிவுகளும் இவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. பெண்களுக்கு முடிவுகள் எடுக்கும் நடவடிக்கைகளில் எந்தவிதமான இடமுமில்லை. பெண்களுக்கே உரிய மாதவிடாய், கருக்கொள்ளல், தாய்மையடைதல், பிள்ளைபெறுதல் போன்ற விடயங்கள் தொடர்பான முடிவுகளையும் தேவாலயங்களில் உள்ள ஆண் தலைவர்களே மேற்கொள்கின்றனர். பெண்கள் அவற்றை ஏற்றுக்கொள்பவர்கள் மட்டுமே.

திருமண ஆராதனைகளில் பாவிக்கப்படும் சில வாசகங்களைப் பற்றி, சில கருத்துக்களை தெரிந்து கொள்வது இங்கு பிரயோசனமாக இருக்கும். சில வாசகங்கள் ஒரு பெண்ணை மானுடப்பிறப்பாகக் கருதுவதை விட ஒரு பொருளாகவே கருதுகின்றன. ஆண் ஒரு மனிதன். பெண் அவனுடைய உபயோகத்திற்காக உருவாக்கப்பட்டவள். திருமறைத்தொகுதி 26 (1-4, 13-16) இப்படிக் கூறுகின்றது.

"கணவனுக்கு மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் மனைவிக்கு கணவன் எப்படி இருக்க வேண்டுமென்பதையல்ல"


"கணவனை மகிழ்விப்பவளே உண்மையில் நல்ல மனைவி.... சிறந்த மனைவியே அவளுடைய கணவனின் இன்பம் ........... மனைவியினுடைய பண்பில் அவ்ளுடைய கணவன் கவரப்பட வேண்டும். ஒரு அமைதியான மனைவி கடவுளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பரிசு........"

இரண்டாவதாக உருவாக்கப்பட்ட கதையில், பெண் ஆணுக்கு உதவி செய்யும் துணைவியாக இருப்பதற்காகவே உருவாக்கப்பட்டவள். முதலாவதாக உருவாக்கப்பட்ட கதையில், ஆணும் பெண்ணும் உருவாக்கப்பட்டது மிகவும் அர்த்தமுள்ளது என்பது அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் கருத்துக்கள் மனித சமத்துவக் கருத்துக்களுக்கு எதிரானவை என்பது தெளிவானது. தேவாலய ஆராதனைகளிலும், திருமண ஆராதனைகளிலும் இப்பொழுதும் இந்த வாசகங்களைப் பரிந்துரைப்பது வருந்தத்தக்கது.

பெண்கள் இந்த வாசகங்களை உணர்ந்து கொள்ளாத காலமொன்று இருந்தது. ஆனால் இப்பொழுது அந்தக்காலம் மலையேறிவிட்டது. ●

அடுத்து இந்து சமூகத்தில் பெண்



ஆங்கிலத்தில்:- சகோதரி வின்னிபிரிடா
தமிழில்:- H.A.S.செல்லம்மா

## சில புத்தகங்கள் சில நிகழ்வுகள் சிறு குறிப்புகள்




மகாஜனன்

# மனிதம்

இச்சஞ்சிகையின் இறுதி இதழ் கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் வெளிவந்தது. மனிதம் வெளிவந்து 5 வருடப்பூர்த்தியாகிய அதேவேளை அவ்விதழே அஸ்தமன இதழ் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

இது சிறுசஞ்சிகைகளுக்கு ஏற்படுகிற துரதிர்ஷ்டம் தான். 1980களில் இலங்கையில் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்த போது அதனை அடியொற்றி வெளிவந்த படைப்புக்களில் பெரும்பாலானவை ***அலை, புதுசு*** முதலான சிறுசஞ்சிகைகளிலேயே ஆரம்பத்தில் வெளியாகின. இலங்கையின் மிகச் சிறந்த கவிஞர்கள் எனக்குறிப்பிடப்படும் அனைவருமே, சிறுசஞ்சிகைளினூடாகவே தமது கவியாற்றலை வளர்த்தவர்கள்.

புலம்பெயர்ந்தோரின் படைப்புக்களும் அங்கிருந்து வெளியாகும் சிறுசஞ்சிகைகளிலேயே பெரிதும் வெளியாகின. எப்போதும் சிறுசஞ்சிகையினதும், சிறந்த இலக்கியங்களினதும் வளர்ச்சி சமாந்தரமாகவே இருந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சிறுசஞ்சிகைகளின் வரவு நின்று போவது தரமான இலக்கியங்களுக்கு ஆரோக்கியமானது அல்ல. ஏற்கெனவே ஜேர்மனியிலிருந்து ***தூண்டிலும்*** , இங்கிலாந்திலிருந்து ***பனிமலரும்*** பிரான்சிலிருந்து ***ஓசையும், மௌனமும்,*** கனடாவிலிருந்து ***நான்காவது பரிமாணமும், சக்தியும்*** (இது சிறு சஞ்சிகை அல்ல) வெளிவராமல் நின்று போனது. அதன் வரிசையில் தற்போது சுவிஸிலிருந்து வெளிவரும் ***மனிதம்.***

சிறுசஞ்சிகைகள் நின்று போவதற்கான காரணங்களை ஆராய்வது கடினமான காரியமல்ல. முக்கிய காரணம் பொருளாதாரம்தான். படைப்புக்கள் கிடையாமையால் சிறுசஞ்சிகைகள் நின்று போனது என்பது நான் அறியாத ஒன்று. பொருளாதார அடித்தளத்தின் பலத்தை அறியாது, ஏதோ ஒரு வேகத்தில் சஞ்சிகைகளை ஆரம்பித்து விடுவது உண்டு. தனிநபர்கள் இவ்வாறு ஆரம்பிக்கும் போது அங்குள்ள மூலதனம் அவர்களது ஆர்வம் மட்டுமே. ஆரம்பத்தில் சஞ்சிகைகளுக்காக நிறைய உடலுழைப்பைச் செலுத்துவார்கள். காலம் செல்ல சலிப்பே எஞ்சும். சஞ்சிகை நின்று போய்விடும். இதனையும் மீறி ***எழுத்து*** சஞ்சிகையை நடாத்திய ***சி.சு. செல்லப்பா***வின் துயர் நாம் அறிந்தது. 80களின் ஆரம்பத்தில் ***பரந்தாமன்*** என்பவர் ***அஃ*** எனும் சஞ்சிகையை நடாத்தினார். சஞ்சிகையின் வடிவமைப்பில் அவர் செலுத்திய கவனம் அபாரம். வடிவமைப்பில் இவ்வளவு அக்கறை செலுத்திய ஒரு சஞ்சிகையை நான் இதுவரை வேறெங்கும் காணவில்லை. பரந்தாமன் வடிவமைத்த வண்ணதாசனின் ***கலைக்க முடியாத ஒப்பனைகள்*** சிறுகதைத் தொகுப்பு அதன் வடிவமைப்பிற்காக தேசியவிருதுகூடப் பெற்றிருந்தது. பரந்தாமன், அவர் ஒவ்வொரு இதழையும் மிகக் கவனத்துடனேயே செதுக்கியிருந்தார். ***அஃ*** சஞ்சிகையின் 12வது இதழில் (என நினைக்கிறேன். அதுவே இறுதி இதழ்) முழுப்பக்கங்களிலும் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக்கட்டுரையின் கடைசி வரிகள் இவைதாம். ***"நான் பஞ்சம் பிழைக்கப் பட்டணம் போகிறேன். பழைய இதழ்கள் வேண்டுவோர் என் மனைவி பெயரில் தபால் கட்டளை அனுப்பவும்."***

பொதுவில் சிறுசஞ்சிகைகளின் வரலாறு அவலமானது.

ஆனால் பொருளாதாரச் சிக்கல்களுக்கப்பால் மனிதம் நின்று போவதற்குக் கூறப்பட்ட காரணம் - முரண்பாடு. மனிதம் குழு கூறுகிறது: "மேற்படி முரண்பாடுகளுக்கிடையில், மனிதம் பத்திரிகையைத் தொடர்ந்து வெளிக்கொணர்வதற்காக உடன்பாடு காணப்படாத நிலைமையில், பத்திரிகையை நிறுத்த வேண்டிய சூழ்நிலைக்குட்பட்டுள்ளோம் என்பதை மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்."

என்னவாக இருந்தாலும், இம்முரண்பாடுகள் நீக்கப்பட்டிருக்க முடியாதா? பொருளாதாரச் சிக்கலில்லாத போது, ஓரிருவராவது உடன்பாட்டிற்கு, குறைந்த பட்ச உடன்பாட்டிற்காவது வந்து சஞ்சிகையைத் தொடர்ந்து நடாத்தியிருக்க முடியாதா?

மனிதம் குழுவினர் இது தொடர்பாகவும் விவாதித்துள்ளனர். மனிதம் தொடர்ந்து வெளிவர வேண்டும் எனும் கருத்துடன் விவாதத்தை தொடக்கியிருந்தனர்.

"வாசகர் வட்ட அமைப்பைப் பலப்படுத்தி பத்திரிகையைத் தொடர்ந்து கொண்டுவருவதற்கான நிலையான வருவாயை அல்லது நிதியை ஒழுங்கு செய்து கொண்டு பத்திரிகையைக் கொண்டு வர முயற்சிக்கலாம்"

"அரசியல் படிப்பை மேற்கொள்வது, மாற்றுக் கலாசாரம், எதிர்க் கலாசாரம், பெண்ணியம் ஆகியன பற்றி புதிய கருத்துக்கள் சார்பாக தொடர்ந்து விவாதங்களையும் கலந்துரையாடல்களையும் மேற்கொள்வது, அதன்பின் ஏற்படும் புதிய கருத்து நிலைகளின் அடிப்படையில் பத்திரிகையை வெளியிடலாம்."

"மேற்படி கருத்துக்கள் சார்பாக விவாதங்களை நடாத்திக் கொண்டு சமகாலத்தில் பத்திரிகையையும் கொண்டு வரலாம். இதற்கான ஒரு களமாக பத்திரிகையையும் பயன்படுத்தலாம்"

இவ்வாறான கருத்துக்கள் அங்கு முன்வைக்கப்பட்டன. எனினும் மனிதம் இறுதி இதழெனவே அறிவிக்கப்பட்டது. இது ஏமாற்றம்தான்.

மனிதம் இதுவரை 30 இதழ்கள் வெளிவந்தன. அவற்றில் பெரும்பாலானவற்றை நான் படித்ததுண்டு. பெறுமதி மிக்க இதழ்களாகவே அவை காணப்பட்டன. மனிதம், இலக்கியத்தில் அவ்வளவு அக்கறை செலுத்தாத போதும் அதன் அரசியல் கட்டுரைகள் சிறப்பானவை; ஆழமானவை. கவிதையிலும் தன் காலை பதித்து நின்றது. இவ்வாறான சஞ்சிகைகள் நின்று போவது கவலைக்குரியது.

இது தொடர்பாக இப்பத்தியில் எழுதுவதற்குக் காரணம்: மனிதம் குழுவினர் தம் முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். ஏலவே தூண்டில், பனிமலர், சக்தி நின்றுபோன போது இத்தகைய வேண்டுகோள் விடுக்க முடியவில்லை. அவர்கள் 'சொல்லாமல் கொள்ளாமல்' நின்றார்கள். மனிதம் தம் வாசகர்களுக்கும் கூறியிருக்கிறது: எனவே எம் வேண்டுகோளையும் விடுக்க முடிகிறது.

இறுதியாக ஒருவார்த்தை,

"கூட்டைக் குலைப்பது சுலபம்; வலு சுலபம். ஆனால் அதைத் திருப்பிக் கட்டுவதெனில்?

மனிதத்திற்கு மாத்திரமல்ல இவ்வார்த்தை; தூண்டில், பனிமலர், சக்தி ஆகியவற்றிற்கும் தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மங்கையராய்ப் பிறப்பதற்கே

## நாடக விமர்சனம் குறித்த எதிர்வினைகள்

ஜூன் 01, 1995 இல் வெளிவந்த சரிநிகரில் நாடகம் பற்றிய குறிப்புகளை எழுதி அனுப்பியிருந்தார் சீவரெத்தினம் அவர்கள். அதிலுள்ள இரு விடயங்களுக்கு மாத்திரம் எனது விளக்கத்தை தரலாம் என நினைக்கிறேன்.

1. நாடகம் நிகழ்த்தப்படும் இடமும் - நாடகக் கருவும்

2. பெண் நிலைவாதமும் - பாத்திரப் படைப்பும்

ஒரு நாடகம் நிகழ்த்தப்படும் போது நிகழ்த்தப்படும் பிரதேசத்தின் பிரச்சினையை பின்புலமாக கொண்டிருக்க வேண்டும் எனும் கருத்து ஏற்கப்பட்ட விடயம் தான். ஆனாலும் நாடகத்தின் கரு, நாடகம் நிகழ்த்தப்படும் பிரதேசம் சார்ந்த மக்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கள்ள பிரச்சினைகளை நாடகக் கருவாகக் கொள்ளலாம் என்பதையும், நிகழ்த்தப்படும் பிரதேசத்திலுள்ள ஒரு பொதுப்பிரச்சினை வேறொரு பிரதேசத்தில் எவ்வாறு விஸ்வரூபம் எடுத்துள்ளது என்பதை நிகழ்த்திக் காட்டலாம் என்பதையும் ஏற்றுக்கொள்வதில் கருத்து முரண்பாடு இருக்காது என நினைக்கிறேன்.

ஒரு கலைஞன் தான் வாழ்கின்ற பிரதேசத்திலுள்ள பிரச்சினை அதன் வடிவம் என்பவற்றுடன் நின்றுவிட வேண்டும் என நினைப்பதோ அல்லது தனது இனம் இன்னுமொரு பிரதேசத்தில் வாழ்கின்ற போது அதனை வேறொரு சமூகமாக நினைப்பதோ எந்தவகையில் சரியாகும் என்பதுதான் எனது கேள்வி.

அவ்வாறாயின் புலம் பெயர்ந்த எமது சமூகம் பற்றிய பிரச்சினைகளை மையமாகக் கொண்ட சிறுகதை, கவிதை, நாடகம் போன்றவற்றில் கூறமுற்பட்ட பிரச்சினைகளை வேறொரு சமூகத்தின் பிரச்சினையாக பார்த்திருந்தால், எமது பிரதேசத்தின் பிரச்சினைகள் இவை அல்ல என ஒதுக்கியிருந்தால் 'புகலிட இலக்கியம்' என்பதே வளர்ச்சியடைந்திருக்காது.

எனவே ஒரு நிகழ்கலை நிகழ்த்தப்படும் இடத்தை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் எவ்வளவு நியாயமிருக்கிறதோ அதேபோல அப்பிரதேசம் சார்ந்த, அப்பிரதேசத்துடன் தொடர்புடைய மக்கள் வாழ்கின்ற பிரச்சினைகளையும் மையமாகக் கொள்ளலாம் என்பதிலும் நியாயமிருக்கிறது. இந்தவகையில் மணப்பெண் மாப்பிள்ளை வீட்டில் வசிப்பதும் அவள் மாமி, மாமாவினால் அடக்கப்படுவதும், ஒரு வேலைக்காரிபோல நடாத்தப்படுவதும் இன்று எமது தமிழ்ப் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினையாக அமைகிறது. திருமணம் முடித்து சில தினங்களில் மாப்பிள்ளை வெளிநாடு சென்றபின்னர் மாமியார் வீடு மணப்பெண்ணுக்கு சிறைக்கூடமாக மாறிவிடுகின்ற நிலையும் உண்டு.

2. பெண் அடக்குமுறை பற்றிய கருத்துக்களும் பெண் விடுதலைப் போராட்டங்களும் எமது தமிழ்ப்பகுதியில் தேச விடுதலைப் போராட்டம் வளர்ச்சிநிலை அடைந்த காலகட்டத்திலேயே முனைப்படையத் தொடங்கின.

பெண்விடுதலைப் போராட்டமானது வெறுமனே ஆண்களுக்கு எதிரானது, பெண்களால் மட்டும் முன்னெடுத்துச் செல்லப்படுவது, எனும் விதத்தில் அமைந்த விடயமல்ல அத்துடன் பெண்களை அடக்குகின்ற வர்க்கமாக ஆண்வர்க்கம் உள்ளது என்று மேலோட்டமாகவும் எண்ணிவிட முடியாது.

ஒரு சமூகத்தை இன்னுமொரு சமூகம் அடக்குதல் எனும் நிலைப்பாடு என்று தனிமனித வாழ்வுமுறை அழிந்து சமூக வாழ்வு முறை தோற்றம் பெற்றதோ அன்றே தோன்றிவிட்டது.

தாய்வழி அமைப்பு தோன்றி தந்தை வழி சமூக அமைப்பின் தோற்றம் ஒரு ஆண் மேலாதிக்க உணர்வினை சமூகத்தில் தோற்றுவித்தது. இந்த ஆண் மேலாதிக்க கருத்துக்களை ஏற்றுக்கொண்ட ஒருபகுதி (இதில் ஆண்களுடன் பெண்களும் அடங்குவர்) மற்றைய பகுதியினரை அடக்கி வாழமுற்பட்டுள்ளது.

இத்தொடர்ச்சியான காலவோட்டத்தில் பெண்கள் அடக்கப்பட்ட சமூகமாக அல்லது அடங்கிவாழ வேண்டிய சமூகமாக நிர்ப்பந்திக்கப்பட்டது. எனவே பெண்களை அடக்கப்பட்ட சமூகமாக கொண்டால் அவர்களை அடக்குகின்றவர்களாக மொத்த ஆண்சமூகத்தை பார்த்தல் தவறான விளக்கமாகும்.

ஆண் மேலாதிக்க உணர்வு கொண்ட ஆண்களும் அதனை ஏற்பதன் மூலம் பெண்களும் மற்றைய பெண்களை அடக்க முற்படுகின்றனர்.

ஆகவே, பெண்களை அடக்குவது ஆணா, பெண்ணா அல்லது ஆண்மேலாதிக்க சிந்தனை கொண்ட ஆணும் பெண்ணுமா எனும் கேள்வி எழும் போது இந்த மூன்றாவது பிரிவுதான் பெண்வர்க்கத்தை அடக்குகின்ற வர்க்கமாக அமைகிறது.

இந்தக் கருத்தை மையமாகக் கொண்டே, ''மங்கையராய்ப் பிறப்பதற்கே'' நாடகம் தயாரிக்கப்பட்டது. அந்த நாடகத்தில் வரும் ஆண்பாத்திரங்கள் பெண்பாத்திரங்கள் ஒன்றாகக் கூடியே குறித்த ஒரு பெண்ணை அடக்கி அவள் வாழ்வை சிதைக்கின்றனர். இதில் வரும் மாமி பாத்திரம் ஆளுமை கூடிய பார்த்திரமாக காட்டப்பட்டது உண்மை. இது ஆண் மேலாதிக்க கருத்துக்களுடன் ஒத்துப்போன வர்க்கத்தின் பிரதிநிதியாகவே இங்கு காட்டப்பட்டது. இதனை ''ஆண் மேலாதிக்கம்' எனும் பொதுப்பாத்திரத்திற்குள்ளும் வைத்துப்பார்க்கலாம்.

**வெ.தவராசா**



## காதல் + வீரம்=தமிழ்ப் பண்பாடு தேவ அபிராவுக்குப் புரியாத சமன்பாடு

ஈழத்தின் கலை இலக்கியப் பரப்பில் காத்திரமானதாகவும் முனைப்போடும் செயற்பட்டுவருவது நாடக, அரங்க கலையாகும். இக்கலை கல்வி நிலை சார்ந்தது. பல்கலைக்கழக அளவில் பயிலப்படுவதும் இதன் முனைப்பான செயற்பாட்டிற்கு ஒரு காரணம் எனலாம். இந்த எழுச்சியின் பின்புலத்தில் ஈழத்தில் அரங்க செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. பல்வேறு தரப்பட்டவர்கள் இன்று நாடகக்கலைக்கு, முன்னுரிமை கொடுத்து மிகவும் காத்திரமாக செயற்பட்டு வந்த போதும் பல்கலைக்கழகம் சாராத எந்த முயற்சியும் புறக்கணிக்கப்படுவதும், பின் தள்ளப்படுவதும் எள்ளிநகையாடப்படுவதும், உண்மைத்தனம் வாய்ந்த விமர்சனத்துக்குட்படாமையும் பெரும்வேதனைக்குரிய செயலாகும். யாழ் திருமறைக் கலாமன்றமும் பல்கலைக்கழகம் சாராது மிகவும் காத்திரமான நாடக செயற்பாடுகளை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன.

சரிநிகரில் வெளிவந்த தேவ அபிராவின் கருத்துக்கள் தொடர்பாக இதனை எழுதுகிறேன்.

யாழ்திருமறைக்கலாமன்றம் 1965ம் ஆண்டிலிருந்தே நாடகக்கலையில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது. 1989ம் ஆண்டுக்குப் பின் இதன் சேவை பன்முகப்பட்ட கலை சேவையாக மாறி நாடகத்துறையிலும் மிகவும் காத்திரமாக செயற்பட்டு வருகின்றது. இது தனது நாடகங்களுக்கு தனியான ஒரு வடிவத்தை மட்டும் கொள்ளாது, வரலாற்று நாடகம், இசை நாடகம், இலக்கிய நாடகம், பக்தி நாடகம், நாட்டுக்கூத்து, நவீன நாடகம், சிறுவர் நாடகம் என்று பலவகையான ஆனால் தனித்துவமான கட்டுக்கோப்பான ஒழுங்கமைக்கப்பட்ட தலை சிறந்த அரங்க ஆற்றுகைகளாக மேற்கொள்வதை இம்மண்ணிலுள்ள அனைவரும் அறிவர். யுத்த காலத்தில் ஸ்தம்பித்துப் போயிருந்த இம் மண்ணில் காலத்துக்கேற்ற கருக்களில் கலை நிகழ்வுகளை நிகழ்த்தி அலைக்கழிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலுள் ஆன்மீக பலமும் அளித்துள்ளது மன்றம். ஆனால் இம் மன்ற நாடகங்களை மதம் தொடர்பானவை என்றும், பழைய பண்பாட்டின் கருவூலங்களை பேணுதல் மட்டுமென்ற இருவகைக்குள் அடக்கி அதன் பரந்துபட்ட செயற்பாடுகளையும் புத்தாக்கங்களையும் ஓர் குறுகிய வட்டத்துக்குள் அடக்க முற்படுவது விமர்சனத்துக்குரியது.

இம்மன்றம் ஓர் மதக்கட்டமைப்புக்குள் இயங்கினாலும், சமய பிரச்சார நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது சாதி, சமய மொழி வேறுபாடுகளை கடந்து தனது செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றது. பல பிற மத கலைஞர்கள் இம்மன்றத்தில் செயலாற்றுவதும் ''சைவ சித்தாந்தத்தையே' தனது ஓர் பிரிவாக கொண்டு செயற்பட்டு வருவதும், இதன் பரந்த நோக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டென்லாம்.

அத்துடன் இம்மன்ற முயற்சிகளில் ஐம்பெருங்காப்பியங்களை இலக்கிய இசை நாடகங்களாக்கியமையும் ஒன்றாகும். வேறு எதையும் எதிலும் குறை காணாத நண்பர் 'சீவக சிந்தாமணியில்' சீவகன் தன் காதலியுடன் ஆடிப்பாடியதை மக்கள் விசிலடித்ததாகவும், பண்பாட்டுப் பேணுகையின் அவலமாகவும் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தின் நாடகத் தந்தை என அழைக்கப்படும் கலையரசு சொர்ணலிங்கத்தினதோ இசை நாடகத்தை சிறப்புற ஆடி வரலாற்றில் இடம் பெற்ற வி.வி.வைரமுத்துவினதோ அரங்கில் காணப்பட்டதைவிட மிக குறுகிய அளவில் காப்பிய தேவை கருதி அமைக்கப்பட்ட அப்பாடல் காட்சியினை நண்பர் விமர்சித்துள்ள விதம் தமிழ் பண்பாட்டில் வீரமும் காதலும் இணைந்தது என்பதைக் கூட தெரிந்து கொள்ளாத அறியாமையைத்தான் எடுத்துக் காட்டுகின்றது. அத்தோடு திருமறைக்கலாமன்ற நாடகங்களில் செம்மைத்தன்மை காரணமாக, மன்ற நாடகங்கள் ஆரம்பித்தாலும், ஆணும் பெண்ணும் மேடையில் தோன்றினாலே விசிலடிக்கும் பல்கலைக்கழக அரங்கு முதல் பாமர அரங்கு வரை நிசப்தமாகிவிடும்.

அதுமட்டுமன்றி மக்கள் தமது பிரச்சினையை தாமே உணராமல் அவர்கள் கவனத்தை திருப்புவதிலும் நேரத்தை சுயசிந்தனையற்ற பொழுது போக்காக மாற்றுவதிலும் திருமறைக்கலாமன்றம் உணர்ந்தோ, உணராமலோ கவனம் செலுத்தி வருகின்றது என்ற அப்பட்டமான குற்றச்சாட்டை நண்பர் முன்வைத்துள்ளார்.

இன்றைய யுத்த அவலத்தையும் அதன் தாக்கத்தையும் ''கி.பி.2000'' ஆகவும் சமய உண்மைகளுடன் சமகாலப் பின்னணியை இணைத்து ''சத்தியத்தின் தரிசனமாகவும்'', சீதனப்பிரச்சினையை முன்வைத்து ''பெண்ணியம் பேசுகிறதாகவும்'', அரசியல் பிரச்சினையையே மையமாகக் கொண்டு ''ஒரு தேடல்'', ''நுளம்புகள்'' என்றும் பெருங் காட்சிகளோ, ஒலி ஒளி முக்கியத்துவமோ இன்றி நடிகரின் ஆற்றல் வெளிப்பாட்டால் மக்களை சிந்திக்க வைக்க பரீட்சார்த்த முயற்சிகளோடு செம்மையாக மேடையேற்றியதை மக்கள் நன்கறிவர். தேவ அபிரா அறிவாரா? அத்துடன் நில்லாது யுத்தத்தின் அபாயத்தைக் கூறி அது நிறைவு பெற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி கொழும்பில் முதன் முதலாக ''அசோகா'', ''கி.மு.2ம் நூற்றாண்டு'', ''தரிசனம்'' என்ற நாடகங்களையும் சிறுவர்களைக் கொண்டே இன்றைய எமது அவலத்தை ''கலையாத கோலங்கள்'' என்ற ஆற்றுகை மூலமும் இக்கட்டான காலத்திலும் கொழும்பில் மேடையேற்றியதை விட வேறு எந்தவகையில் மக்களின் பிரச்சினையை மக்களுக்குணர்த்துவது. இறுக்கமான மதக்கட்டுக் கோப்புக்குள் இருந்தும் மன்றம் செயற்படுத்திய இவ் ஆற்றுகைகள் மன்றத்தின் பரந்த செயற்பாட்டையே குறித்து நிற்கின்றது.

நாடக அரங்க வளர்ச்சிக்கு நியாயத்தன்மை வாய்ந்த விமர்சனங்கள் தேவை. அவை நல்லவகையில் அரங்கை வளர்த்துச் செல்லும். ஆனால் இவ்வாறான இருட்டடிப்புக்களும் பிரச்சாரங்களும் எப்படி அரங்க வளர்ச்சிக்குத்துணை போக முடியும்?

*லோ.அ.ஜெயக்குமார்*

## மௌனகுரு மறைப்பது ஏன்?

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய கருத்தரங்கின் இரண்டாம் நாள் அமர்வில் சிறீ கணேசன் அவர்கள் திருமறைக் கலாமன்றத்தின் நாடக அரங்கச் செயற்பாடுகளை மிகவும் காரசாரமாக விமர்சித்திருந்தார். சிறீகணேசன் அவர்களின் ''விமர்சனத்தொனி விமர்சிக்கப்படுபவர்களை எதிரிகளாக ஆக்கியமை ஓர் குறைபாடு'' என்று தேவ அபிரா எழுதுமளவிற்கு அவருடைய தாக்குதல் இருந்தது. சிறீகணேசன் அவர்களின் கருத்தை மறுத்து காரை செ.சுந்தரப்பிள்ளை அவர்கள் பேசி இருந்தார்.

அழகு என்பது பார்க்கப்படும் பொருளில் அல்ல. அதைப் பார்ப்பவர்களின் மனதில் தான் இருக்கின்றது என்று சொல்லுவார்கள். சிறீகணேசன் அவர்களின் மனதில் திருமறைக் கலாமன்றத்தின் நாடகங்கள் நாடகத்தன்மை அற்றவைகளாக இருந்தால் அது அவரின் அபிப்பிராயம். அவர் ஒரு பல்கலைக்கழ விரிவுரையாளர் என்பதினால் அவர் சொல்லுவதுதான் சரி என்று எல்லோராரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை.

கருத்தரங்கின் மூன்றாம் நாள் மாலை அமர்வில் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் க.சண்முகலிங்கம் அவர்கள் என்னையும் சில வார்த்தைகள் கூறும்படி கேட்டதன் பேரில், நான் பல்கலைக்கழகங்களில் இருப்பவர்களும் மற்றும் சிலரும் என்ன சொன்னாலும் திருமறைக் கலாமன்றத்தின் நாடகங்களைத் தமிழ் மக்கள் விரும்பிப் பார்க்கிறார்கள் என்றதோடல்லாமல் சிங்களக் கலைஞர்களாகிய பேராசிரியர் சரத்தசந்திரா, நாட்டியக் கலைஞர் சித்திரசேனா, யாழ் அரசாங்க அதிபராயிருந்த லயனல் பெர்னாண்டோ போன்றவர்களே வெகுவாகப் புகழ்ந்து பாராட்டி இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி, அது 'திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றது என்றும் கூறும், தமிழ் மக்கள் தம்முள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருப்பதால் தமிழ் மக்களோ, தமிழ்க் கலைகளோ வளரமாட்டா என்றும் கூறி முடித்திருக்கிறேன்.

கருத்தரங்கில் நடைபெற்ற இன்னுமொரு விடயத்தையும் இங்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

கடைசிநாள் அமர்வின் முடிவில் கலாநிதி.சி. மௌனகுரு அவர்கள் தனது கருத்துரைகளை வழங்கும் பொழுது, ஒரு கட்டத்தில், இலங்கையில் தமிழ் நாடகப் பட்டறைகள் நடாத்தப்படும் இடங்களையும் நடாத்துபவர்களையும் எடுத்துக்கூறினார். யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய பகுதிகளைப்பற்றிக் குறிப்பிட்டு விட்டு கொழும்புக்கு வந்ததும் சபையைப் பார்த்துக் கண்ணோட்டம் விட்டுத் தேடிவிட்டு ''அ.... றொபட் அவர்கள் நடாத்திவருகிறார்கள்'' என்ற கூறி றொபட் அவர்களைப் பார்த்து ''இல்லையா?'' என்று கேட்டு முடித்திருந்தார்.

றொபட் அவர்கள் அப்படி ஒரு நாடகப் பட்டறையை நடாத்தி வருவதாக நான் அறிந்த அளவில் இல்லை. அப்படி நடாத்தி வந்தாலும் அது குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை. கலாநிதி மௌனகுரு அவர்கள் பேசுவதற்குச் சற்று முன்பு பேசியிருந்த நடிகை செல்வி ப்ரியா ஜெயந்தி அவர்கள் கொழும்பில் நாடகப்பட்டறை இல்லாத குறையை எடுத்துக்கூறி, அக்குறையைப் போக்குவதற்கு இந்து சமய கலாசாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பதை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

அப்படி இருந்தும், நாடகப்பட்டறை இல்லாத இடங்களில் இருப்பதாக எடுத்துக்கூறிய கலாநிதி மௌனகுரு அவர்கள், 25 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து நாடகங்களை மேடையேற்றியும், யாழ்ப்பாணத்தில் பல வருடங்களாக பல கலைஞர்களுக்கு - குழந்தைகள் உட்பட - பயிற்சி அளித்து வரும் திருமறைக் கலாமன்றத்தைப் பற்றி ஒரு சொல்லுக்கூடச் சொல்லவில்லை.

கலாநிதி மௌகுரு அவர்கள் நாடகம் பற்றி எழுதி இருந்த ஒரு நூலில் திருமறைக் கலாமன்றத்தின் பெயரே குறிப்பிடப்பட்டவில்லை என்ற நியாயமான ஒரு குற்றச்சாட்டு அவர் மீது இருந்து வருகின்றது. அப்படி இருந்தும் பட்டறை இல்லாத இடங்களைத் தேடிப்பிடித்து அங்கு பட்டறை இருப்பதாகக் குறிப்பிட்ட கலாநிதி அவர்கள் பல வருடங்களாகப் பட்டறை வைத்துப் பல கலைஞர்களைப் பயிற்றுவித்து வரும் திருமறைக்கலாமன்றத்தை ஏன் குறிப்பிடாமல் விட்டார்?

திருமறைக் கலாமன்றத்தைத் தொடங்கி நடாத்தி வருபவர் சார்ந்திருக்கும் சமயத்தின் காரணமாகவா அல்லது அதற்கு இங்கும் பிற நாடுகளிலும் ஏற்பட்டிருக்கும் புகழின் மேல் கொண்ட பொறாமையின் காரணமாகவா அல்லது அது கடைப்பிடித்து வரும் நேரிய ஒழுங்கான கொள்கைகளுடன் உடன்பாடு இல்லாததினாலா அல்லது அதன் வளர்ச்சி தங்களின் தோற்றத்தை மறைத்துவிடும் என்ற பயத்தினாலா இந்த எதிர்ப்புக்களும், காழ்ப்புணர்வுகளும் எழுகின்றன என்று எண்ணத்தோன்றுகின்றது.

*அருள்.மா.இராசேந்திரன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மறுபக்கம்

## கல்வெட்டும் கதைப்புத்தகமும்

ஸ்டார் எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களது மணிவிழா மலர் கண்டேன். மத்திய, மாநில மந்திரிகள், பிரபல அரசியல்வாதிகள் ஆகியோர் அவசர அவசரமாக அளித்த ஆசிச்செய்திகள், ஒரிஜினல் தபால் தலைகளுட னேயே பிரதி செய்யப்பட்டு அச்சாகியுள்ளன. அவர்களால் ஜெயகாந்தன் பெற்றுக் கொண்டவை அனேகம்! மற்றும், ''வாராது வந்த மாமணியைத் தோற்போமோ'' என்னும் தொனியில் புத்தக வெளியீட்டாளர்கள் + வியாபாரிகளினால் அளிக்கப்பட்ட புகழ்மாலைகள்......... முதலியன .... முதலியன.... இவர்கள் ஜெயகாந்தனால் இலாபமடைந்தவர்கள். தவிர, பல்வேறு கோணங்களில் அன்னாரின் 'திருவுருவப்' படங்கள் வேறு புத்தகத்தை இடையிடையே அலங்கரிக்கின்றன. வலு கலாதியான புத்தகம்!

சும்மா சொல்லக்கூடாது சரஸ்வதி காலத்து ஜெயகாந்தனின் சிறுகதைகள், சாணைக்கல்லில் தீட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற வில்லுக்கத்திக்கு ஒப்பானவை. சுந்தர - ராமசாமி ஓரிடத்தில் கூறியது போல ''கூடத்தில் உட்கார்ந்து வாசனைத் தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்த தமிழ்ச் சிறுகதையை தெருவுக்கு இழுத்துவந்தவர் புதுமைப்பித்தன். அதை தெருவழியே ஓட ஓட விரட்டியவர் ஜெயகாந்தன்.''

அந்த ஜெயகாந்தன் 'நாவல் எழுதுகிறேன் பேர்வழியே'' என்று ஆரம்பித்து இன்று நம்மிடையே இருந்து மறைந்துவிட்டார்.

ஆரம்பகால ஜெயகாந்தன் இன்று எம்மிடையே இல்லை என எண்ணும் போது ஒரே கவலையாக இருக்கிறது.

போதாதகாலத்துக்கு மணிவிழா மலரைப் பார்க்கும் போதும் கல்வெட்டு ஒன்றைப் பார்ப்பது போலவே இருக்கிறது.

ஓம்.... சாந்தி! சாந்தி!

பி.கு.:- எழுத்தாளர்களில் சிலர் ஏன் மணிவிழா கொண்டாடுகின்றார்கள் என்று நண்பனைக் கேட்டேன். அறுபது ஆண்டுகள் இப்புண்ணிய பூமியில் வாழ்ந்துவிட்டதை தம் பட்டமடிக்கும் ஒரு முசுப்பாத்திக் கொண்டாட்டம் என்று பதில் சொன்னான்.

அத்துடன் விட்டு விடாமல், சில மனிதர்களது வயதை அளப்பதற்கு கழுதை என்றொரு பொருத்தமான அளவை இருப்பதாகவும் அறுக்கத் தொடங்கினான்.

●

தமிழகத்திலிருந்து வெளிவருகின்ற புத்தகங்களில் சில எளிமையும், கவர்ச்சியும் ஒழுங்கமைவும் ஒருங்கே இணைய அருமையாக வடிவமைக்கப்படுதல் உண்டு. உமாவரதராஜனின் ''உள்மன யாத்திரை'' தகுந்த உதாரணம். அவ்வாறான நல்லதொரு வடிவமைப்புடன் இன்னுமொரு சிறுகதைத் தொகுதி அண்மையில் வெளிவந்திருக்கிறது. ''தீர்த்தக்கரைக் கதைகள்'' என்ற பெயரில்.

1980 - 1982 காலப்பகுதியில் மலையகத்திலிருந்து வெளிவந்த சஞ்சிகைகளுள் தீர்த்தக்கரையும் ஒன்று. பாதியில் மறைந்து மீண்டும் விடாமுயற்சியுடன் நந்தலாலா என்னும் பெயரில் புனர்ஜன்மம் எடுத்திருக்கிறது. இலங்கையில் சிறுசிஞ்சிகைகளுக்கு இது பொது விதிபோலும்.

தீர்த்தக்கரையிலும் நந்தலாலாவிலும் வெளியாகிய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு ''தீர்த்தக்கரைக் கதைகள்'' எனும் பெயரில் இப்போ படிக்கக் கிடைக்கின்றன.

இலங்கையின் தமிழ் எழுத்தாளர்கள் சிறுசஞ்சிகைகள், வாரமஞ்சரிகள் மூலம் பரிச்சியமாகிற போதிலும், அவர்களுடைய எழுத்துக்கள் புத்தகமாக வெளியாகிய பிறகே போதிய கவனத்தைப் பெறுவது வழக்கம். புத்தகம் வந்த பின்னரே, பிரபல விமர்சகர்கள் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ''ஊரென்ன, பேரென்ன?'' எனத்தொடங்கி 'ஆகா... கண்டு கொண்டேன் நானே'' எனக் கொண்டாடி...... இறுதியில் இன்னாரும் எழுதுகிறாராம் என்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பதும் வழக்கம்.

அந்த வழக்கத்தின்படி தீர்த்தக்கரைக் கதைகளின் மூலமாக ஆனந்தராகவன், பிரான்ஸிஸ் சேவியர், ஏ.எஸ்.சந்திர போஸ், கேகாலை கயிலைநாதன், ராமையா முருகவேள் ஆகியோர் மீள்கண்டு பிடிப்புச் செய்யப்படுவார்கள்.

சில நல்ல கதைகள் இந்தப் புத்தகத்தினூடாக எனக்குப் படிக்கக் கிடைத்தன. தேக்கம் மிகுந்த இந்தச் சில ஆண்டுகளுக்குப் பிறகு நல்லதொரு தொகுதியாக இது கணிக்கப்படும் வாய்ப்பு உண்டு.

உத்தியோகபூர்வமாக வெளியீட்டு விழா ஒன்றை நடாத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் நம் எழுத்தாளர்களுக்கு பிரம்மன் எழுத்து. அதுவும் விரைவில் நடைபெறும் என்று அறியமுடிகிறது.

●

## நம்முன்னோர் அளித்த அருஞ்செல்வம்

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் தொடர்பாக நான் தெரிவித்த கருத்து பிரான்சிலுள்ள நண்பர் சுகன் அவர்களை எரிச்சலடையச் செய்ததையிட்டு மிகுந்த சந்தோஷம்!

மூதாதையரை (தந்தை!) தேடுதல் பற்றி நண்பர் வெறுப்படைந்து போயுள்ளார். அத்துடன் கொழும்பில் இருந்து தெரிவிக்கப்படும் கருத்துக்களை அவர் பரிசீலிக்கப் போவதுமில்லையாம். நண்பர் ஐரோப்பாவில் மட்டுமே அகதிகள் உள்ளார்கள் எனக்கருதுவதாகவும் தெரிகிறது. அதைவிட வேடிக்கை, ஏதோ தமிழிலக்கியத்துக்கு ஒரு அதிகாரபீடம் கொழும்பில் மையம் கொண்டுள்ளது போலவும், அதன் ஆதிக்கக் கரங்கள் ஐரோப்பாவில் புகலிடம் பெற்றவர்களின் இலக்கிய முயற்சிகளை நசுக்கிவிட தீர்மானித்திருப்பதாகவும் கொண்டிருக்கும் அர்த்தமற்ற மனப்பிராந்தி.




மூதாதையரைத் தேடுதல் பற்றி சுகன் அவர்களுக்கு வெறுப்பு இருப்பினும் நமது எதிர்காலச் சந்ததி பற்றியாவது அவருக்குச் சிறிது அக்கறை இருப்பதாக நாம் கருதுவோம். எதிர்காலச் சந்ததி பற்றி அக்கறை கொள்ளும் எவரும் மூதாதையர் பற்றி தெரிந்து கொள்ளுதலும் மிக மிக அவசியமாகும்.

புகலிட இலக்கியம் 'தமிழில்' எனக்குறுக்கி அடையாளப்படுத்தப்படுவதை ஏற்றுக் கொள்வதில்லை என்ற கருத்தும் நகைப்பிற்குரியது. அது குறுக்குதல் அல்ல வகுத்தல் என்றே கொள்ள வேண்டும். சிலவேளைகளில் எதிர்காலத்தில் ''சுகன் அவர்களுடைய புகலிட இலக்கிய முயற்சிகள்'' என ஆழ்வார்க்குட்டியோ அல்லது வேறு யாராவதோ ஒரு குறிப்பு எழுதவும் நேரலாம். அதன் பொருள் புகலிட இலக்கியத்தை சுகன் அவர்களுக்காக மட்டுமே குறுக்கி மட்டந்தட்டுவதல்ல, புகலிட இலக்கியத்துக்கு சுகன் அவர்களின் பங்களிப்பு என்ன என வகுத்துப் பார்த்தலாகும்!

எது எவ்வாறாயினும் நண்பர் சுகன் அவர்கள் எழுப்பிய கலகக் குரல் குறித்து மகிழ்ச்சியே. கலகத்தினால் இறுதியில் நன்மையே விளையும். புலம்பெயர்ந்தோர் இலக்கியம் பற்றிய ஆரோக்கியமான கருத்துக்களுக்கான களம் ஒன்று உருவாகுதல் வேண்டும். சரிநிகர் ஆசிரியபீடத்திடம் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

அண்மையில் சுபமங்களாவில் மேலாண்மை பொன்னுச்சாமி அவர்கள் ''யோகநாதன் இலக்கிய உலகின் சிகரங்களைத் தொட்டவர்களில் ஒருவர்'' எனக் கூறியிருக்கிறார். குறைந்த பட்சம் இவ்வாறான படுமோசமான விபத்துக்களைச் சுட்டிக்காட்டவாவது இந்தக் களம் நமக்கு உதவட்டும்.

எனக்கு மூதாதையரிடம் நிறைய மதிப்புண்டு. புதுமைப்பித்தனையும், பாரதியையும், எம்.வி.வெங்கட்ராமையும், ஜானகிராமனையும், மு.த.ஐயும் இன்னும் பலரையும் நான் இன்றும் கழுத்து வலிக்க அண்ணாந்து பார்க்கிறேன். அந்தளவு உயரத்தில் அவர்கள் இருக்கிறார்கள். தவிர நமது சமகாலத்தவர்களாகிய ஜெயமோகன், உமா வரதராஜன் போன்றோரையும் இன்னும் பலரையும் பார்த்து வியந்து நான் மூக்கில் விரல் வைக்கிறேன்.

நமது ஆதி மூதாதையரில் ஒருவரான அனுமார் சாமியிடம் எனக்கு விஷேசபற்றுதல். உமாவரதராஜன் எழுதிய எலிக்கதையும் (எலியம்) ஜெயமோகன் எழுதிய குரங்குக் கதையும் (லங்கா தகனம்) எனக்குப் பிடித்த பல கதைகளுள் இரண்டு. ''லங்கா தகனம்'' என்னும் கதையில் ஒரு நாட்டியக் கலைஞனின் தீவிர சாதகநிலை விபரிக்கப்படுகிறது. அனுமார் வேடம் தரிக்கும் அந்த நாட்டியக் கலைஞன் தனது தீவிர சாதனைப்பயிற்சிகள் மூலம் சாட்சாத் அனுமாராகவே மாறிவிடுவதை அற்புதமாகத் தீட்டியிருக்கிறார் ஜெயமோகன். தேர்ந்த கலைஞன் ஒருவனிடம் இந்த தீவிர மனஒடுக்கம், இந்த சாதக நிலை, பித்து நிலை காணப்படும். நமது பெரும்பாலான எழுத்தாளர்களிடம் இது அறவே கிடையாது.

சாதகர்கள் வாழ்வில் இவ்வாறான சம்பவங்கள் நிறைந்துள்ளதாக வேதாந்திகள் கூறியிருக்கிறார்கள். உதாரணமாக ஸ்ரீ ராமகிருஸ்ண பரமஹம்ஸர் வரலாற்றில் பல ருசிகரமான சம்பவங்களைக் காணலாம். நாம் அவற்றை நம்புவதோ அல்லது நம்பாததோ ஒருபுறமிருக்க அவற்றைத் தெரிந்து கொள்ளுதல் ருசிகரமானது.

ஸ்ரீராமனின் திவ்ய காட்சியைப் பெற விளைந்த பரமஹம்ஸர் தன்னை அனுமானாகப்பாவித்து சாதனை செய்ததன் பலனாக அனுமானைப் போலவே மாறிவிட்டாராம். அவர் தமது சிஷ்யர்களிடம் பின்னாட்களில் கூறியபடி......

''அந்த நாட்களில் நான் அனுமானைப் போலவே நடந்தேன், உண்டேன். மற்றச் செயல்களையும் செய்தேன். வேண்டுமென்று அவ்வாறு செய்யவில்லை. தானாகவே அவை நிகழ்ந்தன. இடுப்பைச் சுற்றி ஒரு துணியைக் கட்டி வால் போல் தொங்கவிட்டுக்கொண்டேன். குதித்துக் குதித்தே நடந்தேன். பழங்களையும் கிழங்குகளையும் தவிர வேறெதையும் உண்ணாதிருந்தேன். அவற்றைக் கூட தோலுரித்து உண்ணத் தோன்றவில்லை. நாளின் பெரும்பகுதியை மரக்கிளைகளிலேயே கழித்தேன். பக்தி மேலீட்டால் எப்போதும் ''ராமா ராமா'' என்று கூவிக்கொண்டேயிருந்தேன். வானரங்களைப் போலவே என் கண்கள் எப்போதும் ஒரு பரபரப்பான பார்வையைப் பெற்றன. விந்தை என்னவெனில் என் முதுகுத் தண்டின் கீழ்ப்பகுதி ஓர் அங்குலத்துக்கும் மேலே அப்போது வளர்ந்திருந்தது!

இவை போன்றவற்றை சிரத்தையுடன் வாசித்திருந்தால் அன்றி ஜெயமோகனால் லங்கா தகனம் போன்ற கதைகளை எழுதியிருக்க முடியாது என்பது திண்ணம். மூதாதையரைப் பற்றி அறிந்திருப்பதில் உள்ள இலாபம் இதுதான்!

மற்றும், மதுரபாவனைக் காலத்தில் பரமஹம்ஸர் தம்மை ராதையாகப் பாவித்து சாதனை செய்து பெண்ணாகவே மாறிவிட்டாராம். (ஆணைப் பெண்ணாக்க முயல்பவர்களுக்கு இது ஆழ்வார்க்குட்டியின் உபயம்) இந்தக் காலகட்டத்தில் பெண்களைப்போலவே தமக்கு மாதவிடாய் ஏற்பட்டதாகவும், தொப்பூளுக்குக் கீழே உள்ள மயிர்கால்களில் இருந்து அந்த நாட்கள் முழுவதும் இரத்தம் கசிந்து கொண்டிருந்ததாகவும், அவர் கூறியதாக அவரது சிஷ்யர்கள் எழுதியிருக்கிறார்கள்.

எமது பகுத்தறிவை இதன் மீது பிரயோகிப்பது ஒரு புறமிருக்க, ராமகிருஸ்ணரின் 6வது வயதில் அவருக்கு ஏற்பட்ட முதலாவது பரவச நிலையைப் பற்றி அவர் கூறிச் சென்றிருப்பது ஒரு இனிய கவிதானுபவமாகும். அவரது வார்த்தைகளிலேயே கூறுவதாயின்.......

''ஒரு நாள் காலைப் பொழுதில் கூடை ஒன்றில் பொரியை வைத்துத் தின்றவாறே வயல்வரப்பு வழியாக நடந்து கொண்டிந்தேன். அது வைகாசி அல்லது ஆனி மாதமாக இருக்கலாம். வானத்தில் ஒரு பகுதியிலிருந்து மழைமேகங்கள் திரளத் தொடங்கின. நான் அந்தக் கருமையின் அழகில் ஈடுபடலானேன். சிறிது நேரத்தில் வானம் முழுவதும் கருமேகங்கள் சூழ்ந்துவிட்டன. அந்தக் கருமைப் பின்னணியில் பால் போன்ற வெண்ணிற நாரைகள் சில அமைதியாகப் பறந்து சென்றன. என்ன அற்புதமான காட்சி அது. அதன் அழகில் என்னையே நான் மறந்துவிட்டேன். அப்படியே அதில் லயித்து புறவுலக நினைவை இழந்து கீழேவிழுந்தேன். கையிலிருந்த பொரி வயலில் சிதறியது.''

இது ஒரு சிறுதுளி. ராமகிருஸ்ணர் தமிழரல்லர் எனினும் தமிழுக்கு இவர் போன்ற சாதகர்களும், நாயன்மார்களும் ஆழ்வார்களும் மிகுந்த பங்களிப்பைச் செய்துள்ளார்கள். அவர்கள் பாவித்த விறல் மிகு வார்த்தைகளுக்காக இக்கால இளைஞர்களாகிய நாம் தவம் கிடக்க வேண்டும்.

அருஞ் செல்வங்களை நமக்களித்த முன்னோர்களைப் போற்றுவோம். அதைவிடுத்து நாம் தந்தையைத் தேடித்தரச் சொல்லிக் கேட்டோமா? என விட்டேற்றியாகச் சொல்வது பொறுப்பற்ற செயலாகும். வரலாறு எம்மை மன்னிக்காது.

**ஆழ்வார்க்குட்டி**



ஈரமனதைத்
துயரப் பறவை
கொத்தி விட்டுப் போகும்.

என் மனக் குளத்தின்
எந்த மீனிருப்பதால்
இந்த விதி நேர்கிறதிப்படி?

வெண்மை பரவும்.
வானில் தொலையும் நீலம்.
பின்னரது சூடும்
பொன்நிறைத்தவோர் கோலம்.

காற்றிற் காலமும்
காலத்திற் காற்றும்
கரையக்
கணங் கணம் புதிது தோன்றலே
காலத்தினழகின் இரகசியம்.

மென் மனதின்ஈரத்தில்
இன்னுமிங்கு பூ மலரும்

பூமலரக் காரணமாய்
ஏதோவென்று
மறைந்திருந்து மழையாகும்

கொத்திய காயமும்
கலங்கிய மனமும்
ஏதோவொன்றால்
ஆறுதலாகும்

நானந்தக் கரமறியேன்
தொடுதலும் அணைப்பும்
மாத்திரமுணர்வேன்.

பூவைக் கொஞ்ச வருங்காற்று
இலைகளை அசைக்காமல்
இடுவதில்லை முத்தம்

எந்தன் மனதில்
அந்தத் தொடுகை
அதிர்வுகளற்ற மௌனத்தில்
நிகழும்
ஒரு தாயின் முத்தம்

மனதினாழத்தினில்
சில நேரம் முகந்தெரியும்.
சில நேரம்.

வீரமாகாளி

மௌனத்தால்
இந்தப் புவிவாழ்வில்
புதையுண்டு போயினும்
பாயுமொளியாய் உயிரினில் மேவி

வாழ்வின் விதையும்
மழையுமாகுமுந்தன்
பெயரெழுத
மனதினீரம் தோய்த்தெடுத்த
வாழ்வின் வார்த்தைகளால்
மரணத்தை அழித்தெழுத
ஒவ்வொரு நாளும்
நானுயிர்ப்பேன்

—துர்க்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## கலாசார மண்டப குடியேற்றம்: “நான் நடவடிக்கை எடுத்தேன்!”

– தங்கத்துரை எம்.பி

தங்களின் இதழ் 73, ஜூன் 1 - 14, 1995 'சரிநிகர்' பத்திரிகையின் கடைசிப்பக்கத்தில் (16ம் பக்கத்தில்) வெளியாகிய 'வி' என்பவரின் 'திருமலை கலாசார மண்டபம் குடியேற்றம்' எனும் செய்திக் கட்டுரையில், ''திருகோணமலை மக்களின் வாக்குகளைப் பெற்றுச் சம்பளம் எடுத்துக் கொண்டிருப்பவர்கள் இந்த விடயத்தில் ஏதாவது செய்தார்களோ தெரியவில்லை'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒரு சம்பவத்தைப்பற்றி விமர்சனம் எழுத முற்படுபவர் அந்தச் சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், வெளியாகியிருக்கும் பத்திரிகைச் செய்திகள் ஆகியவற்றை ஆராய்ந்த பின்னரே எழுதவேண்டும்.

ஆயுதப்படையினர் கலாசார மண்டபத்தை தமது முகாமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க முற்பட்டதும், இது குறித்து நான் உடனடியாக இக்கலாசார மண்டபத்திற்கு உரித்துடைய தமிழ் பல்கலைக்கழக இயக்க நம்பிக்கைப் பொறுப்பாளர் குழுவின் சில அங்கத்தவர்களான திருவாளர்கள். புகேந்திரன், சிவபாதசுந்தரம், விநாயகமூர்த்தி ஆகியோருடன் தொடர்பு கொண்டு - இச்சம்பவம் தொடர்பாக முழு உண்மை விபரங்களையும் தெரிந்து கொண்ட பின், பாராளுமன்றத்தில் 12.05.1995 வெள்ளிக்கிழமை அவசரகாலச் சட்ட விவாதத்தின் போது இப்பிரச்சினையை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்து உடனடியாக இதில் தலையிட்டு தடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். (பாராளுமன்ற விவாதங்கள் ஹன்சார்ட் - தொகுதி 99, இல.3, பக்கங்கள் 221 - 224 - பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

எனது உரையின் பின்னர் உரையாற்றிய கௌரவ எஸ்.சிவதாஸன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் தமதுரையில் எனது உரையை மேற்கோள் காட்டிப்பேசியதுடன், இந்நடவடிக்கையை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார்.

எனது மேற்படி பாராளுமன்ற உரை 14.05.1995 ஞாயிறு 'தினகரன்' 14 ஆம் பக்கத்திலுள், 15.05.1995 திங்கள் 'வீரகேசரி' முதலாம், ஏழாம் பக்கங்களிலும், 21.05.1995 ஞாயிறு 'தினத்தந்தி' 7ம் பக்கத்திலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

விமர்சனத்தை எழுதிய ''வி'' அவர்களுக்கு பாராளுமன்ற விவாதங்கள் (ஹன்சார்ட்) படிக்கச் சந்தர்ப்பம் அல்லது வாய்ப்பு கிடைத்திருக்காவிட்டாலும், மேற்கூறிய மூன்று தமிழ் பத்திரிகைகளில் ஏதாவது ஒன்றினை யாவது படித்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் தனது சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர்களை (விசேடமாக இம்மாவட்டத்தின் ஒரேயொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னை) சாடியுள்ளார்.

தெரியாமல் ஒரு செய்தியை வெளியிடக்கூடாது. 'தெரியவில்லை' என்றால் அந்தப் பகுதியை எழுதாது விட்டிருக்கலாம். சரிநிகர் - ஒரு பொறுப்பான பத்திரிகை என்று பலராலும் கருதப்படுகின்றது. எனவே இப்படியான தவறான - மற்றவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக் கூடிய செய்திகளைப் பிரசுரிப்பதற்கு முன்பு 'ஆசிரியர் குழு' பரிசீலனை செய்து உண்மையைக் கண்டறிந்து பிரசுரிப்பதே முறையானதாகும்.

*அ.தங்கத்துரை*
*பாராளுமன்ற உறுப்பினர்*
*திருகோணமலை மாவட்டம்*


## “விதி” பற்றித் தெரியாதது ஆச்சரியமே!

சரிநிகர், இதழ் 72இல் வெளியாகியுள்ள 93ன் ஈழத்தமிழ் நாவல்கள் பற்றிய நுஃமான் அவர்களின் தேர்வுக் கட்டுரை குறித்து ஒரு விஷயத்தைத் தெரிவிப்பதற்காகவே இக்கடிதம்.

கட்டுரையில் கட்டுரையாசிரியர் 93ல் வெளிவந்த ஈழத்தமிழ் நாவல்கள் பதினான்கு என அட்டவணை தருகிறார். அது அப்படியல்ல. பதினைந்து அல்லது அதற்கும் மேலே. ஏனெனில், 93 டிசம்பரில் வெளிவந்த எனது நாவல் 'விதி' கணக்கில் எடுத்துக்கொள்ளப் படவில்லை. அதுபோல் வேறு சில நாவல்களும் தவறிப்போயிருக்க வாய்ப்புண்டு. விதி நாவல் 'வேர்கள் இலக்கிய இயக்கம் - நெய்வேலி'யின் விற்பனை உரிமையில் 93ல் வெளிவந்தது மட்டுமல்ல, தமிழகம் பூரா பரவலான விற்பனையிலுமுள்ளது. பூபாலசிங்கம், சவுத் ஏசியன், குமரன் புத்தகக் கடைகளிலும் விற்பனைக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ளது. இந்நிலையில் 'விதி' நாவல் பற்றி தெரிந்து கொள்ள முடியாது போனது எங்கனம்? ஆச்சரியம்தான். எனினும் தவறிப் போயிருக்கலாம் என்பதையும் நான் உணர்கிறேன்.

வெளிவந்த நூலொன்று பதிவு பெறாமல் போவது 'பாவம்'!

**தேவகாந்தன்**
**சென்னை**




## வனத்தின் அழைப்பு: தமிழில் வெளியான மிக முக்கியமான நெடுங்கவிதை!

சரிநிகரில் தொடர்ந்து வெளியான 'அஸ்வகோஸின்' வனத்தின் அழைப்பு அண்மைக்காலங்களில் தமிழில் வெளியான மிக முக்கியமான நெடுங்கவிதையாகும்.

அதனைத் திரும்பத் திரும்ப வாசித்து விட்டேன். வாசித்து முடிக்கும் ஒவ்வொருமுறையும் அலையடித்து ஓய்ந்தது போல் இருக்கின்றது. கவிதைக்கு பல பரிமாணங்கள் இருந்தாலும் இறுதியில் ஒரு குழப்பமே எஞ்சுவது போல் உள்ளது. படைப்பின் கனம் அதனைச் ''சீ'' என்று ஒதுக்குவதற்கும் இடம்தரவில்லை. சரிநிகரில் விமர்சனங்கள் முன்வைக்கப்படும் அவற்றில் இருந்து கவிதையின் ஓர் இழையைப் பிடித்துவிட முடியும் என்று காத்திருந்தேன்; அந்த எதிர்பார்ப்பும் பொய்த்துவிட்டது. ஒரு படைப்பாளிக்கும் தனது படைப்பு எவ்வளவு தூரம் புரிந்துணரப்பட்டிருக்கிறது என்பது தெரியவேண்டும் என்பதாலும் என்னைப்போல் காத்திருக்கும் ஏனையோருக்காகவும் சில பதிவுகளை முன்வைக்கிறேன்.

கவிஞரின் கவித்துவம் அவரது படைப்பில் நன்கு தெரிகிறது. ''இருட்குகையில் சிதைந்த மனிதரின் நினைவிற்கு'' என்னும் அவரது முன்னுரை கவிதை விரிவுபடும் தளங்களைக் குறைத்துவிட்டது. கவிஞரின் குறியீட்டு உருவகங்கள் (''பிதாமகர் தேர்த்தட்டின் கீழே / பூமியில் புரண்டார்'', ''பெருநகர் வீதியில் / தரிசு நிலங்கள் விதைக்கப்பட்டன'') அவற்றின் பிரயோகத்தில் அவருக்கு இருக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுகின்றது. ''வரலாறு அம்பணையில் துஞ்சியது'' என்னும் சொற்றொடர் கவிதையின் காத்திரத்தன்மைக்கு மெருகேற்றுகிறது.

சுருதி சேர ஏலாது / பேராறுகள் பெருங்கடல்கள் / தாண்டிப்போன நண்பர்களே / பேசுங்கள் / ஒருமுறையாவது கடலுடன் பேசுங்கள் '' கவிஞரின் அனுதாபமும் கவலையும் வெளிப்படும் அதே நேரத்தில் மிகுந்த உள்ளர்த்தம் பொதிந்ததாகவும் இது மிளிர்கிறது. ''நான் வெறும் கருவி / கடமையைச் செய்தேன் / என்னை மன்னியும்'' என்ற வரிகளும், ''வரலாறு அம்பணையில் துஞ்சியது / வீரம் வழிநடந்தது'' என்னும் வரிகளும் நிகழ்த்தப்பட்ட தவறுகள், காலத்தின் கட்டாயம் பற்றி நிகழ்ந்தவையாக அவற்றை நியாயப்படுத்தும் ஒரு தன்மை காணப்படுகின்றது.

தவம் என்னும் பகுதியில் ''வானம் பூமி பிளந்த இரவில் / அவன் சிதறிக்கிடந்தான்'' என்று கூறிப்பின்னால் ''தவத்தில் அமைந்தவன் / உள்ளுணர்வுந்தக் கண்விழித்தான்'' என்று கூறுவது கவிதையின் போக்கையும் அதன் உள்ளமைந்த போக்கையும் புரிதலில் சிக்கலை எற்படுத்துகிறது. மேலும் கவிதையின் போக்குப் பல இடங்களில் தொடர்பற்று முறிக்கப்படுகிறது. இது ஒரு குறியீட்டு உத்தியாக இருப்பினும் கூட கவிதையின் புரிதலைச் சிக்கலாக்குகிறது.

''மூலிகை தேடி மனிதர் வருமோர் / காலத்தில் உயிர்ப்பதற்காய்'' கவிஞர் நன்னாரி வேர்களில் பத்திரப்படுத்துவது எதனை? மூலிகை என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகிறார்? வெறும் வரட்டுத்தத்துவங்களையா அல்லது வெறும் வரலாற்றுப் பதிவுகளையா?! எது என்று புரியவில்லை.

மேற்கூறிய குறைபாடுகள் இருப்பினும் இக்கவிதையை ஒரு முழுமையான படைப்பாகக் கொள்ளலாம்.

*ரீ.வி.ஆர்.எஸ்.*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*பேராதனை.*

## பின் கதவால் போய்விடும் மருந்து!

திருகோணமலையில் மடத்தடிச் சந்தியில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலையில் வரும் நல்ல மருந்துகளை பின் கதவு வழியாகக் காசுக்கு விற்று விடுகிறார்கள். நோயாளர் போனால் துண்டு கொடுத்து எட்டாம் நம்பர் கூப்பன் கடைக்கு முன்னால் உள்ள வீட்டில் போய் வாங்குங்கள் என்று சொல்கிறார் இங்குள்ள பெண் டாக்டர். பணவசதியில்லாதவர்கள் எங்கே போவது - இதனை சம்பந்தப்பட்டவர்களிடம் அறியத்தருமாறு வேண்டுகிறேன்.

**யூ.பேதுரு**
**திருகோணமலை**

## ரெலோ மறுக்கிறது!

தங்களது மே.05 - மே.17, 1995 சரிநிகர் பத்திரிகையில் பக்கம் 15 இல் ''ரெலோஸ்டுகளின் கைவரிசை'' என்ற தலைப்பில் மகிழடித்தீவு முகாமில் ரெலோஸ்டுகள் மூவர் மீண்டும் பொதுமக்கள் மீது அடாவடித்தனம் என்ற சாரத்தில் வெளியிடப்பட்ட செய்திகளைப் பார்த்து அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளோம்.

உண்மையில் மகிழடித்தீவு முகாமில் எமது உறுப்பினர்கள் எவரும் இல்லை என்பதுடன் இது உண்மைக்குப் புறம்பான செய்தி என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்களால் வெளியிடப்பட்ட செய்திக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை எமது இந்த மறுப்பறிக்கைக்கும் தங்களது பத்திரிகையில் கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*எம்.கே.சிவாஜிலிங்கம்*
*செயலாளர் நாயகம்*
*(ரெலோ)*

## ஆரையம்பதியில் 'பிரம்படிபட்டவர்கள்'

ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஏப்ரல் 22 இரவு 7 மணி தொடக்கம் 8.30 மணிவரை ஆரையம்பதி இராணுவமுகாம் படைவீரர் மூவர் உதவியுடன் மூன்று ரெலோ வீரர்கள் ஆயுதங்களோடும் மற்றும் மஞ்சவண்ணா பொல்லோடும் கிராமத்தில் புகுந்து தமது வீரத்தைக் காட்டி அடித்துக் கொடுமைப்படுத்திப் போனார்கள். இருட்டடி என சொல்லப்படும் அடிதான் எங்கள் முதுகைப் பதம் பார்த்தது. முக்கியமாக மின்சாரம் இல்லாத பகுதிகளை தெரிவு செய்து கைவிளக்கை அணைக்கச் சொல்லியே அடித்தார்கள். இதில் கொடுமை என்னவென்றால் அடிக்கும் காரணத்தை அரச வீரர்கள் சொல்லவில்லை. அடி வாங்கும் காரணமும் எங்களுக்குத் தெரியவில்லை.

ரெலொ வீரன் அச்சுதன், அன்பர், யோகன் ஆகியோரே இராணுவத்தை சாராயத்தில் மயக்கி அழைத்து வந்தவர்கள். இச்சம்பவம் இப்பகுதியின் இராணுவ நிலையத்தில் '' ஜென்ரில் மேன்'' எனப் பெயர் எடுத்த இராணுவத் தலைவர் இல்லாத சமயம் இடம் பெற்றுள்ளது. இவ்விடயத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**க.தருமரெட்னம்**
**ஆரையம்பதி**

## மகாஜனன் சட்டாம்பிள்ளையா?

ஈழத்து இலக்கியத்தினை சரியான முறையில் அடையாளம் காட்ட வேண்டிய தேவை சரிநிகருக்கு இருக்கின்றது. இந்த விடயத்தை உணர்ந்திருப்பதாகவும் படுகின்றது. சரிநிகர், இன்னும் கவிதை, சிறுகதை, நாடகம், விமரிசனம் என்பனவற்றுக்கும் கூடுதலான பங்களிப்பினை வழங்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும்.

நவீன இலக்கிங்களுக்கு/ இலக்கிய முயற்சிகளுக்கு சுதந்திரமான ஒரு களமாக சரிநிகர் இயங்க விளைந்தாலும், சிலர் படைப்புக்கள், படைப்பாளிகள் மீது புதிய சட்டங்களை: இலக்கணங்களை திணிப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. மகாஜனன் பத்தியினூடாக இதை உணர்ந்தேன். தன்னை ஒரு 'பூரண' படைப்பாளியாக இனம்காட்டிக் கொள்ளும் வேட்கையில் சில விளைச்சல்களின் மீது சட்டத்தை பிரயோகித்து, ஒரு படைப்பாளியின் சுதந்திரத்துக்கு எதிராய் நிற்கின்றார் மகாஜனன்.

விமரிசன இலக்கியம் தமிழில் வளர்ந்து வரும் வேளையில் விமரிசனத்தின் மீது (இப்பத்தி விமரிசனமன்று என்கின்றனர் சிலர்) வெறுப்பை ஏற்படுத்தும் காரியத்தையே மகாஜனன் பத்தி தருகிறது. மார்ச் 23 - ஏப்ரல் 5 சரிநிகர் இதழில் தன் பத்தியில் ''மண்ணின் நினைவுகள்'' என்ற கவிதைத் தொகுப்பு மீது மகாஜனன் பார்வையை செலுத்தி இருந்தார். (மண்ணின் நினைவுகள் தொகுப்பை படிக்கவில்லை. அது பற்றி சொல்லவும் முற்படவில்லை நான்; மகாஜனனின் எழுத்தையே குறிப்பிடுகின்றேன்)

எடுத்த எடுப்பியே 'பத்தோடு பதினொன்றாக வந்துள்ள கவிதைத் தொகுதி' என முடிவுகட்டும் மகாஜனன் இம்முடிவுக்கான தன் ஆராய்ச்சி முடிவை, ''புலம் பெயர்ந்தோரிடமிருந்து மண்ணை நினைத்து ஏங்குகின்ற. கவிதைகள் அதிகம் வெளிவந்துள்ளன. அதனால்தான் இது பத்தோடு பதினொன்றாவது கவிதை தொகுதி'' என்கின்றார். இந்த முடிவு எந்தளவு சரியானது என்று தெரியவில்லை. கவித்துவம் இல்லை, கவித்துவத்துக்கான முயற்சி தென்படுகின்றது என அடையாளம் காட்டும் கவிதைகளுக்கிடையில் என்ன வித்தியாசம் மிளிர்கிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்று, சிலர் தன்னை கவிஞனாக நிறுத்திக் கொள்ளலாம், தம் படைப்புக்கள் ஜீவிதமானது என்று விளம்பரம் செய்யவும் ( ஜீவிதமானது ஜீவிதமானதே. அதை விமர்சகனோ படைப்பாளிகளோ உணர்த்த வியர்வை சிந்த வேண்டியதில்லை) சங்க இலக்கியங்களை எடுத்து; அதற்கு நவீன முலாம் பூசிக் கொண்டு புதுக்கவிதை படைக்க முனைவதால் கவிதை இலக்கியத்தில் மறுபடியும் சங்க காலம் தொடர்வதை; ஊடுருவுவதைக் காண்கின்றோம்.

கவிதை உண்மையாக இருக்க வேண்டும் என மகாஜனன் விரும்புகின்றார். நல்லது. மண்ணின் நினைவுகளில் அப்படி இல்லை என்று உணர்ந்ததும் 'கவிதையை புடம் போட்டிருக்க வேண்டும். இன்னும் இன்னும் செப்பனிட்டு இருக்க வேண்டும்'' என்று '' கட்டளை'' பிறப்பிக்கின்றார்.

தொடர்ந்தும் ''அப்படிச் செய்தும் இயலாது என்றால் கவிதை எழுதுவதை நிறுத்தி விட்டு(!) கவிதை நூல்களை வாசிக்க வேண்டும். அதுதான் இதற்கான தீர்வு'' என்கிறார். எழுதுவதை நிறுத்தச் சொல்ல நீங்கள் யார்? ஒரு படைப்பு உருவாவது விமர்சகருக்காகவோ, பத்திரிகை ஆசிரியருக்காகவோ அல்ல! படிப்பவர்களுக்கு: மக்களுக்கு. ஒரு வேளை மக்களின் பிரதிநிதியே வாசகன் என்றால் அதை அள்ளி புதைப்போம்.

மகாஜனன் அவர்களே! கவிஞன் கவிதைப் புத்தகங்கள் படித்தால்தான் பூரணமாக முடியுமோ? அப்படி படித்து எழுதப்படும் கவிதைதான் நிலைக்குமோ? யாருடையதோ, எதற்காகவோ, நடந்த சுவடுகளையே பின் தொடரச் சொல்வதன் மூலமாக ஒரு மாற்றத்திற்கு எதிரான மரபையே வளர்க்க முடியும்! நீங்கள் படிப்பிப்பது போல கவிதை எழுத முயற்சி செய்திருந்தால், தமிழில் கவிதை 'வெண்பா''லிவிருந்து விலகி இருக்காது. கவிஞன் சுதந்திரமானவன் அதனால் தான் பாரதி முதல் ஜெயபாலன், சேரன், நுஃமான், அப்துல் ரகுமான் வரை முளைக்கவும் கிளை பரப்பவும் முடிந்தது.

கடந்த மே மாதம் 5-17 இதழில் கூட ''கானல் நீர் கனவு'' கவிதை தொகுதியினை (இதுவும் நான்காவது பரிமாணத்தின் வெளியீடே! நான்காவது பரிமாணத்தின் வெளியீட்டையே விமர்சிப்பதும் அதன் மீதே ''திருப்தி தராதது'' விமர்சன முடிவுடன் எழுதும் காதல்தான் என்னவோ?...) திருப்தி தராத கவிதைத் தொகுதி என்று முகத்தில் குத்தி விட்டு, வழமை போலவே கவிதை எழுத வேண்டும், கவிஞனாக வேண்டும் எனில் கவிதைப் புத்தகங்களை படிக்கும்படி கட்டாயப்படுத்துகின்றார்.

புத்தகம் படித்து உருவாக வேண்டிய தேவை விமர்சகனுக்கு வேண்டுமானால் இருக்கலாம். படைப்பாளிக்கு புத்தகம் படித்துதான் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டிய தேவையோ அவசியமோ இருக்காது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

*எம்.எச்.எம்.ஜவ்பர்*
*டிக்கோயா*

www.tamilarangam.net



# வடக்கு கிழக்கு மாகாணசபை: ஆணையாளர் சாம்ராச்சியம்!

வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தான் ஒரு அரசங்க ஊழியர் என்பதை மறந்து சர்வாதிகாரியாக நடந்து கொள்வதாகப் புகார்கள் எழுந்துள்ளன.

இவரது இந்தச் சர்வாதிகாரத் தன்மைக்கு ஒரு பெண் உத்தியோகத்தரே துணையாக இருந்து வருகின்றார் என்று பரவலாகப் பேசப்படுகிறது. தனித்து வாழும் இப்பெண் வீட்டிலேயே அவரும் தனித்துக் குடியேறியதால் வந்த வினை என்று ஊழியர்கள் பேசிக் கொள்கிறார்கள். இந்தப் பெண் மணியே அலுவலகத்தில் இவரை வழி நடத்துகிறாராம். எந்தத் தரத்திலான உத்தியோகத்தர் எந்த விடயத்தை ஆணையாளர் பார்வைக்குச் சமர்ப்பித்தாலும், இந்தப் பெண்ணின் ஆலோசனையின்றி ஆணையாளர் செயற்படுகிறாரில்லை என மேல்நிலை உத்தியோகத்தர்களே கவலைப்படுகின்றனர்.

இத்தனைக்கும் இந்தப் பெண் ஒரு வெளிக்கள உத்தியோகத்தரே. எனினும் அலுவலகத்தில் ஆணையாளருக்கு அருகில் இருந்து பர்தா கட்டிவிடுவதும், தனக்குப் புரியாத வேலைகளில் எல்லாம் மூக்கை நுழைப்பதுமாகக் காலம்கடத்திவருகிறார். ஆணையாளருடன் ஒன்றாகக் குடியிருப்பதால் இப்பெண்ணும் ஆணையாளர் மாதிரியே என ஊழியர்கள் பயந்து போயிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் ஆணையாளருக்கென உள்ளூராட்சி நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட பங்களா குடியிருப்பார் எவருமின்றிக் காய்கிறது. ஆணையாளர் இந்த வசதியான பங்களாவில் குடியேறலாமே எனக்கேட்டால் கேட்பவரை ஊழியர்கள் விஷமச் சிரிப்புடன் பார்க்கின்றனர். ஆணையாளர் சந்தோஷமாக இருந்து விட்டுப் போகட்டுமே என்றால், ஊழியர்களை அவர் தொல்லைப்படுத்துவதும் நிர்வாக ஊழல்கள் மலிந்து போயுள்ளதும் தான் பிரச்சினையாகி நிற்கின்றன.

மட்டக்களப்பில் மூன்றாம் தர நூலகர் ஒருவர், இருபத்தேழு வருடங்களைப் பூர்த்தி செய்தும் சேவையில் உறுதிப்படுத்தப்படாமல் இருக்கிறார். இத்தனைக்கும் அவர் ஒரு நேர்மையான கீழ்ப்படிவுள்ள ஊழியர். அவ்வப்போது நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க எவ்வித மேலதிக கொடுப்பனவுகளுமின்றி நூலகர் தரம் 11ல் கூட ஐந்து வருடம் கடமைகளை ஆற்றியுள்ளார். எனினும் இவர் ஏன் சேவையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதற்கு எவ்வித விளக்கங்களுமின்றி இன்றுவரை ஏமாற்றப்பட்டே வந்திருக்கின்றார். சேவையில் உறுதிப்படுத்தப்படாத ஊழியருக்கு ஒவ்வூதியம் வழங்கப்பட மாட்டாது. இந்த நிலையில் இவரது பிற்காலம் கேள்விக்குரியதாகவே இருக்கிறது.

இன்னொரு ஊழியர் பல ஒழுங்கீனங்கள் காரணமாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆணையாளரால் தண்டிக்கப்பட்டார். இவருக்குத் தண்டனையாக ஒரு வருட சம்பள ஏற்றம் நிறுத்தப்பட்டதோடு, இடமாற்மும் வழங்கப்பட்டது. இத்தனைக்கும் தனக்கு முறையான விசாரணை வைக்கப்படவில்லை என்றும் தன்மீது குற்றம் சுமத்திய அதிகாரியின் முடிவை 'ஈயடிச்சான் கொப்பியாக' ஆணையாளர் அமுல் நடத்தினாரென்றும் குற்றம் சாட்டிய இவ்வூழியர் தனக்கு நேர்ந்த அவலத்தை வடக்கு கிழக்கு ஆளுநரின் கவனத்துக் கொண்டு வந்தார். இதனால் பயந்து போன ஆணையாளர் அவசர அவசரமாகக் கடந்த மாதம் அந்த ஊழியருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் இரண்டு வருடங்களுக்கு முன் உமக்கு விதிக்கப்பட்ட தண்டனை ரத்துச் செய்யப்படுகிறது. முறையான விசாரணையின்றி மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு என்னிடமிருந்து பிழையான வழியில் கையொப்பம் பெறப்பட்டு விட்டது, என்ற சாரம் பட எழுதப்பட்டுள்ளது. ''அனுபவித்து முடிந்தபின் தண்டனை ரத்தானது எப்படி? '' என்று அந்த ஊழியர் தலைமைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்.

95ம் ஆண்டுக்குரிய இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் படி ஆணையாளர் வடக்கு கிழக்கு உள்ளூராட்சி ஊழியர்களைக் சுற்று நிருபம் மூலம் கேட்டிருந்தார். இவ்விண்ணப்ப முடிவு திகதி 94 டிசம்பர் 15 எனவும் இவ்விடமாற்றங்கள் 1.2.95 தொடக்கம் அமுலுக்கு வரும் எனவும் அறிவித்திருந்தார். விண்ணப்பித்த ஊழியர்கள் பாவம். இன்றுவரை இடமாற்றம் நடைபெறவே இல்லை. யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பகுதிகளிலிருந்து கஷ்டப்பயணத்துடன் வந்து தங்கள் இடமாற்றம் சம்பந்தமாக அறிய வந்த ஊழியர்கள் தங்கள் தலைவிதியை நொந்து கொள்வதைத் தவிர வழியேதும் இல்லை.

15.09.89ல் வெளியான 7/89 இலக்கச் சுற்று நிருபமொன்றின் பிரகாரம் அடிப்படைக் கல்வித்தகமையும் ஒரு வருட சேவையும் கொண்ட சிற்றூழியர்களிடையே விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு 1.1.1991 தொடக்கம் 26 பேர் எழுதுவினைஞர்களாக நியமனம் பெற்றனர். நான்கு வருடங்கள் முடிந்து ஐந்தாவது வருடமாகியும் இவர்களுக்கு இன்னமும் சேவை உறுதிப்படுத்தற் கடிதம் வழங்கப்படவில்லை. ஆணையாளரோ வலு அமைதியாக இருக்கிறார். 27 வருடங்களைப் பூர்த்தி செய்த மட்டக்களப்பு நூலகருக்கே சேவை உறுதிப்பாட்டை நான் வழங்கவில்லை; இவர்கள் என்ன பொடிப்பயல்கள்? என்று இருக்கின்றாரோ என்னவோ!

இவர் ஆணையாளராக வந்ததும் கரிசனையோடு செய்த வேலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களை மூடிய து தான். ''எல்லாம் நானே'' ஆக வேண்டும் என்ற இவரது எண்ணத்தினால் உள்ளூராட்சி சேவை வடக்கின் பல பகுதிகளில் அற்றுப் போய் விட்டது. பிரதேசச் செயலாளர்களே ''பார்ட்டைம்''' உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களாக நடிக்க வேண்டியிருக்கிறது. பிரதேசச் செயலாளர்கள் அரசாங்க அதிபர் நிர்வாகத்தின் கீழ் வருபவர்கள். அரசாங்க அதிபர்களே மத்திய அரசுக்குப் பிரதிநிதிகள். ஆனால், உள்ளூராட்சிச் சேவையோ முற்றுமுழுதாக மாகாண அரசின் அதிகாரத்துக்குட்பட்டது. இந்த நிலையில் மத்திய அரசின் ஊழியரான பிரதேசச் செயலாளர் மாகாண அரச ஊழியரான உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இருந்தால் எந்த அதிகாரம் வேலை செய்யும்? ஆணையாளருக்கு என்ன? கஷ்டம் ஊர் மக்களுக்குத் தானே!

ஆணையாளரிடம் ஒரு வாகனம் இருக்கிறது. பன்னிரண்டு ஆசனங்களைக் கொண்ட வாகனம் இது. இதில் ஆணையாளரும், அந்தப் பெண் உத்தியோகத்தருமே பயணம் செய்ய முடியும். வேறொருவரும் அந்த வாகனத்தைத் தொட்டுப் பார்க்கவும் முடியாது. பயணம் என்றால் இங்கு அங்கு அல்ல. கொழும்புதான். சிறிய வாகனங்களில் போவது தரக்குறைவானது என நினைக்கிறோரோ என்னவோ யார் கண்டது.

இந்த நிலையில் 53 - 9018 இலக்க வாகனம் ஒரு அதிகாரிக்கு கொடுக்கப்பட்டுள்ளதாம். அந்த அதிகாரியோ அந்த வாகனத்துடன் அம்பாறை மாவட்டத்தில் தானாம் வாசம். என்றாலும் பிரயாணப்படியும் எடுத்து விடுகிறாராம். அந்த அதிகாரிக்கு சொந்த இடம் அங்கு என்பதால் 'சில சலுகை காட்டினால் பரவாயில்லை. ஆனால், இது உரிமையாகி விட்டதே' என்பது தான் சக அதிகாரிகளுக்குக் கவலை. இந்த அதிகாரி எப்போதாவது தான் திருகோணமலைக்கு 'விசிட்' செய்வாராம். மற்றப்படி வீட்டோடுதான். அதிகாரியின் உத்தியோகத்தளம் திருக்கோணமலை அலுவலகம் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் அம்பாறை - திருமலை சடுகுடு ஆட்டத்தால் இவரது பணிகள் மாதக்கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன எனத் தெரியவருகின்றது. இதனை ஆணையாளர் கண்டு கொள்ளாதது தான் ஆச்சரியம்.

ஆணையாளரின் இந்த விளையாடல்களுக்கு எதிராக வடகிழக்கு பிரதம செயலாளர் கணேசநாதனிடம் முறையிட்டால் என்ன என்ற கேள்விக்குப் பதில்....... ஆணையாளர் கணேசநாதனின் 'செல்லப்பிராணி' என்பதுதான் பதிலாக கிடைக்கிறது. எதிர்ப்பார் இல்லாத முடிமன்னர் இந்த ஆணையாளர்!

**விவேகி**

### திருத்தம்

**இவ்விதழின் 5ம் பக்கத்தில் வெளியாகியுள்ள 'அரசியற் தீர்வற்ற இந்தியத் தலையீடு' கட்டுரையில் புலிகள் ராஜீவைக் கொல்லாமல் என்று தொடங்கும் பந்தியில் 'பிரபாகரன் ராஜீவைக் கொன்றார் என்பதை 'புலிகள் ராஜீவைக் கொன்றனர்' எனத்திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.**

**ஆ-ர்**

## ஒரு இந்திய...

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிக்கு என்றென்றைக்குமாக வைக்கப்பட்ட 'கண்ணிவெடி' என்கிறார்கள் கொழும்பு அரசியல் அவதானிகள்.

1983 கலவரத்தையடுத்து, இந்தியா நோக்கி தமிழ் அகதிகள் ஓடியபோது 'தமிழீழ விடுதலை' இயக்கங்கள் பலவற்றிற்கும் ஆயுதப்பயிற்சியை வழங்க இந்தியா முடிவெடுத்தது. இந்த முடிவின் பிரதான நோக்கம் அப்போது இந்தியாவுடன் முரண்பட்ட இலங்கை அரசை வழிக்கு கொண்டுவருவதாக இருந்ததே அன்றி அன்றைய தமிழ் இயக்கங்களின் 'தமிழீழ விடுதலைக்கு' உதவி செய்யவல்ல என்பது வெளிப்படை. அந்த உண்மையை 1987 ஒப்பந்தத்தின் பின் பெற்ற பாடங்களே பலருக்கு உணரவைத்தது. விடுதலைப் புலிகள் கூட இந்தியாவை தெளிவாக புரிந்து கொண்டது அப்போதுதான் என்றே சொல்ல வேண்டும்.

இப்போது இந்திய அரசாங்கமும், ஆளும் காங்கிரஸ் கட்சியும் தமது சொந்த நெருக்கடியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இன்னொரு நாட்டின் அரசியல் அமைதிக்கு என்றென்றைக்கும் நெருக்கடியைத் தரவல்ல கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இந்தியாவின் இந்த முடிவு வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள் மீது, அவர்களது உரிமைப் போராட்டத்தின் மீதும் அவர்களது ஜனநாயக பூர்வமான எதிர்காலத்துக்கும் எதிராக இந்தியா போட்டுள்ள நிரந்தரமான ஒரு தடை என்பது வெளிப்படை.

இக்கோரிக்கைக்கு இலங்கை அரசாங்கம் காது கொடுக்குமானால், இலங்கையில் ஆகக்குறைந்தது இனிவரும் 25 - 30 ஆண்டுகளுக்கு தொடர்ந்து யுத்தமே நடக்கும் என்ற உண்மையை தரிசிக்க இந்த அரசு தயாராகி விட்டதாகவே கொள்ளப்படவேண்டும்!

இந்தியப் பொறிக்குள் விழுவதில் சந்திரிகா அரசுக்கு ஆசையாக இருந்தால், இந்த நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தை இந்தியாவுக்கு தாரைவார்த்து கொடுத்துவிட்டோம் என்று அறிவித்துவிட வேண்டியது தான்!

## சிங்களத் தலைவர்..

அவ்வாறான குற்றச்சாட்டு ஒன்று உள்ளது தான். ஆனால் உண்மையில் அது ஓர் கயிறு இழுத்தலே ஆகும். இரு சாராரினதும் பிரச்சினை இதுவல்ல. நான் முன்பு சொன்னது போல பேச்சுவார்த்தையின் ஆரம்பமே பிழை.

உண்மையிலும் இந்தப்பிழை மீது எழுப்பிக் கொண்ட வாதப்பிரதிவாதங்களே இவை. பிரபாகரன் சந்திரிகாமீதும், சந்திரிகா பிரபாகரன் மீதும் குற்றம் சுமத்தும் செயல்கள் அர்த்தமற்றவையே என நான் கூறுவேன். இக் குற்றச்சாட்டுக்களும் சில உண்மையாகவோ சில பொய்யாகவோ இருக்கலாம். அவற்றுள் புகுந்து பார்க்க முடியாது. ஆனால் அதுவல்ல உண்மை. தெளிவான தீர்வொன்றுக்கு வரப்போகும் பட்சத்தில் நாங்கள் - இருசாரருமே எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள் பற்றி முன்னுணர்ந்தவர்களாக இருக்கவில்லை.

மிகுதி அடுத்த இதழில்

## உத்தேச...

வாத நடவடிக்கைகள் காரணமாக முஸ்லீம் மக்கள் இரவோடிரவாக தமது தாயகமண்ணில் இருந்து விரட்டப்பட்டாலும் **அகதியாகவுள்ள வடபகுதி முஸ்லீம்கள் நாளை ஒரு தீர்வு நடைமுறைப்படுத்தப்பட்டு, புலிகள் முஸ்லீம்களது பாதுகாப்பிற்கு உணர்வுபூர்வமாக உறுதியளிக்குமிடத்து தமது இழந்த தாயகத்துக்கு மீண்டும் சென்று குடியேறுவதனையே விரும்புவர்.** இந்நிலையில் வடபகுதி முஸ்லீம்கள் வட கிழக்கு சமஷ்டி அலகுக்குள் உள்ளடங்கி - தமது நிர்வாக அலுவல்களைத் தொடர்வதா அல்லது கிழக்கு முஸ்லீம் மாகாண அலகுக்குள் நிர்வாக அலகுகளை இணைப்பதா என்பதனை நிதானமாய் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும்.

வடபகுதி முஸ்லீம்கள் பலவந்தமான முறையில் எந்த நிர்வாக அலகுக்குள்ளும் உள்ளடக்கப்படக்கூடாது. முஸ்லீம்கள் என்பதற்காய் முஸ்லீம் மாகாண சபைக்குள் கட்டுப்படல் வேண்டும் என்று கிழக்கு மாகாண முஸ்லீம்களோ அல்லது முஸ்லீம் காங்கிரசோ வற்புறுத்துவது நியாயமற்றது.

வடபகுதி முஸ்லீம்கள் மிகத்திட்டவட்டமாக கிழக்கு முஸ்லீம்களின் சமூக, கலாசார அணுகுமுறைகளில் இருந்து வித்தியாசமாகியுள்ளனர். இஸ்லாமிய மதம் என்பதற்கு அப்பால் இவ்விரு மாகாண முஸ்லீம்கள் மத்தியில் பாரியளவான ஒற்றுமைப்பண்புகள் கணிசமாக குறைவாகவுள்ளன. ஆயின் வடபகுதி முஸ்லீம்கள் வட கிழக்கு மாகாண சமஷ்டி நிர்வாக அலகுக்குள் உள்ளடங்குவது புத்திசாலித்தனமான நகர்வாகலாம். அதேவேளை வடபகுதி முஸ்லீம்களின் நிறுவனமயமான இணைப்பின்மையினை முன்வைத்து முஸ்லீம் மாகாணசபை சாத்தியமற்றது என்று முன்னெழும் அரசியல் சுலோகங்கள் அடிப்படையிலேயே முஸ்லீம் தேசிய விரோதப் போக்குடையவை என்பதிலும் விழிப்பாகச் செயல்படல் அவசியமாகும்.

முஸ்லீம் மாகாண சபையின் அதிகாரச்சட்டமைப்பு, அதிகாரப்பகிர்வுகள் தொடர்பாக விரிவானமுறையில் ஆழ்ந்து முடிவு எடுக்கப்பட வேண்டியது முக்கியமான விவகாரமாகும். குறிப்பாக முஸ்லீம் மாகாண சபை வட கிழக்கு சமஷ்டியின் அதிகார எல்லைக்குள் கட்டுப்படுவதா, மத்திய அரசாங்க அதிகார எல்லைகளுக்குள் கட்டுப்படுவதா என்பது தொடர்பாக முஸ்லீம் மாகாணசபை சுயாதீனமாக முடிவெடுக்கும் அதிகாரத்தை கொண்டிருக்க வேண்டும். **முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் தமிழ், சிங்களத் தலைமைகள் நம்பிக்கைக்குரிய பாத்திரங்களை கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தவில்லை என்பது மகாஉண்மையானாலும், சகோதர சிறுபான்மை தமிழ் இனத்துடன் ஐக்கியமாக வாழ முயற்சிப்பது நீண்டகால தமிழ், முஸ்லீம் உறவுக்கு சாதகமான ஆரம்பத்தைக் கொடுக்கும்.**

முஸ்லீம்கள் நலன்கள் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் கட்டாயமாக உள்ளடக்கப்படல் வேண்டும். முஸ்லீம் காங்கிரஸ் சந்தர்ப்பவாத தலைமையாக காட்சியளித்தாலும், பதவிகளுக்காய் ஆலாய்ப்பறக்கும் சுயநலத்தலைமைப் பண்பைக் கொண்டமைந்தாலும், மாற்றீடான அரசியல் தலைமை இன்னும் திருப்தியான வெற்றிகளைப் பெறாத காரணத்தால் இக்கட்சியுடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதும், முஸ்லீம்களது அபிலாசைகள் அரைகுறைத்தேவைகளுக்கு அப்பால் முழுமையாக முன்னெடுக்கப்படுவதும் இன்றைய கட்டாய வரலாற்றுத் தேவையாகும்.

இத்தகைய நிலை இம்முறையும் அந்நியமாகுமிடத்து, **ஒவ்வொரு அரசியல் தவறுக்கும் இரத்தத்தால் பதில் கொடுக்க வேண்டிவரும் என்ற மார்க்சிச மூலவர்களின் வார்த்தைகள் தான் உண்மைப்படுத்தப்படும்** என்பதனையும் ஆழ்ந்த சமூகப்பற்றுடன் கூறிக்கொள்வது பொருத்தமானதாகும்.

## காலி...

''திடீர் திடீரென்று இரவில் ஒட்டிவிட்டுப் போய்விடுவார்கள். காணுகிற நேரமெல்லாம் அவற்றை அப்புறப்படுத்தி விடுவோம். யாரையென்று கைது செய்வது?'' என்று அலுத்துக்கொள்கிறார் ஒரு பொலிஸ் அதிகாரி.

காலி நகரின் மொத்த வியாபாரத்தில் தமிழர்களும் சில்லறை வியாபாரத்தில் முஸ்லீம்களும் பலம் வாய்ந்தவர்களாக இருப்பதால் தனிப்பட்ட வியாபா்ர நலன்களின் அடிப்படையில் காலி வன்செயல்களைச் சிலர் தூண்டிவிட்டுள்ளனர் என்று பெயர் குறிப்பிடவிரும்பாத ஒரு அரச உத்தியோகத்தர் கூறுகிறார். ''திம்புலாகல தேரரின் கொலையும் அதன் பின்னால் எழுந்த நிலைமையும் இந்த குழுவினருக்குச் சாதகமாகப் போய்விட்டது'' என்று அவர் மேலும் சொன்னார்.

வன்செயல்கள் இடம்பெற்ற முறைமையைப் பார்க்கிற போது அவருடைய கூற்றுக்குச் சில ஆதாரங்கள் இருந்தாலும் அடிப்படையில் காலி வன்செயல்கள் இனவன்செயல்கள் என்பது மிகவும் தெளிவு.

''நட்டஈடு பெறுவதற்காகத் தமிழ் வர்த்தகர்களும் சில பொலிஸாரும் சேர்ந்து பொருட்களை அப்புறப்படுத்திவிட்டுக் கடைகளை கொளுத்திவிட்டார்கள். பிறகு எங்களைக் குற்றம் சாட்டுகிறார்கள்'' என்று கடைத்தெருவில் ஒருவர் ஆக்ரோஷமாகக் கத்திக் கொண்டிருந்தார். எரிந்த கடைகளை நாங்கள் படம் எடுத்தமை அவருக்குப் பிடிக்கவில்லை. நல்லகாலம். பொலிஸார் படம் எடுக்க அனுமதிதந்து கூடவே பாதுகாப்பாகவும் நின்றபடியால் அவருடைய ஆக்ரோஷம் ஆவியாகப் போயிற்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SARINIHAR
சரிநிகர்

# முன்பிருந்தோம் அந்தக் காலத்திலே....

**பொது சன ஐக்கிய முன்னணி அரசைச் சூழ இடம் பெறும் நிகழ்வுகளைப் பார்க்கிற போது - குறிப்பாக 'அமெரிக்காவின் குரல்' ஒலிபரப்புக்கு எதிரான பிரேரணையை ஆதரித்து வாக்களித்த இடதுசாரிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான ஜனாதிபதியின் உத்தியோகபற்றற்ற 'விசாரணை' - ''முன்பிருந்தோம் அந்தக் காலத்திலே'' என்ற வகையான ஒரு உணர்வு தோன்றுவதைத் தவிர்க்க முடியாமலுள்ளது.**

**1970 - 1975 காலப்பகுதியில் இடதுசாரிகளும் சுதந்திரக் கட்சியும் இணைந்து அரசமைத்ததும் ஆட்சி புரிந்ததும் உடைந்து போனதும் நினைவில் எழுகின்றது. ''தேசிய ஒருமைப்பாடு'', ''ஐக்கிய முன்னணி'', ''கூட்டரசியல்'' (Coalition politics) ஆகிய சுலோகங்களின் கீழ், மேலிருந்து ஐக்கியமும் ஒருமைப்பாடும் கீழ்நோக்கிச் செலுத்தப்பட்டன.**

**இலங்கை இடதுசாரி அரசியல் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களுள் ஒன்றாக அது ஆகிப்போயிற்று.**

**சோசலிசத்தின் பெயரால் மக்களின் அரசியல் ஜனநாயக உரிமைகளை பிடுங்கியது அன்றைய அரசாங்கம்.**

**இவற்றையெல்லாம் கூட நின்று அரங்கேற்றிய இடதுசாரிகள் 1975ல் அரசாங்கத்திலிருந்து எட்டி உதைத்து விரட்டப்பட்டார்கள்!**

**ஜனநாயகத்தினதும் சமாதானத்தினதும் பெயரால் இன்றைய அரசாங்கம் எடுக்கும் 'எல்லா' நடவடிக்கைகளுக்கும் அன்றையைப் போலவே இன்றைக்கும் கையுயர்த்தப் போகிறார்களா என்பதே கேள்வி.**

**இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவும் இன்றைய யுத்தம் தொடர்பாகவும் தென் இலங்கை இடதுசாரிகளின் பார்வையும் முடிவுகளும் எப்படியிருக்கப் போகின்றன என்பதில்தான் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் அவர்களுடைய எதிர்காலமும் இலங்கை அரசியலில் அவர்களுடைய எதிர்காலமும் தங்கியிருக்கிறது.**

**உண்மை. வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான தமது முற்போக்கான நிலைப்பாட்டை ஒரு போதுமே சமரசம் செய்து கொள்ளவில்லை. ஆனால் அவரதும் அவரைப் போன்றவர்களினதும் அரசியல் கருத்துக்களுக்கும் வேலைத் திட்டங்களுக்கும் அரசமைப்புக்குள் எவ்வளவு இடம் இருக்கிறது?**

**நீண்ட காலமாகவே வாசுதேவ, சிறுபான்மைத் தேசியங்களுக்கு ஒரு நம்பிக்கை ஒளியாக இருந்து வந்திருக்கிறார். எனினும் நம்பிக்கை ஒளியை மட்டுமே சாப்பிட்டு உயிர் வாழ்வதற்கு இச்சிறுபான்மைத் தேசியங்கள் சாதகப்பறவைகள் அல்ல.**

**அரசியல் தீர்வு தொடர்பாகப் பொ.ஐ.மு. அரசிலிருந்து வெளியாகிற தகவல்களைப் பார்க்கிற போது வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிவிட்டது என்றுதான் சொல்லத்தோன்றுகிறது.**

**''புலிகளின் பிரச்சினைக்கு யுத்தமும், தமிழ், முஸ்லீம் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வும்'' காண்போம் என்கின்ற இரட்டை நிலை அணுகுமுறையைத்தான் இடதுசாரிகளும் ஏற்றுக்கொள்வார்கள் என்றால் இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றில் மேலுமொரு கறை படிவதைத் தவிர்க்க முடியாது.**

**இப்போதுள்ள யதார்த்தம் என்னவெனின் யுத்தத்திலும் எவரும் வெல்ல முடியாது; அரசியல் தீர்வையும் அரசு முன்வைக்கப் போவதில்லை என்பதே.**

**இந்தச் சூழ்நிலையில் தென்னிலங்கை இடதுசாரிகள் யுத்தத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பது மட்டுமல்ல சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வை முன்வைக்கும்படி அரசை நிர்ப்பந்திப்பதையே பிரதானமான பணியாக்க வேண்டும்.**

**வடபுலத்தில் இடதுசாரிகளுக்கு மட்டுமல்ல எந்த மாற்றுக் கருத்துக்குமே குரல் கிடையாது என்பது எல்லோரும் அறிந்ததே. அங்குள்ளவர்களுக்கு குரல் வாய்க்கப் பெறுவதும், அங்குள்ள சமூகத்துக்கு ஜனநாயக வழிப்பாடும் வெளிப்பாடும் கிடைப்பது என்பதும் தென்னிலங்கையில் தீவிர இடதுசாரி அரசியலின் முற்போக்கான, மக்கள் மட்டத்திலான நடவடிக்கைகளிலும் தங்கியுள்ளது. பொ.ஐ.மு. அரசின் ஒத்தோடிகளாக இருந்து கொண்டு இத்தகைய தீவிர இடதுசாரி அரசியலைச் செய்வது என்பது சாத்தியமில்லை. இப்படிச் சொல்லும் போது பழையபடி வரலாற்றுக்குத் திரும்பிப்போக வேண்டி இருக்கிறது.**

**கண்மூடித்தனமாக வரலாற்றுக்குத் திரும்பிப் போவது என்பதும் வரலாற்றையும் புவியியலையும் தெரிந்து கொண்டே பிழையாகப் புரிந்து கொள்வது என்பதும் தேசியவாதங்களுக்கும் வைதீக சோஷலிஸவாதத்துக்கும் பொதுவானது.**

**நாங்கள் சொல்வது வரலாற்றுக்குத் திரும்பிப் போவதையல்ல; வரலாற்றிருந்து பாடங்களையாவது கற்றுக் கொள்ள முடியாதா?**

# காலி '95
## எரிந்து கொண்டிருக்கும் நேரம்..

சுப்புக்குட்டி

ஆக்கிரமிக்கப்பட்ட சிறுநகரம் என்பதாகத் தோற்றம் காட்டியது காலி. படையினரும் பொலிஸாரும் கடைவீதி எங்கும் சனத்தோடு சனமாகத் திரிகிறார்கள். எரிக்கப்பட்ட கடைகள் சில இன்னும் புகைந்து கொண்டுள்ளன. காலிக் காற்றிலும் ஒரு பீதியுடன் கூறிய இறுக்கம்.

''இரண்டாம் திகதி இரவு ஏழு மணிக்கே கடையைப் பூட்டி விட்டோம். திம்புலாகல தேரரின் இறுதிச்சடங்குகள் நடைபெறும் நாளன்று தமிழர்கள் மீது தாக்குதல் நடைபெறும் என்ற வதந்தி மூன்று நாட்களாகவே இருந்தது. பல தடவைகள் பொலிசுக்குச் சொல்லியும் கிடைத்த பதில் ''ஒண்டும் செய்ய ஏலாது'' ஆற்றாமையுடன் சொல்கிறார் வர்த்தகர் செ.வ.

என்று சத்தம் போட்டார்கள். வீட்டுக் கூரையில் தப்பி ஏறமுயன்ற என் கணவர் ராஜாவை இழுத்துக் கீழே விழுத்திவிட்டு அலவாங்கால் குத்தினார்கள். என்னுடைய ஐந்து வயதுக் குழந்தை விமலேசைத் தூக்கி வீசினார்கள்''

ஜிஃரியா ஒழுங்கையில் வசித்து வந்த சந்திராதேவி தர்மராஜாவின் வாக்குமூலம் இது.

பலத்த காயங்களுடன் கராப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் தர்மராஜா.

பிரசாத் வர்த்தக நிலைய உரிமையாளர் வரதராஜா சொல்கிறார்: ''இரண்டாம் திகதி நான்கு மணியளவில் சிங்கள நண்பர்கள் வந்து நிலைமை மோசம் என்று எச்சரித்தார்கள். நான் பொலிஸ் நிலையம் சென்று

செய்திருப்பதாக அரசு அறிவித்திருந்தாலும், ''கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே எரிகிற கடைகளில் இருப்பதைப் பொறுக்கிய சில்லறைக் கில்லாடிகள்தான். முக்கியமான ஒருவரையும் கைது செய்யவில்லை'' என்று சொல்கிறார் பொலிஸ் அத்தியட்சகர்.

அகதிகளுக்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டுவிட்டதாக அரச உத்தியோகத்தர்கள் தெரிவிக்கிறபோதும் ஆறாம் திகதிவரை ஆக 50 கிலோ அரிசி மட்டும்தான் கிட்டத்தட்ட 500 பேர் கொண்ட அகதிமுகாம்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ''எங்களுடைய சொந்தப் பணத்திலேயே எல்லாவற்றையும் செய்ய வேண்டியுள்ளது'' என்று முறையிடுகிறார் வயோதிபர் ஒருவர்.




'' உண்மைதான். நிலைமையைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் தலத்துக்குச் செல்லத் தாமதமாயிற்றுதான்'' என்று ஒப்புக்கொள்கிறார் ஆளுநர் நெவில் கனகரத்ன. எண்பது வருடங்களுக்குப் பிறகு ஜுன் மாதம் இரண்டாம் திகதி இரவு காலியில் இன்னுமொரு கலவரம் நிகழ்ந்தேறிற்று. தமிழர்களுக்குச் சொந்தமான பதினேழு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. கூடவே முஸ்லீம்களுக்குச் சொந்தமான மூன்று கடைகளும், சிங்களவர்களுக்குச் சொந்தமான நான்கு கடைகளும் எரிந்து போயின.

இரவு எட்டு மணியிலிருந்து கொள்ளையடிப்பும், கொளுத்துதலும் இடம் பெற்றுள்ளன என்று பாதிக்கப்பட்வர்கள் தெரிவிக்கிறார்கள். ''அரைமணித்தியாலத்தில் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டோம். எனினும் எல்லாக் கடைகளுக்கும் ஒரே நேரத்தில் தீ வைக்கப்பட்டமையால் தீயை அணைப்பது சிரமமாகப்போய் விட்டது'' என்கிறார் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்.

இதே இரவில் காலி கோட்டைப்பகுதியிலுள்ள தமிழ் வீடொன்றுக்குப் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. நகரிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாக இருக்கும் தலாப்பிட்டியவில் சில தமிழ் வீடுகளில் உடைமைகள் தீயிலிடப்பட்டுள்ளன. அப்துல் வகாப் வீதியில் தாக்கப்பட்ட மூன்று வீடுகளைக் காண முடிந்தது.

''இரண்டாம் தேதி இரவு ஐம்பது அறுபது பேர் ''ராஜா எங்கே?'' என்று கத்திக் கொண்டு எங்களுடைய வீட்டுக்கு வந்து வீட்டுக் கண்ணாடியை அடித்து நொருக்கினார்கள். அலுமாரியிலிருந்த உடுப்புக்கள் பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்து வெளியில் வைத்துத் தீ மூட்டினார்கள். நாங்கள் பக்கத்து முஸ்லீம் வீட்டுக்குள் ஒளித்து விட்டோம். ஏழெட்டுப்பேர் அங்கேயும் வந்து ''ராஜாவை வெளியே அனுப்பு; இல்லாவிட்டால் வீட்டைக் கொளுத்துவோம்''

முறைப்பாடு செய்தேன். ஐந்தரை மணியளவில் கடையைப் பூட்டிவிட்டோம். எங்களுடைய கடைக்குள் ஊழியர் ஒருவரைக் கட்டி வைத்து எரிக்க முயற்சி செய்வதாகத் தகவல் கிடைத்தது. உடனடியாகவே மறுபடியும் பொலிசுக்குச் சென்றேன். நல்லகாலம் ஊழியர் தப்பிவிட்டார்; அவருடைய அடையாள அட்டைதான் தப்ப முடியவில்லை.''

காலி சிவன் கோவிலிலும், கிட்டங்கி கதிரேசன் கோவிலிலும் 95 குடும்பங்களைச் சேர்ந்த 450 பேர் அகதிகளாகத் தங்கியுள்ளார்கள். காலித்தமிழ் வர்த்தகர்களுள் பெரும்பாலானோர் இங்குதான். தமிழர்களுக்குச் சொந்தமான பலசரக்குக் கடைகளும், சிறு கடைகளும் தீயிலிடப்பட்டாலும் எந்த நகைக்கடையுமே தீயிலிடப்படாதது குறிப்பிடத்தக்கது. பொலிஸார் நகைக்கடைகள் இருந்த பகுதிக்குப் பாதுகாப்பு வழங்கினார்கள் என்று தெரிவிக்கப்பட்டாலும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

காலிச் சம்பவங்கள் தொடர்பாக இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் சார்ள்ஸ் வன்னியாராச்சியைச் சந்திக்க முடிந்தது. ''சம்பவதினம் நான் கடமையிலேயே இருக்கவில்லை. ஏன என்னை இடம்மாற்றினார்கள் என்று தெரியவில்லை'' என்கிறார் அவர்.

ஐ.தே.க ஆட்சியின் போது தென்மாகாண சபை விவகாரங்கள் தொடர்பாக எழுந்த பிரச்சினைகளின் போது தொடர்புபட்டிருந்தார்கள் என்ற காரணத்திற்காகவே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பெயர் குறிப்பிட விரும்பாத பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் தமிழ் வர்த்தகர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தார்கள். அவர்கள் நல்லவர்கள்'' என்று சொல்கிறார் கோவில் தர்மகர்த்தாக்களில் ஒருவர்.

சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் எனக்கருதப்படும் பதினொரு பேரைக் கைது

மிகவும் திட்டமிடப்பட்ட வகையிலேயே காலியில் வன்செயல்கள் இடம் பெற்றுள்ளன. கடைகளுக்குத் தீயிட்ட குழுவினர் தமிழ்க்கடைகளைத் தெரிந்து தீயிட்டது மட்டுமன்றி ஓரிரு கடைச் சொந்தக்காரர்களின் வீடுகளுக்கும் சென்று உடைமைகளை நாசமாக்கியுள்ளனர். இவ்வாறு உடைமைகளை இழந்தவர்களுள் ஆனந்தா ஸ்டோர்ஸ் உரிமையாளரும் ஒருவர்.

வன்செயல்களில் ஈடுபட்ட குழுவில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இரண்டினதும் கீழ்மட்ட உறுப்பினர்கள் இருந்தார்கள் என்று சொல்கிறார் வர்த்தகர் ஒருவர்.

''எங்களுடைய இரண்டு கடைகளையும் கொளுத்தியவர்களுள் ரஞ்சித் என்பவரும் ஒருவர். சம்பவம் நடந்த பிற்பாடு எங்களிடம் வாக்கு மூலம் பெற வந்த பொலிஸாரிடம் ரஞ்சித்தைப் பற்றிச் சொன்னோம். இன்று காலை வரை அவர் கைது செய்யப்படவில்லை. மாறாக கடைவீதியில் சாதாரணமாக அவர் திரிகிறார்'' இது இன்னொரு வர்த்தகரின் குற்றச்சாட்டு.

''திம்புலாகல தேரரின் நினைவாகக் காவி வண்ணக்கொடிகளைத் தொங்கவிடும்படி எல்லாக் கடைக்காரர்களையும் கேட்டிருந்தார்கள். தமிழ்க் கடைக்காரர்கள் கொடி கட்டாதபடியால்தான் இந்த அனர்த்தம் வந்தது என்றும் ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது'' என்றார் சிங்கள ஊழியர் ஒருவர்.

இரண்டாம் திகதிக்கு முன்பாகவே தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் காலி நகரின் சில இடங்களில் ஒட்டப்பட்டன. தேசப்பிரேமி சங்விதானய என்ற பெயரில் ஒட்டப்பட்டிருந்த சில சுவரொட்டிகளில் ஒவ்வொரு அங்கத்தவரும் ஒரு தமிழனைக் கொல்ல வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டிருந்ததாக அகதிமுகாமில் தங்கியிருப்பவர்கள் தெரிவிக்கிறார்கள்.

→15


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்